# இலங்கையின் ஊழலிற்கு எதிரான தேசிய செயற்பாட்டுத் திட்டம்



2025-2029



# "நேர்மையான இலங்கை"

**இலங்கையின் ஊழலிற்கு எதிரான தேசிய செயற்பாட்டுத் திட்டம்**

**2025–2029**

ஊழலுக்கு எதிரான தேசிய செயற்பாட்டுத்திட்டம் 2025-2029க்கு
இலக்கம் 25/0482/801/008 மற்றும் 24.03.2025 திகதியிட்ட
அமைச்சரவை தீர்மானங்களின்படி, அமைச்சரவை அங்கீகாரம்
வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஊழலிற்கு எதிரான தேசிய செயற்பாட்டுத்திட்டம் 2025-2029 இனுள்
நிகழ்நிலையில் பிரவேசிக்க பின்வரும் QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்

ISBN 978-624-5040-23-0

வெளியீடு:

இலங்கை ஜனநாயக சோசலிஸ குடியரசு
இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு,

இல. 36, மலலசேகர மாவத்தை,
கொழும்பு 07, இலங்கை
தொலைபேசி: +94 112 596360 / 1954
கையடக்க தொலைபேசி : +94 767011954
மின்னஞ்சல்: ciaboc_gen@ciaboc.gov.lk

# நேர்மையான இலங்கை

## இலங்கையின் ஊழலிற்கு எதிரான தேசிய செயற்பாட்டுத் திட்டம்

## 2025-2029

www.ciaboc.gov.lk

---

අල්ලස් හෝ දූෂණ චෝදනා විමර්ශන කොමිෂන් සභාව
இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு
COMMISSION TO INVESTIGATE ALLEGATIONS OF BRIBERY OR CORRUPTION

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| **இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் ஜனாதிபதி அவர்களின் வாழ்த்துச்செய்தி** | | **09** |
| **இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் செய்தி** | | **11** |
| **தூரநோக்கு** | | **15** |
| **முகவுரை** | | **17** |
| **01.** | **அறிமுகம் மற்றும் பின்னணி** | **19** |
| **02.** | **இலங்கையின் ஊழலிற்கு எதிரான தேசிய செயற்பாட்டுத்திட்டச் செயன்முறை 2025–2029** | **21** |
| | a. உள்ளடக்க செயன்முறை மற்றும் உரிமைத்துவம் | 21 |
| | b. முறையியல் | 21 |
| **03.** | **இலங்கையில் ஊழல் நிலைமை** | **27** |
| | a. துறை ரீதியான பாதிப்புகள் | 27 |
| | b. ஊழலின் தன்மையும், காரணிகளும், தாக்கங்களும் | 31 |
| | c. ஊழலைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் | 34 |
| **04.** | **இலங்கையில் இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிப்பதற்கான தேசிய செயற்பாட்டுத்திட்டம் 2019–2023 இன் அணுகுமுறை.** | **37** |
| | a. செயலாக்கநிலை | 37 |
| | b. பிரதானமான பிரச்சினைகளும் சவால்களும் | 38 |
| **05.** | **நிகழ்வுகளின் நிழல்கள் ‘SNAPSHOT’** | **41** |
| **06.** | **செயற்றிட்டம் – மூலோபாய முன்னுரிமை பகுதிகள்** | **45** |
| | a. தடுப்பு நடவடிக்கைகள் | 51 |
| | b. கல்வி மற்றும் சமூக ஈடுபாடு | 79 |
| | c. நிறுவன ரீதியான வலுப்படுத்தல் மற்றும் அமுலாக்கல் | 99 |
| | d. சட்டம் மற்றும் கொள்கைச் சீர்த்திருத்தம் | 113 |
| **07.** | **ஊழலிற்கு எதிரான தேசிய செயற்பாட்டுத் திட்டத்தின் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு** | **121** |
| | a. கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டின் நோக்கங்கள் | 121 |
| | b. கண்காணிப்பு அமைப்பு மற்றும் குழு | 122 |
| | c. குறிக்காட்டிகள் மற்றும் அறிக்கையிடல் | 123 |
| | d. செயற்படுத்தலுக்குப் பின்னரான கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு | 123 |
| **08.** | **நன்றியுரை** | **129** |

# இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் ஜனாதிபதி அவர்களின் வாழ்த்துச்செய்தி

இலங்கை சமூகம் முழுவதும் பரவியுள்ள இலஞ்சம் மற்றும் ஊழலை ஒழிப்பதற்கும், ஊழல் குறிகாட்டிகளில் நமது நாட்டின் மோசமான தரநிலையினால் எமது நாடு இழந்துள்ள பொருளாதார வாய்ப்புகளை மீண்டும் உருவாக்குவதற்கும் நமது அரசாங்கம் முன்னெடுக்கும் பணிக்கான வலுவான அணுகுமுறையாக, ஊழலுக்கு எதிரான தேசிய செயற்பாட்டுத் திட்டம் 2025-2029 வெளியிடப்படுவது தொடர்பில் வாழ்த்துச் செய்தியொன்றை வெளியிடுவது மிகுந்த மகிழ்ச்சிக்குறியதாகும்.

சுதந்திரம் அடைந்து ஏழு தசாப்தங்கள் கடந்துள்ள போதும், நமது நாடு அபிவிருத்தியடைந்த நாடாக மாறத் தவறிவிட்டது. வலுவான உற்பத்திப் பொருளாதாரத்துடன் கூடிய முன்னேற்றகரமான, நவீன இலங்கை அரசைக் கட்டியெழுப்பும் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ள நமது அரசாங்கம், நாட்டில் உள்ள ஊழலின் மூலங்களைக் கண்டறிந்து அவற்றை ஒழிக்கும் பெரும் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ளது. அனைவருக்கும் நியாயமானதும் சமமானதுமான நீதிக் கட்டமைப்பை நிறுவவும், சுயாதீனமாகவும் திறமையாகவும் நீதியை நிலைநாட்டுவதற்கும் அந்த சட்டச் செயல்பாட்டில் பொதுமக்களின் நம்பிக்கையை உறுதி செய்வதற்கும் சட்டத்தின் ஆட்சியை நிறுவுவது மிக முக்கியமானது. இந்த நோக்கத்திற்காக வலுவான ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வரும் அதே வேளையில், ஊழலை எதிர்த்துப் போராடுவதில் முன்னோடி நிறுவனமான இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் அடையப்பட்ட செயல்திறன், இலஞ்சம் மற்றும் ஊழலை ஒழிப்பதில் அரசாங்கத்தால் எதிர்பார்க்கப்படும் செயல்திறனுடன் இணைந்து காணப்படுகிறது.

“அழகான தீவு, மகிழ்ச்சி நிறைந்த மக்கள்” என்ற தொலைநோக்குடன் அரசாங்கத்தால் செயல்படுத்தப்படும் “Clean Sri Lanka” திட்டத்தின் “நெறிமுறையான குறிக்கோள்களை” வெளிப்படைத்தன்மை, பொறுப்பு மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றின் அடிப்படையில் முன்னெடுப்பதற்காக பிரஜைகளின் நெறிமுறைகளை மேம்படுத்துவதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும். இந்த நோக்கங்களை அடைவதற்கு, தேசிய ஊழல் எதிர்ப்பு செயற்றிட்டத்தின் நான்கு பிரதான மூலோபாயங்களை திறம்பட செயல்படுத்துவது முக்கியமானது. இந்த நடவடிக்கைகளுக்கான பொறுப்பு, தொடர்புள்ள அமைச்சுகள் முதல் பிரதேசமட்ட நிறுவன மட்டம் வரை பரந்து காணப்படுகிறது. செயல் திட்டத்தின் பிரதான பணிகளை செயல்படுத்துதல், கண்காணித்தல் மற்றும் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல் தொடர்பான பொறுப்பு இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினை சாரும். இந்தப் பாரதூரமான பொறுப்பை தளராது நிறைவேற்றுவதில் ஊழலுக்கு எதிரான தேசிய செயற்பாட்டுத் திட்டத்தின் வெற்றி தங்கியுள்ளது. எனவே, இந்த நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான ஏனைய நிறுவனங்களும் தங்கள் பொறுப்புகளை நிறைவேற்றுவது அவசியம்.

இந்தத் திட்டத்தைத் தயாரிப்பதில் ஆரம்பம் முதல் இன்றுவரை செயற்பட்ட அனைத்து அதிகாரிகளுக்கும், தங்கள் ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகளை வழங்கிய அனைவருக்கும், இந்த முயற்சிக்கு ஒத்துழைத்த வெளிநாட்டு நிறுவனங்கள் மற்றும் அவற்றின் அதிகாரிகளுக்கும் நான் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். இந்த தேசிய செயற்பாட்டுத்திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்துவதன் மூலம், அடுத்த சில ஆண்டுகளில் ஊழல் மற்றும் இலஞ்ச ஒழிப்பு குறிகாட்டிகளின் அடிப்படையில் உலக நாடுகளிடையே சாதகமான நிலையை அடைவதே எம் அனைவரினதும் எதிர்பார்ப்பாக இருக்க வேண்டும். தொலைதூர கிராமங்களில் மிகவும் கஷ்டமான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டு, தாங்கள் சம்பாதிக்கும் சொற்ப வருமானத்தில் கூட அரசின் வருவாய்க்கு பங்களிக்கும் இலட்சக்கணக்கான மக்களுக்கும் இந்த முயற்சியின் பலனைப் பெற்றுக்கொடுப்பது இங்கு இறுதி அபிலாசையாக இருக்க வேண்டும்.



**அநுர குமார திசாநாயக்க**
ஜனாதிபதி
இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு
28-03-2025

# இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் செய்தி

பொருளாதார வளர்ச்சி, சமூக முன்னேற்றம் மற்றும் அரசியல் சீர்திருத்தம் முதலானவற்றிற்கான தீர்மானமிக்க அடித்தளமாக அமைவது ஊழலை இல்லாதொழிப்பதாகும். நிர்வாக சீர்திருத்தம் மற்றும் ஊழலைத் தடுப்பது அரசாங்கத்தின் முன்னுரிமை முயற்சியாக அமைவதுடன் பொருளாதார உறுதிப்பாடு, பொறுப்புக்கூறல் மற்றும் அரசாங்கத்தின் மீதான பொதுமக்களின் நம்பிக்கையை மீளக்கட்டியெழுப்புவதற்கான வழிமுறையாக இலங்கை சமூகத்தின் அனைத்து துறைகளிலும் இலஞ்சம் மற்றும் ஊழலை எதிர்த்துப் போராடுவதற்காக அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது. இலஞ்சம் மற்றும் ஊழலைத் தடுப்பதற்கு இலங்கையில் பல சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகள் காணப்பட்ட போதிலும் அவை பயனுள்ளதாக இருக்க, அனைத்து அரச நிறுவனங்களிலும் இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான செயற்பாடுகளை முன்னெடுக்க தேசிய ரீதியிலான கட்டமைப்பொன்று இருப்பது மிகவும் அவசியமாகும்.

இலங்கையில் நிலவப்பெறும் இலஞ்சம் மற்றும் ஊழலிற்கு எதிராக செயற்படும் முதன்மை பொறுப்பு இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளது. அதில் இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பொறுப்புக்களும் பணிகளும் 2023ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் மூலம் மேம்படுத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான குற்றங்களை புலனாய்வு செய்தல், வழக்குத்தொடுத்தலுடன், இலங்கையில் இருந்து இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிப்பதற்கான ஊழல் எதிர்ப்புக் கொள்கைகளை உருவாக்குதல் மற்றும் கண்காணித்தல் வரையான ஆணைக்குழுவின் பணிகள் விரிவாக்கப்பட்டுள்ளன.

மேலும், அரசாங்கத்தின் “தூய்மையான இலங்கை” (Clean Sri Lanka) திட்டத்தின் கீழ் இலங்கை சமூகத்தை பொருளாதார, சமூக மற்றும் நிர்வாக ரீதியில் நிலைத்திருக்கும் வகையில் உயர் மட்டத்திற்கு இட்டுச் செல்ல முயல்வதால், அனைத்துத் துறைகளிலும் நடைமுறைப்படுத்தக் கூடிய வலுவான தேசிய ஊழல் எதிர்ப்புக் கொள்கையை உருவாக்கி நடைமுறைப்படுத்துவது இன்றியமையாததாகும்.

ஊழலிற்கு எதிரான ஐக்கிய நாடுகளின் சமவாயத்தின் 5ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள கடப்பாடுகளின் படி 2019-2023 காலப்பகுதிக்கென தயாரிக்கப்பட்ட தேசிய ஊழல் எதிர்ப்பு கட்டமைப்பைத் தயாரித்து நடைமுறைப்படுத்துவதற்கான கடப்பாட்டை பூர்த்தி செய்ய வேண்டிய தரப்பு என்ற அடிப்படையிலான பொறுப்புடைமை, நாட்டின் பொருளாதார இலக்குகளை அடைவதற்காக சர்வதேச நாணய நிதியத்தால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள், 2030 நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைதல் மற்றும் விஷேடமாக நிலையான அபிவிருத்தி இலக்குகளை எய்துவதற்காக ஊழலை இல்லாதொழிப்பதற்கான பிரிவு 16(5) இலக்கினை அண்மித்தலுடன் இலங்கைக்கான பொருளாதார நலனை வழங்குவதற்கான அங்கமாக தேசிய ஊழல் எதிர்ப்புக் கொள்கைகளுக்கு இணங்குவதைக் கண்காணிக்கும் ஐரோப்பிய ஒன்றியம் முதலான சர்வதேச பங்குதாரர்களின் தேவைப்பாடுகளும் இதில் உள்ளடங்கும்.

ஊழலிற்க்கு எதிரான ஐக்கிய நாடுகளின் சமவாயத்தின் 5வது பிரிவின் கீழ் உள்ள கடப்பாடுகளுக்கு அமைவாக இலங்கையிலிருந்து இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிப்பதற்காக தயாரிக்கப்பட்ட தேசிய செயற்பாட்டுத் திட்டம் 2019-2023 உடன் நிறைவடைந்த நிலையில் அத்திட்டத்தின் அடைவுகள், மற்றும் கலந்துரையாடல்களில் கற்றுக் கொண்ட விடயங்கள் தற்போது மீளாய்வு செய்யப்பட்டுள்ளதுடன், 2025 ஆம் ஆண்டிலிருந்து இலங்கையின் ஊழல் எதிர்ப்பு முயற்சிகளின் செயற்றிறன் மேம்படுத்தும் நோக்கில் தேசிய மற்றும் சர்வதேச பங்குதாரர்களின் பங்களிப்புடன் 2025-2029 ஆம் ஆண்டிற்கான புதிய ஊழலிற்கு எதிரான தேசிய செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

ஊழலிற்கு எதிரான தேசிய செயற்பாட்டுத்திட்டம் 2025-2029 ஆனது ஊழல் தடுப்பு நிவாரணக் கல்வியும் மக்கள் பங்கேற்பும், ஊழல் எதிர்ப்பு நிறுவனங்களை பலப்படுத்தல், மற்றும் சட்டத்தை நிலைநாட்டல், சட்டம் மற்றும் கொள்கை சீர்திருத்தம் உள்ளிட்ட நான்கு முக்கிய உபாயங்களின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. அதனை எமது நாட்டில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சுக்கள், திணைக்களங்கள், பொதுத்துறை, தனியார் துறை, சிவில் சமூகம் மற்றும் ஏனைய அனைத்துத் துறைகள் உட்பட அனைத்துப் பிரஜைகளினதும் ஒத்துழைப்பு அவசியமாகும்.

அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்ட ஊழலிற்கு எதிரான தேசிய செயற்பாட்டுத் திட்டத்தை செயற்படுத்துவதன் மூலம், ஊழலிற்க்கு எதிராகப் போராடும், ஊழலை நிராகரிக்கும் மக்கள் குழுவை, ஊழலிற்க்கு எதிரான போராட்டத்தை அனைத்து வழிகளிலும் ஆதரிக்கும் அரசியல் அபிலாசையை, சட்டத்தை செயற்படுத்த தேவையான அனைத்து பின்னணியையும், அனைத்து துறைகளிலும் நேர்மையை உருவாக்கும் நேர்மையான அரச சேவையையும் உருவாக்கவும் எதிர்கால சந்ததியினரின் மதிப்புக்கு பாத்திரமான ஒரு நாட்டை கட்டியெழுப்ப உங்கள் அனைவரினதும் ஒத்துழைப்பும் கிடைக்கப்பெறும் என்று எதிர்பார்க்கின்றோம்.

**நீதிபதி டப்ளிவ். எம். என். பீ. இத்தவெல,** தலைவர்
**கே.பி. ராஜபக்ஷ,** ஆணையாளர்
**ஜனாதிபதி சட்டத்தரணி சேத்திய குணசேகர,** ஆணையாளர்
இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சார்த்துதல்களைப்
புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு

## சுருக்கக் குறியீடுகளும் விளக்கமும்

| | |
|---|---|
| AD | சொத்துக்கள் வெளிப்படுத்தல் |
| BOI | முதலீட்டுச் சபை |
| CIABOC | இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு |
| CID | குற்றப் புலனாய்வுத் துறை |
| CIDA | கட்டுமானத் தொழில் மேம்பாட்டு அதிகாரசபை |
| COPA | பொதுக் கணக்குகள் தொடர்பான குழு |
| COPE | பொது நிறுவனங்கள் மீதான குழு |
| CSR | பெருநிறுவன சமூகப் பொறுப்பு |
| CPI | ஊழல் கருத்துச் சுட்டெண் |
| CSO | சிவில் சமூக அமைப்பு |
| DG | பணிப்பாளர் நாயகம் |
| EFC | இலங்கை ஊழியர்கள் சம்மேளனம் |
| FIU | நிதிப்புலனாய்வுப் பிரிவு |
| FCID | நிதிக்குற்றப் புலனாய்வுப் பிரிவு |
| GOSL | இலங்கை அரசாங்கம் |
| GSP+ | முன்னுரிமைக்கான பொதுமைபடுத்தப்பட்ட முறைமை |
| ICT | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் |
| ICTA | இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனம் |
| LG | உள்ளூராட்சி நிறுவனங்கள் |
| MOU | புரிந்துணர்வு உடன்படிக்கை |
| NAO | தேசிய கணக்காய்வு அலுவலகம் |
| OECD | பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திக்கான அமைப்பு |
| OGP | திறந்த அரசாங்க கூட்டமைப்பு |
| PA | பகிரங்க அறிவித்தல்கள் |
| PSC | அரசாங்க சேவைகள் ஆணைக்குழு |
| MOFA | வெளிவிவகார அமைச்சு |
| MoPA | பொது நிர்வாக அமைச்சு |
| MOLG&PC | உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு |
| NAP | தேசிய செயற்பாட்டுத்திட்டம் |
| NIS | தேசிய நேர்மை கற்கை 2014 |
| PEFA | பொதுச் செலவீனம் மற்றும் நிதிப் பொறுப்புடைமை |
| POCA | குற்றவியல் சட்ட நடைமுறைகள் |
| SLIDA | இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனம் |
| SLILG | இலங்கை உள்ளூராட்சி நிர்வாக நிறுவனம் |
| SDG | நிலையான அபிவிருத்தி இலக்குகள் |
| SEC | பங்கு பரிவர்த்தனை ஆணைக்குழு |
| SOP | நிலையான செயற்பாட்டு நடைமுறை |
| StAR | சொத்துக்களை மீட்டல் தொடர்பான விசேட செயலணி |
| STAR | சொத்துக்களை மீட்டல் தொடர்பான ஜனாதிபதி செயலணி |
| TEC | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு |
| TOR | குறிப்பு விதிமுறைகள் |
| RTI | தகவல் அறியும் உரிமைச் சட்டம் |
| UNDP | ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டம் |
| UNODC | போதைப்பொருட்கள் மற்றும் குற்றங்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் அலுவலகம் |
| UNCAC | ஐக்கிய நாடுகள் தாபனத்தின் ஊழலுக்கு எதிரான சமவாயம் |

# தூரநோக்கு

**“நேர்மையான அபிமானத்திற்குரிய வருங்கால சந்ததியினர்களை உருவாக்குவதன் மூலம் இலங்கையை உலகின் முன்மாதிரியான தேசமாக மாற்றுவதே எமது உன்னதமான எதிர்பார்ப்பும் தூரநோக்குமாகும்.”**



## முகவுரை

**"நேர்மை, வெளிப்படைத்தன்மை மற்றும் ஊழலுக்கு எதிரான போராட்டம் ஆகியவை கலாச்சாரத்தின் ஒரு பகுதியாக இருத்தல் வேண்டும். அவை அடிப்படை விழுமியங்களாக போதிக்கப்படல் வேண்டும்",**

**ஏஞ்சல் குரியா, பொதுச் செயலாளர்,**

பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்தி அமைப்பு (OECD)

வரலாற்றில் முன்னேறிய நாகரீகமும், கலாச்சாரமும் நிறைந்திருந்த இலங்கைத் தேசம் இன்றைய நிலையை அடைந்தமைக்கான காரணங்களைச் சுட்டிக் காட்ட வேண்டியதில்லை. அந்த காரணங்களில் இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு பிராதாக பங்குண்டு. சுதந்திரத்திற்குப் பின்னர் இலஞ்சம் மற்றும் ஊழலும் இலங்கைச் சமூகத்தில் மிகவும் பரவலாகி, சமூகத்தின் ஒரு அங்கமாகக் கருதப்படும் அளவிற்கு சர்வ சாதாரணமாகி விட்டது. அதன்படி, இலங்கையின் பண்டைய சமூகம் கொண்டிருந்த விழுமியங்களை கேலி செய்வதன் மூலம் இலஞ்ச ஊழல் வெளிப்பட்டது என்பதை வரலாற்று ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றது. உலகின் முன்னேறிய நாடுகள் சுபீட்சம், வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல், ஊழல் எதிர்ப்பு ஆகியவற்றை சமூகத்தின் அடிப்படை விழுமியங்களாக ஏற்றுக்கொள்வதற்கு முன்னரே, வளர்ச்சியடைந்த கலாசாரத்தைக் கொண்டிருந்த இலங்கை, அந்த விழுமியங்களையே முதன்மையாகக் கருதியது என்பதுவும் வரலாற்று ஆய்வுகளில் தெளிவாகிறது. அதன்படி, அந்த விழுமியங்கள் இலங்கை கலாச்சாரத்திற்கு வெளிநாடுகளில் இருந்து வரவழைக்கப்பட்டவையல்ல. இலஞ்சமும் ஊழலும் அந்த விழுமியங்களைத் தாண்டி சமூகமயமாகிவிட்டதே நடந்தேறியுள்ளது.

2023ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டம், சர்வதேச நியமங்களைப் பின்பற்றி இலங்கையில் மேற்குறிப்பிட்ட



விழுமியங்களை மீள நிலைநிறுத்துவதற்காக உருவாக்கப்பட்ட ஒரு சட்டமாகும் என்பது தெளிவாகிறது. அதன்படி, இலஞ்சம் அல்லது ஊழலில் ஈடுபடுபவர்கள் மீது வழக்குத் தொடுத்து தண்டனை வழங்குவதைத் தாண்டி, சமூகத்தில் மேற்கண்ட விழுமியங்களை மீண்டும் நிலைநாட்டுவதன் மூலம், இலஞ்சம் மற்றும் ஊழலிற்கு எதிராக சமூகமே எழுந்து நிற்கும் நிலையை உருவாக்குவதே இச்சட்டத்தின் அடிப்படை நோக்கம் என்பது தெளிவாகிறது. ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் நோக்கங்களைக் கருத்தில் கொண்டு, இலஞ்சம் மற்றும் ஊழலைத் தடுக்கும் பொறுப்பு, நாடென்ற வகையில் அனைவருக்கும் ஒப்படைக்கப்பட்டுள்ளது, எனவே சட்டத்தின் நோக்கங்களை அடைவதை தனித்து அரசாங்கமோ அல்லது ஒரு நிறுவனமோ செய்ய முடியாது என்று வலியுறுத்தப்படுகிறது. அது நாட்டிலுள்ள அனைத்துக் தரப்பினர்களுக்கும் உரிய பொறுப்பாவதுடன் அது ஒரு தார்மீக தேசியப் பொறுப்பாகும்

ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு அனைத்துத் தரப்பினரும் பங்களிக்கும் வகையில் தேசிய செயற்பாட்டுத் திட்டம் ஒன்று இருக்க வேண்டும், மேலும் ஒரு கொள்கை கட்டமைப்பிற்குள் ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் நோக்கங்களை அனைவருக்கும் அடையச் செய்தல் வேண்டும் என்பதே தேசிய செயற்பாட்டுத் திட்டத்தின் நோக்கமாகும்.

2025-2029 ஐந்தாண்டு தேசிய செயற்பாட்டுத் திட்டத்தைத் தயாரிக்கும் போது, ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் மூலம் பெற்ற அதிகாரங்களின்படி ஆணைக்குழுவானது சமூகத்தின் அனைத்துப் பிரிவினரின் ஒத்துழைப்புடனும் பங்களிப்புடனும் தயாரிப்பதை முதன்மை நோக்காகக் கொண்டு செயற்பட்டது. அதன்படி, தயாரிக்கப்பட்ட திட்டத்தை முறையாக செயற்படுத்துவது சமூகத்தின் அனைத்து தரப்பினரினதும் பொறுப்பாகும். 2025-2029 ஐந்தாண்டு காலப்பகுதிக்குள் நடைமுறைப்படுத்தப்படவுள்ள இச்செயற்பாட்டுத் திட்டத்தில் பொதுமக்கள் இலஞ்சம் ஊழலை எதிர்த்து இலங்கையை விடுவிக்க முன்வரும் குழுவாக மாறுவார்கள் என எதிர்பார்க்கப்படுவதுடன் ஒவ்வொருவரின் தனிப்பட்ட ஒத்துழைப்புக்கள் பலப்படுத்தப்பட்டு நேர்மைத்திறன் மிகு சமூகமொன்றை உருவாக்க வழிவகுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், நேர்மைத்திறன், இலஞ்சம் மற்றும் ஊழலிற்கு எதிராக செயற்படல், வெளிப்படைத்தன்மை போன்ற விழுமியங்கள் ஒரு நபரின் சிறு பராயத்திலிருந்தே உருவாகின்றன. எதிர்காலத்தில் இவ்வாறானதொரு சந்ததியை உருவாக்குவது இலங்கையின் பொருளாதாரத்தில் ஊழலை துடைத்தழிக்கும் என நாம் உறுதியாக நம்புகின்றோம். இத்தகைய உயர்தர நபர்களை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் இந்த ஊழலிற்கு எதிரான தேசிய செயற்பாட்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன என்றும், இது எதிர்காலத்திற்காக நாங்கள் செய்யும் மிக உயர்ந்த முதலீடாகும் என்றும் நாங்கள் நம்புகிறோம்.

அனைத்து சட்டங்கள் மற்றும் திட்டங்களின் மூலமான இறுதியான இலக்கும் எதிர்பார்ப்பும் இலஞ்சம் மற்றும் ஊழலுமற்ற ஒரு கௌரவமான தேசமாக இலங்கையை முன்னோக்கி நகர்த்துவதாகும். மேலும் நாம் அனைவரும் எதிர்பார்க்கும் அந்த நாட்டை கட்டியெழுப்ப எதிர்வரும் ஐந்து ஆண்டுகளில் இந்த செயற்பாட்டுத் திட்டத்தினூடாக சாதகமான நடவடிக்கைகளை எடுக்க முடியும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். மேலும், நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பாட்டுத் திட்டத்தின் முக்கிய நோக்கங்களை அடைவதற்கு தங்கள் பொறுப்பை செவ்வனே நிறைவேற்றுவார்கள் என்று நம்புகிறேன். அப்போது நாம் எதிர்பார்க்கும் செழிப்பானதும், முன்மாதிரியானதுமான தேசத்தை எதிர்காலத்தில் காணலாம்.

**ரங்க திஸாநாயக்க**
பணிப்பாளர் நாயகம்,
இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு

# 01. அறிமுகம் மற்றும் பின்னணி

இலங்கை ஒரு "தூய்மையான" மற்றும் முழுமையாக வளர்ந்த நாடாக மாறுவதை நோக்கி நகரும் வேளையில், ஊழலை எதிர்த்துப் போராடுவது தேசிய நிகழ்ச்சி நிரலில் ஒரு முக்கிய முன்னுரிமையாக மாறியுள்ளது. அரசாங்க நிறுவனங்களின் நேர்மைதன்மை மற்றும் குடிமக்களின் நல்வாழ்வில் ஊழலின் தீங்கு விளைவிக்கும் விளைவுகளைப் புரிந்துகொண்டு, ஊழலை முழுமையாகக் கையாள வேண்டிய அவசரத் தேவையை இலங்கை அரசாங்கம் அங்கீகரிக்கிறது. 2004 ஆம் ஆண்டில் ஊழலுக்கு எதிரான ஐக்கிய நாடுகளின் மாநாட்டை (UNCAC) இலங்கை அங்கீகரித்தது. இலங்கை அரசியலமைப்பின் 19 வது திருத்தத்தின் மூலம் ஊழலுக்கு எதிரான நிகழ்ச்சி நிரலுக்கான தனது உறுதிப்பாட்டை அரசு வெளிப்படையாக வெளிப்படுத்தியது, இந்த உறுதிப்பாடு அரசியலமைப்பின் 21வது திருத்த சட்டத்தில் மீண்டும் வலியுறுத்தப்பட்டது. 21வது திருத்தம் ஜனநாயக நிர்வாகத்தையும் முக்கிய நிறுவனங்களின் சுயாதீன மேற்பார்வையையும் வலுப்படுத்துவதையும், பொது ஆய்வு செய்வதையும், அரசியலமைப்பு பேரவை மற்றும் சுயாதீன ஆணைகுழுக்களை மீண்டும் நிறுவுவதன் மூலம் ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகளைப் பயன்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. இவ்வாறு, ஊழல் எதிர்ப்புக் கட்டமைப்பு இலங்கையில் வெளிப்படையாக அரசியலமைப்பு அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது, இது ஊழலுக்கு எதிரான நாட்டின் புதுப்பிக்கப்பட்ட உறுதிப்பாட்டிற்கு ஒரு சான்றாகும்.

2019 ஆம் ஆண்டில், இலங்கையில் இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிப்பதற்கான தேசிய செயற்பாட்டுத்திட்டம் 2019-2023 உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டது. இந்த செயற்பாட்டுத்திட்டம் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு (CIABOC) தலைமையிலான ஆலோசனைச் செயன்முறையின் விளைவாகும். இது விரிவான பொது ஈடுபாட்டை உள்ளடக்கியது மற்றும் உள்ளூர் மற்றும் சர்வதேச நிபுணர்களின் நுண்ணறிவுகள் மற்றும் சர்வதேச சிறந்த நடைமுறைகள் மற்றும் அனுபவங்களை உள்ளடக்கியது, இதனால் இலங்கையின் குறிப்பிட்ட சூழலுக்கு ஏற்றவாறு சர்வதேச தரநிலைகளை திறம்பட மாற்றியமைத்தது. செப்டம்பர் 2023 இல் நடத்தப்பட்ட இலங்கை குறித்த IMF சர்வதேச நாணய நிதிய மதிப்பீடு (2023 GDA) இந்த செயல் திட்டத்தை "சாத்தியமான முக்கியமான படி" என்று குறிப்பிட்டது[1], இது ஊழலின் விலை மற்றும் அதை மூலோபாய ரீதியாக நிவர்த்தி செய்ய வேண்டியதன் அவசியத்தை அரசாங்கத்தின் புரிதலைக் குறிக்கிறது. இந்த செயல் திட்டத்தை செயல்படுத்தும் காலம் கடந்துவிட்டதால், 2024-2029 காலகட்டத்திற்கான ஒரு புதிய செயல் திட்டத்தின் தேவை எழுந்துள்ளது.

அதே நேரத்தில், அதன் சர்வதேச கடமைகள் மற்றும் தேசிய உறுதிமொழிகளுக்கு இணங்க, இலங்கை பாராளுமன்றம் 2023 ஆம் ஆண்டு 09 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தை இயற்றியது, இது கடுமையான பங்குதாரர் ஆலோசனைகள் மற்றும் சர்வதேச மற்றும் தேசிய சிறந்த நடைமுறைகள் பற்றிய விரிவான ஆய்வின் உச்சக்கட்டமாகும். இந்தச் சட்டம், நாட்டின் ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகள் மற்றும் கொள்கைகளை உணர்ந்து செயல்படுத்துவதற்கு முதன்மையாக ஒப்படைக்கப்பட்ட சுயாதீன ஆணைக்குழுவான இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் (CIABOC) அதிகாரங்களை வலுப்படுத்துவது உட்பட ஊழல் எதிர்ப்பு தொடர்பான சட்ட கட்டமைப்பை மேம்படுத்தியது.

கணிசமான எண்ணிக்கையிலான ஊழல் எதிர்ப்பு முயற்சிகள் செயற்படுத்தப்பட்டாலும், துரதிர்ஷ்டவசமாக, நாட்டில் ஊழலின் அளவு குறையவில்லை. 2023 GDA ஊழலை எதிர்த்துப் போராடுவதற்கு மிகவும் மூலோபாய மற்றும் உள்ளடக்கிய அணுகுமுறைக்கு அழைப்பு விடுத்தது, மேலும் நன்கு வடிவமைக்கப்பட்ட தேசிய ஊழல் எதிர்ப்பு உத்திகளின் பயன்பாட்டை எடுத்துக்காட்டியது

1 IMF இலங்கை ஆளுகை நோயறிதல் மதிப்பீடு, 26

**"ஊழலை எதிர்கொள்வதற்கும் நிர்வாகத்தை வலுப்படுத்துவதற்கும் நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்கும், செயற்படுத்துவதற்கான அதிகாரம் மற்றும் பொறுப்பை நிறுவுவதற்கும், செயற்படுத்தல் முன்னேற்றம் மற்றும் ஊழல் போக்குகளை உள்ளடக்கிய கண்காணிப்பை செயற்படுத்துவதற்கும் உதவும்[2]"**

ஊழலின் பரவலானது ஊழலுக்கு எதிரான முயற்சிகளின் செயல்திறனைத் தடுக்கிறது மற்றும் ஊழலை எதிர்த்துப் போராடுவதற்கான அரசியல் விருப்பத்தின் மீதும் பொது நிறுவனங்களின் மீதும் பொதுமக்களின் நம்பிக்கையைக் குறைக்கிறது. 2022 ஆம் ஆண்டின் அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடியின் போது விவாதிக்கக்கூடிய வகையில் உயர்ந்ததாக கருதப்படும் இலங்கையில் ஊழல் பற்றிய பொதுமக்களின் கருத்து, பொது நிறுவனங்கள் மற்றும் பொதுத்துறை ஊழியர்களிடையே நிலவும் ஊழலில் வலுவாக கவனம் செலுத்துகிறது. பொதுத்துறையில் ஊழலைக் குறைத்து நிவர்த்தி செய்வது சட்டத்தின் ஆட்சியில் பொதுமக்களின் நம்பிக்கையை கணிசமாக அதிகரிக்கவும், சேவை வழங்கலின் செயல்திறனை மேம்படுத்தவும் முடியும் என்றாலும், ஊழல் அனைத்து துறைகளிலும், நிர்வாகத்தின் அம்சங்களிலும் ஊடுருவி, அதன் சொந்த எதிர்மறை கலாச்சாரம் மற்றும் மதிப்பு அமைப்பை வளர்க்கிறது என்பதை ஏற்றுக்கொள்வது அவசியம்.

2023 ஊழல் புலனாய்வு குறியீட்டில் (CPI) இலங்கை 180 நாடுகளில் 115வது இடத்தைப் பிடித்தபோது, 0 (அதிக ஊழல்) முதல் 100 (மிகவும் சுத்தமானது) வரையிலான அளவுகோலில் 34 புள்ளிகளை மட்டுமே பெற்றபோது இந்தப் பொதுக் கருத்து வெளிப்பட்டது. 2012 முதல் இலங்கை மொத்தம் 6 மதிப்பெண் புள்ளிகளை இழந்து 2023 இல் மிகக் குறைந்த CPI மதிப்பெண்ணைப் பதிவு செய்துள்ளது. அதே நேரத்தில், 2020 உலகளாவிய ஊழல் சுட்டிக்கு பதிலளித்தவர்களில் 79% பேர் அரசாங்க ஊழலை ஒரு முக்கிய பிரச்சினையாகக் கருதினர். இருப்பினும், நேர்மறையான ஒரு விஷயமாக, 2023 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத் தீர்ப்பை (SC FR இல. 195/2022 மற்றும் SC FR இல. 212/2022) குறிப்பாக வலியுறுத்தி, வலுவான நீதித்துறை மேற்பார்வைக்காக இலங்கையை CPI பாராட்டியது. இதில் முன்னாள் ஜனாதிபதி, முன்னாள் பிரதமர் மற்றும் 11 பொது அதிகாரிகள் பொது நம்பிக்கையையும் அரசியலமைப்பின் உறுப்புரை 12(1) இணையும் மீறியதாகவும், இது நாட்டில் பொருளாதார நெருக்கடிக்கு வழிவகுத்ததாகவும் நீதிமன்றம் கண்டறிந்தது[3]. எனவே, இந்தக் கலாச்சாரத்தை திறம்பட எதிர்த்துப் போராடவும், அகற்றவும், குடிமக்கள் உட்பட மாகாண மற்றும் அரசு சாராத பங்குதாரர்களை உள்ளடக்கிய ஒரு உள்ளடக்கிய முழு அரசு மற்றும் முழு சமூகப் பதிலை ஏற்றுக்கொள்வது மிகவும் முக்கியம்.

இத்தகைய பின்னணியில், பல்வேறு பங்குதாரர்களின் உள்ளீடுகளுடன், முந்தைய தேசிய செயற்பாட்டுத் திட்டத்தை மேம்படுத்துவதற்காக இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிப்பதற்கான தேசிய செயற்பாட்டுத்திட்ட செயன்முறை 2025-2029 உருவாக்கப்பட்டு வழங்கப்படுகிறது. இலஞ்சம் மற்றும் ஊழலற்ற தேசம் என்ற தொலைநோக்கு பார்வையை அடைவதில் பல்வேறு நிறுவனங்கள் மற்றும் நபர்களின் பங்குகளை இந்த செயற்பாட்டுத்திட்டம் தனித்தனியாகவும் கூட்டாகவும் கோடிட்டுக் காட்டுகிறது. இலங்கையில் ஊழலை எதிர்த்துப் போராடுவதையும் தடுப்பதையும் நோக்கமாகக் கொண்ட நடவடிக்கைகளுக்கான விரிவான கொள்கை கட்டமைப்பை இது வழங்குகிறது, அத்துடன் ஊழல் எதிர்ப்புக் கொள்கை மேம்பாடு மற்றும் செயல்படுத்தலில் ஈடுபட்டுள்ள அனைத்து பங்குதாரர்களின் முயற்சிகள் மற்றும் வளங்களைத் திரட்டுவதற்கும் ஒருங்கிணைப்பதற்கும் ஒரு மதிப்புமிக்க கருவியாகும். நிறுவனங்கள் மீதான பொதுமக்களின் நம்பிக்கையை வலுப்படுத்தும் மற்றும் நாட்டின் எதிர்கால சந்ததியினருக்கு பயனளிக்கும் நேர்மைத் திறனின் வலுவான மதிப்புகளின் அடிப்படையில் ஒரு ஊழல் எதிர்ப்பு கலாச்சாரத்தை வளர்ப்பதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

நான்கு (04) பரந்த மூலோபாய தூண்களுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது, இது ஒரு பயனுள்ள தேசிய ஊழல் எதிர்ப்பு உத்திக்கு அவசியமானதாக அடையாளம் காணப்பட்ட ஒன்பது (09) முன்னுரிமைப் பகுதிகளை உள்ளடக்கியது. இலங்கையின் சர்வதேச மற்றும் உள்நாட்டு ஊழல் எதிர்ப்பு உறுதிமொழிகள், சர்வதேச சிறந்த நடைமுறைகள், ஆராய்ச்சி ஆய்வுகள் மற்றும் பொது கணக்கெடுப்பு முடிவுகள் ஆகியவற்றின் விரிவான மதிப்பாய்வு மூலம் இந்தப் பகுதிகள் அடையாளம் காணப்பட்டன. நான்கு பரந்த உத்திகள்:

2 IMF சர்வதேச நாணய நிதிய மதிப்பீடு, 26

3 ஆசிய பசிபிக் பிராந்தியத்திற்கான CPI 2023: ஊழல் எதிர்ப்பு உறுதிமொழிகளின் போதுமான நிறைவேற்றத்தால் குறிக்கப்பட்ட பிராந்திய தேக்கநிலை, https://www.transparency.org/en/news/cpi-2023-asia-pacific-stagnation-due-to-inadequate-anti-corruption-commitments

A. கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்

B. நிறுவன வலுப்படுத்துதல் மற்றும் அமுலாக்கம்

C. கல்வி

D. சட்டம் மற்றும் கொள்கை சீர்திருத்தம்

பின்வரும் முன்னுரிமைப் பகுதிகளின் கீழ் அடையாளம் காணப்பட்ட நடவடிக்கைகள் மேற்கண்ட நான்கு உத்திகளின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளன:

**முன்னுரிமை பகுதி 1:** ஊழல் எதிர்ப்பு சட்டம் மற்றும் கொள்கை கட்டமைப்பு

**முன்னுரிமை பகுதி 2:** முரண்பாட்டு ஆர்வங்கள் மற்றும் சொத்துக்கள் பிரகடனம்

**முன்னுரிமை பகுதி 3:** ஊழல் நடைமுறைகளைத் தடுத்தல்

**முன்னுரிமை பகுதி 4:** தகவல் தெரிவிப்பவர்களின் பாதுகாப்பு

**முன்னுரிமை பகுதி 5:** வியாபாரத்தில் நேர்மை

**முன்னுரிமை பகுதி 6:** பொதுத்துறையில் நேர்மை

**முன்னுரிமை பகுதி 7:** நீதித்துறை மற்றும் வழக்குத் தொடரும் சேவையின் நேர்மை மற்றும் சுதந்திரம்.

**முன்னுரிமை பகுதி 8:** நிறுவன ரீதியான வலுப்படுத்தல் மற்றும் அமுலாக்கம்

**கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு**

ஒட்டுமொத்தமாக, செயற்றிட்டம் நாட்டின் அனைத்து துறைகளையும் உள்ளடக்கிய நடவடிக்கைகளை உள்ளடக்கியது, குறுகிய கால (1 முதல் 12 மாதங்கள்), நடுத்தர கால (12 முதல் 36 மாதங்கள்) மற்றும் நீண்ட கால (36 முதல் 60 மாதங்கள்) மைல்கற்கள் மூலம் படிப்படியாக செயற்படுத்தப்பட வேண்டும்.

# 02. தேசிய இலஞ்சம் மற்றும் ஊழல் எதிர்ப்பு செயற்றிட்டம் 2025-2029 உருவாக்கச் செயன்முறை

## a. உள்ளடக்கிய செயன்முறை மற்றும் உரிமம்

ஊழலிற்கு எதிரான தேசிய செயற்றிட்டம் 2025-2029 (NAP 2025-2029) உருவாக்கம், “முழு சமூகம்” மற்றும் “முழு அரசாங்கமும்” என்ற கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டது . எனவே, நிலையான ஊழல் எதிர்ப்பு தீர்வுகளை வளர்ப்பதற்கு பல்வேறு பங்குதாரர்களின் கூட்டு நடவடிக்கை மற்றும் பங்கேற்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் ஒரு செயன்முறை, குறிப்பாக அரசாங்கத்தின் உரிமையை வளர்க்கும் ஒரு செயன்முறை, NAP உருவாக்கத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. CIABOC ஆல் வழிநடத்தப்படும் NAP 2025-2029 என்பது இலங்கை மக்களுக்கு இலங்கை அரசாங்கத்தால் சொந்தமான ஒரு தேசிய தயாரிப்பாகும். அரசு நிறுவனங்கள், சிவில் சமூக அமைப்புகள், தனியார் துறை மற்றும் சமூக உறுப்பினர்கள் உட்பட பல்வேறு துறைகளுடன் ஆலோசனைகளை உள்ளடக்கிய விரிவான பங்குதாரர் ஈடுபாட்டின் மூலம் இந்த செயன்முறை உள்ளடக்கப்பட்டது. வெளிப்படைத்தன்மையை ஊக்குவிப்பதன் மூலமும், பல்வேறு துறைகளின் செயலில் பங்கேற்பை ஊக்குவிப்பதன் மூலமும், அரசு அதிகாரிகள் மற்றும் பிற பங்குதாரர்களை ஒரே மாதிரியாக அதிகாரம் அளிப்பதை நோக்கமாகக் கொண்டது, NAP 2025-2029 இணை வெற்றிகரமாக செயல்படுத்துவதற்கான பொறுப்பு மற்றும் அர்ப்பணிப்பு உணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது. இந்த உள்ளடக்கிய அணுகுமுறை திட்டத்தின் நம்பகத்தன்மையை மேம்படுத்தியது மட்டுமல்லாமல், தேசிய முன்னுரிமைகளுடன் ஒத்துப்போகும் மற்றும் பொறுப்புணர்வை வளர்க்கும் ஒரு நிலையான கட்டமைப்பிற்கான அடித்தளத்தை அமைத்தது.

## b. முறையியல்

CIABOC இன் தலைமையில் 2024 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் NAP 2025-2029 இணை உருவாக்குவதற்கான ஆயத்தப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. சிறந்த இணைத்திறத்தை வளர்ப்பதற்கும் பங்குதாரர் உரிமைத்துவத்தை வலுப்படுத்துவதற்கும், முன்மொழியப்பட்ட செயற்றிட்டத்தை அடுத்தடுத்த அரசாங்கங்களின் திட்டங்கள் மற்றும் முன்னுரிமைகளுடன் இணைக்க திட்டமிட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. முழு செயன்முறையும் நான்கு முக்கிய கட்டங்களாக வகைப்படுத்தப்பட்டது : அதாவது, (அ) ஆரம்ப மதிப்பாய்வு மற்றும் புரிதல், (ஆ) NAP 2019-2023 இன் நாணய நிதிய மதிப்பீடு (இ) பங்குதாரர் ஆலோசனைகள், (ஈ) தரவு சேகரிப்பு மற்றும் பகுப்பாய்வு.

a) ஆரம்ப மதிப்பாய்வு மற்றும் சிக்கல்களைப் புரிந்துகொள்வது

- தற்போதுள்ள சட்ட கட்டமைப்பு
- உள்ளகக் கடப்பாடுகள்
- சர்வதேச சிறந்த நடைமுறைகள்
- இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவால் பெறப்பட்ட முறைப்பாடுகளின் தரவுகள்

b) NAP 2019-2023 இன் வெளிப்படுத்துகை

- இலங்கையில் இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிப்பதற்கான தேசிய செயற்றிட்டத்தின் செயற்படுத்தல் மதிப்பீடு 2019-2023

c) பங்குதாரர் ஆலோசனைகள்

ஊழல் குறித்த தீவு முழுவதும் பொதுமக்கள் கருத்துக் கணிப்பு

- 45 கலந்துரையாடல்கள்
- 09 மாகாண பொது ஆலோசனைகள்
- 08 தேசிய அளவிலான ஆலோசனைகள்
- சமூக மற்றும் அச்சு ஊடக பிரச்சாரம்

d) NAPAP 2025-2029 வரைவு தயாரித்தல் - தரவு தொகுப்பு, பகுப்பாய்வு மற்றும் வரைவாக்கம்

கற்றுக்கொண்ட முக்கிய பாடங்கள் மற்றும் கடந்த கால கண்டுபிடிப்புகளை அடையாளம் காண்பதன் முக்கியத்துவத்தை உணர்ந்து, தற்போதைய சட்ட கட்டமைப்பு, இலங்கையின் சர்வதேச ஊழல் எதிர்ப்பு கடமைகள், சர்வதேச சிறந்த நடைமுறைகள் மற்றும் CIABOC இன் முறைப்பாட்டு தரவுகள் ஆகியவற்றின் வட்ட மேசை மதிப்பாய்வு நடத்தப்பட்டது. இதில், ஊழல் எதிர்ப்பு முயற்சிகளை நிர்வகிக்கும் தற்போதைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகள், பலங்கள், பலவீனங்கள் மற்றும் சீர்திருத்தம் தேவைப்படும் பகுதிகளை அடையாளம் காணுதல் சர்வதேச ஒப்பந்தங்கள் மற்றும் ஊழல் எதிர்ப்பு தொடர்பான பிற நிறுவனங்களின் கீழ் நாட்டின் உறுதிப்பாடுகள், உலகளாவிய தரநிலைகள் மற்றும் எதிர்பார்ப்புகளுடன் சீரமைப்பை உறுதி செய்தல் பிற நாடுகள் தங்கள் ஊழல் எதிர்ப்பு முயற்சிகளில் பயன்படுத்தும் பயனுள்ள உத்திகள் மற்றும் வழிமுறைகளை அடையாளம் காண சர்வதேச சிறந்த நடைமுறைகள், உள்ளூர் சூழலுக்கு ஏற்ப மாற்றியமைக்கக்கூடிய பாடங்களை வரைதல் மற்றும் போக்குகள், பொதுவான பிரச்சினைகள் மற்றும் இந்த முறைப்பாடுகளுக்கான தற்போதைய பதில்களின் செயற்றினை அடையாளம் காண CIABOC இன் முறைப்பாடு தரவு ஆகியவற்றின் முழுமையான பகுப்பாய்வு ஆகியவை அடங்கும்.

இரண்டாவது கட்டமாக, 2019-2023 ஆம் ஆண்டுக்கான NAP செயல்படுத்தலின் முன்னேற்றத்தின் தரமான மதிப்பீடு நடத்தப்பட்டது. இதில், குறிக்கோள்கள் அடையப்பட்டதா என்பதைத் தீர்மானிப்பதற்கும், முன்னேற்றத்திற்கான பகுதிகளை அடையாளம் காண்பதற்கும், முன்னேற்றத்திற்குத் தடையாக இருந்திருக்கக்கூடிய நிறுவன, செயல்பாட்டு மற்றும் நீதிமன்றத் தடைகள் உட்பட, செயல்படுத்தலுக்கான சவால்கள் மற்றும் தடைகளை அடையாளம் காண்பதற்கும், NAP இன் செயல்திறன் குறித்த அவர்களின் அனுபவங்கள் மற்றும் முன்னோக்குகளைப் புரிந்துகொள்வதற்காக, அரசு நிறுவனங்கள், சிவில் சமூக அமைப்புகள் மற்றும் தனியார் துறை உள்ளிட்ட செயல்படுத்தலில் ஈடுபட்டுள்ள பல்வேறு பங்குதாரர்களிடமிருந்து கருத்துக்களைச் சேகரிப்பதற்கும் முக்கிய செயல்திறன் குறிகாட்டிகளின் மதிப்பாய்வு அடங்கும். செயல்படுத்தலுக்கான சிறந்த நடைமுறைகள் மற்றும் எதிர்கால ஊழல் எதிர்ப்பு முயற்சிகளுக்குக் கற்றுக்கொண்ட பாடங்கள் மேற்கூறியவற்றின் அடிப்படையில் ஆவணப்படுத்தப்பட்டன, மேலும் தற்போதைய செயற்றிட்டத்தின் செயல்திறனை மேம்படுத்த அவை பயன்படுத்தப்பட்டன.

மூன்றாவது கட்டத்தின் போது, பொதுமக்களின் உணர்வுகளைப் பற்றிய விரிவான புரிதலை உருவாக்குதல், பல்வேறு கண்ணோட்டங்களைச் சேகரித்தல் மற்றும் 2025-2029 NAPAP இன் வளர்ச்சிக்கு உள்ளடக்கிய மற்றும் கூட்டு அணுகுமுறையை வளர்ப்பது ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு தொடர்ச்சியான பங்குதாரர் ஆலோசனைகள் நடத்தப்பட்டன. முதலாவதாக, நாடு முழுவதும் ஊழல் குறித்த பொதுமக்களின் அணுகுமுறைகள் மற்றும் கருத்துக்களை அளவிடுவதற்காக ஊழல் குறித்த நாடு தழுவிய பொது கருத்து கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. இந்த கணக்கெடுப்பு ஒன்பது மாகாணங்களிலும் நடத்தப்பட்டது மற்றும் தொலைபேசி, இணையத்தளம் மற்றும் விலைமனுக்கள் மூலம் பொது மக்களிடமிருந்து 9000 பதிலளித்தவர்களுக்கு வழங்கப்பட்டது. அதே நேரத்தில், சமூகத் தலைவர்கள், சிவில் சமூக பிரதிநிதிகள் மற்றும் பிற குடிமக்கள் உட்பட பல்வேறு பின்னணிகளைச் சேர்ந்த பங்குதாரர்களிடையே ஆழமான உரையாடல்களை எளிதாக்குவதற்காக ஒன்பது மாகாணங்களில் (ஒவ்வொரு மாகாணத்திலும் 05 FGD) 45 குவிநோக்கு குழு கலந்துரையாடல்கள் (FGD) ஏற்பாடு செய்யப்பட்டன. இந்த விவாதங்கள் பங்கேற்பாளர்கள் ஊழல் மற்றும் நிர்வாகம் தொடர்பான தங்கள் அனுபவங்கள், நுண்ணறிவுகள் மற்றும் பரிந்துரைகளைப் பகிர்ந்து கொள்ளவும், உரையாடலுக்கான கூட்டு சூழலை வளர்க்கவும் உதவியது. இரண்டாவதாக, ஒவ்வொரு மாகாணத்திலும் மாகாண மட்டத்தில் பொது ஆலோசனைகள் நடத்தப்பட்டன, மொத்தம் 09 பொது ஆலோசனைகள் நடத்தப்பட்டன.

உள்ளூர் மக்கள் தங்கள் பிராந்தியங்கள் மற்றும் சமூகங்களுக்குரிய ஊழல் தொடர்பான பிரச்சினைகள் குறித்த விவாதங்களில் ஈடுபடவும், அவர்களின் குரல்கள் தேசிய கொள்கை உருவாக்கும் செயற்பாட்டில் ஒருங்கிணைக்கப்படுவதை உறுதி செய்யவும் இவை நடத்தப்பட்டன. மூன்றாவதாக, நாடாளுமன்ற உறுப்பினர்கள், நீதித்துறை உறுப்பினர்கள், அரசு அதிகாரிகள், தனியார் துறை பிரதிநிதிகள், ஊடக உறுப்பினர்கள், சிவில் சமூகத்தின் பிரதிநிதிகள் மற்றும் சர்வதேச அமைப்புகள், இளைஞர் பிரதிநிதிகள் உள்ளிட்ட முக்கிய பங்குதாரர்களை ஒன்றிணைத்து 08 தேசிய அளவிலான ஆலோசனைகள் நடாத்தப்பட்டன. இந்த ஆலோசனைகளில் ஊழலுக்கு எதிரான தேசிய முயற்சிகள் தொடர்பான மூலோபாய விவாதங்கள் இருந்தன, இது பங்கேற்பாளர்கள் கொள்கை உருவாக்கம் மற்றும் செயற்படுத்தல் உத்திகளில் ஒத்துழைக்க உதவுகின்றது.

இந்தத் தரவு சேகரிப்பு செயன்முறைக்கு இணையாக, தேசிய புலனுணர்வு கணக்கெடுப்பு மூலம் இலங்கையில் ஊழல் குறித்த பொது நுண்ணறிவுகளைச் சேகரிக்க ஒரு சமூக மற்றும் அச்சு ஊடக பிரச்சாரம் நடத்தப்பட்டது, இது குடிமக்கள் தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளவும், மிகவும் வெளிப்படையான மற்றும் நியாயமான சமூகத்தை வடிவமைக்கவும் அதிகாரம் அளித்தது. சமூக ஊடக பிரச்சாரம் 3 மில்லியன் பதிவுகளை உருவாக்கியது, இது பல்வேறு தளங்களில் பரவலான தெரிவுநிலையைக் குறிக்கிறது. இது இலங்கையில் ஊழல் தொடர்பான தங்கள் எண்ணங்களையும் அனுபவங்களையும் பகிர்ந்து கொள்ளும் பயனர்களிடமிருந்து 300 இற்கும் மேற்பட்ட கருத்துகளுடன் செயலில் பங்கேற்பையும் வளர்த்தது. கூடுதலாக, கூகள் (Google) படிவங்கள் மூலம் 1,756 பதில்கள் சேகரிக்கப்பட்டன, இது பார்வையாளர்களிடமிருந்து குறிப்பிடத்தக்க அளவிலான ஆர்வத்தையும் தொடர்புகளையும் பிரதிபலிக்கிறது. அச்சு ஊடக பிரச்சாரம் இணையத்தள அச்சு ஊடகப் பக்கங்களில் 3,096,959 பதிவுகளைப் பெற்றது, இது விரிவான அணுகலையும் கவனத்தையும் வெளிப்படுத்தியது. இந்த பிரச்சாரம் சுமார் 1,629,475 நபர்களுடன் வெற்றிகரமாக இணைக்கப்பட்டது, செய்தியை மேலும் விரிவுபடுத்தியது மற்றும் பரந்த பார்வையாளர்களுக்கு இது குறித்து வெளிப்படுத்துவதை உறுதி செய்தது.

இந்த ஊழல் எதிர்ப்பு முயற்சிகள். இந்த பிரச்சாரங்கள், பொதுமக்களை ஈடுபடுத்தவும், ஊழல் எதிர்ப்பு பிரச்சினைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும் டிஜிட்டல் மற்றும் பாரம்பரிய ஊடகங்களின் பயனுள்ள ஒருங்கிணைப்பை எடுத்துக்காட்டுகின்றன. அதே நேரத்தில், ஊழல் எதிர்ப்பு மற்றும் ஊழல் எதிர்ப்பு கொள்கை உருவாக்கம் குறித்த தேசிய கலந்துரையாடல் பங்களிக்க தனிநபர்களுக்கு கூடுதல் வாய்ப்புக்களை அவை வழங்குகின்றன.

### பல்வேறு பங்குதாரர்களுடன் கொழும்பில் ஆலோசனை நடைபெற்றது.

| | | |
|---|---|---|
| 1 | தனியார் துறையுடன் ஆலோசனை | 2024.08.22 |
| 2 | இளைஞர்களுடன் ஆலோசனை | 2024.08.23 |
| 3 | CSO & INGO உடனான ஆலோசனை | 2024.08.27 |
| 4 | ஊடகத் துறையுடன் ஆலோசனை | 2024.08.30 |
| 5 | மாற்றுத்திறனாளி சமூகங்களுடன் ஆலோசனை | 2024.10.25 |
| 6 | நீதவான் நீதிமன்ற நீதிபதிகளுடன் ஆலோசனை | 2024.12.03 |
| 7 | உயர் நீதிமன்ற நீதிபதிகளுடன் ஆலோசனை | 2024.12.04 |
| 8 | மேல்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளுடன் ஆலோசனை | 2024.12.05 |
| 9 | பொதுத்துறையுடன் ஆலோசனை | 2024.12.18 |
| 10 | பாராளுமன்ற உறுப்பினர்களுடன் ஆலோசனை | 2025.01.10 |

*அட்டவணை 1: பங்குதாரர் ஆலோசனைகளின் பட்டியல்*




படம்: மாகாண ஆலோசனைகளின் வரைபடம்

**நாடளாவிய ரீதியலான பொது மக்களின் பங்குபற்றுகை**

| | | |
|---|---|---|
| 1 | 2024.08.01 | குருநாகல் |
| | | புத்தளம் |
| 2 | 2024.08.02 | கண்டி |
| | | மாத்தளை |
| | | நுவரெலியா |
| 3 | 2024.08.06 | யாழ்ப்பாணம் |
| | | முல்லைத்தீவு |
| | | கிளிநொச்சி |
| | | மன்னார் |
| | | வவுனியா |
| 4 | 2024.08.07 | அம்பாறை |
| | | மட்டக்களப்பு |
| | | திருகோணமலை |
| 5 | 2024.08.08 | அனுராதபுரம் |
| | | பொலன்னறுவை |
| 6 | 2024.08.13 | பதுளை |
| | | மொணராகலை |
| 7 | 2024.08.14 | கேகாலை |
| | | இரத்தினபுரி |
| 8 | 2024.08.28 | காலி |
| | | மாத்தறை |
| | | அம்பாந்தோட்டை |
| 9 | 2024.08.29 | கொழும்பு |
| | | கம்பஹா |
| | | களுத்துறை |

வரைவு செயன்முறையின் இறுதி கட்டத்தில் இந்த வெவ்வேறு ஆதாரங்கள் மூலம் சேகரிக்கப்பட்ட தரவுகளை ஒருங்கிணைப்பது அடங்கும். ஊழல் எதிர்ப்பு முயற்சிகளின் சூழலில் முக்கிய போக்குகள், சவால்கள் மற்றும் வாய்ப்புகளை அடையாளம் காண்பதில் பகுப்பாய்வு கவனம் செலுத்தியது. ஒருங்கிணைக்கப்பட்ட தரவு மற்றும் பகுப்பாய்வின் அடிப்படையில், வரைவு செயன்முறை சான்றுகள் சார்ந்த பரிந்துரைகள் மற்றும் சிறந்த நடைமுறைகளை உள்ளடக்கியது, இது திட்டம் நடைமுறைக்குரியதாகவும் பல்வேறு பங்குதாரர்களின் தேவைகளுடன் ஒத்துப்போகும் வகையிலும் இருப்பதை உறுதி செய்தது.

இந்த செயன்முறையின் இறுதிப் படியாக, வரைவு செயற்றிட்டம் இலங்கையின் கொழும்பில் நடைபெற்ற ஒரு பட்டறையில் முக்கிய செயல்படுத்தும் நிறுவனங்களின் மதிப்பாய்வு மற்றும் கருத்துக்காக வழங்கப்பட்டது. இந்த கூட்டு முறை NAP இன் முழுமையான ஆய்வு, மறுபரிசீலனை மற்றும் பகுப்பாய்விற்கு உதவியது, இது பல்வேறு கண்ணோட்டங்கள் மற்றும் தேவைகளின் செயல்பாட்டுக்கு ஏற்றதாகவும் பிரதிநிதித்துவப்படுத்துவதாகவும் இருப்பதை உறுதி செய்தது.

# 03. இலங்கையில் ஊழல் நிலைமை

ஊழல் என்பது சமூகத்தின் ஒவ்வொரு மட்டத்தையும் பாதிக்கும் ஒரு பரவலான பிரச்சினையாகும், மேலும் ஒரு முழு தேசத்தின் நற்பெயருக்கும் அந்தஸ்த்துக்கும் கடுமையான ஆபத்தை ஏற்படுத்துகிறது. இது நிர்வாகத்தின் அடித்தளத்தை குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது, பொதுமக்களின் நம்பிக்கையை அரிக்கிறது, தேசிய வளங்களை குறைக்கிறது மற்றும் பொருளாதார வாய்ப்புகளை சிதைக்கிறது. ஊழலின் தீங்கு விளைவிக்கும் விளைவுகள் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி, குடிமக்களின் நல்வாழ்வு மற்றும் அரசியல் ஸ்திரத்தன்மையை கணிசமாகக் குறைமதிப்பிற்கு உட்படுத்தியுள்ளன. பல ஆண்டுகளாக, இலங்கையில் ஊழலைச் சுற்றியுள்ள பொது விவாதம் முக்கியமாக அரசியல் பிரமுகர்கள், அரசு நிறுவனங்கள் மற்றும் பொது அதிகாரிகளின் அதிகார துஸ்பிரயோகம் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது. 2022 ஆம் ஆண்டு பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியைத் தொடர்ந்து, நாட்டின் அன்றாட செயல்பாட்டையும் அதன் மக்களின் வாழ்க்கையையும் பாதிக்கும் நெருக்கடிகளுக்குப் பின்னால் உள்ள முக்கிய காரணங்களில் ஒன்று ஊழலாக இருக்க வேண்டும் என்று அதிகமான மக்கள் கருதுவதால், ஊழல் பற்றிய விவாதம் மிகவும் அவசரமாக மாறியது. அரசு நிறுவனங்களுக்குள்ளும் பொது அதிகாரிகளிடையேயும் நிலவும் ஊழல் தற்போதைய பொது விவாதத்தில் பெரும்பாலும் கவனத்தை ஈர்க்கும் அதே வேளையில், ஊழல் சமூகத்தின் அனைத்து அம்சங்களையும் ஊடுருவி இறுதியில் மக்களின் நலனை சீர்குலைக்கிறது என்பதை அங்கீகரிப்பது மிகவும் முக்கியம். எனவே, இலங்கையில் நிலவும் ஊழல் நிலைமையை ஆராய்ந்து அடையாளம் காண்பது முக்கியம், இதன் மூலம் அத்தகைய ஊழலைக் கட்டுப்படுத்தவும் தடுக்கவும் முடியும்.

## a. துறை ரீதியான பாதிப்புகள்

2018 ஆம் ஆண்டில், இலங்கை தனது இரண்டாவது சுழற்சியான ரீதியான ஐக்கிய நாடுகள் தாபனத்தின் ஊழலுக்கு எதிரான சமவாயம் UNCAC மதிப்பாய்வை வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டது. இந்த விரிவான மதிப்பீடு ஊழல் நடைமுறைகளைத் தடுப்பதற்கான தடுப்பு நடவடிக்கைகளை செயல்படுத்துதல் மற்றும் சொத்து மீட்புடன் தொடர்புடைய செயன்முறைகள் ஆகியவற்றில் கவனம் செலுத்தியது. அதற்கு முன், 2015 ஆம் ஆண்டில், இலங்கை முதற் சுழற்சி மதிப்பாய்வை நிறைவுபெற்றது, இது ஊழல் தொடர்பான குற்றங்களை குற்றமாக்குதல், சட்ட அமுலாக்க நடவடிக்கைகளின் செயல்திறன் மற்றும் ஊழலை எதிர்த்துப் போராடுவதற்கான சர்வதேச ஒத்துழைப்பு முயற்சிகளை ஆய்வு செய்தது. மதிப்பாய்வுகள் இலங்கை அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட சில முயற்சிகளை ஒட்டுமொத்தமாகப் பாராட்டின, அதே நேரத்தில் செயல்படுத்துவதில் பல சவால்களை எடுத்துக்காட்டுகின்றன. 2023 ஊழல் எதிர்ப்புச் சட்டம் வரைவு கட்டத்தில் மதிப்பாய்வுகளின் அனைத்து கட்டாய மற்றும் சில விருப்ப பரிந்துரைகளையும் கவனத்தில் கொண்டது, இதன் விளைவாக, உலகின் சிறந்த ஊழல் எதிர்ப்புச் சட்டங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

இந்த நடவடிக்கைகள் இருந்தபோதிலும், நாட்டில் ஊழலின் நிலை மற்றும் ஊழல் குறித்த பொதுமக்களின் கருத்து கவலையளிக்கிறது. இந்த செயல் திட்டத்தை வரைவதற்கு நடத்திய பொது கணக்கெடுப்பு, இலங்கையில் இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு மிகவும் பாதிக்கப்படக்கூடிய துறைகளை இரண்டு நிலைகளில் விசாரித்தது: (அ) பதிலளித்தவர்களின் கருத்துக்கள் மற்றும் (ஆ) பதிலளித்தவர்களின் அனுபவம். நாட்டில் ஊழல் அளவுகள் குறித்து அடிக்கடி ஆவணப்படுத்தப்படும் பொது அதிருப்தியைப் பிரதிபலிக்கும் வகையில், பதிலளித்தவர்களில் கணிசமான பெரும்பான்மையானவர்கள் (64%) பொதுத்துறை ஊழலுக்கு

மிகவும் பாதிக்கப்படக்கூடியது என்று உணர்ந்ததாகக் கண்டறியப்பட்டது, அதே நேரத்தில் தனியார் துறை 24% ஒப்புதலுடன் இரண்டாவது இடத்தையும் அரசு சாராத துறை 12% உடன் இறுதி இடத்தைப் பிடித்தது.

இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு மிகவும் பாதிக்கப்படக்கூடிய நிறுவனங்கள் குறித்த பதிலளித்தவர்களின் கருத்துக்கள், பொலிஸ், அசியல்வாதிகள், சுங்கம், குடிவரவு குடியகழ்வுத் திணைக்களம் மற்றும் பாடசாலைகள் ஆகியவை மிக உயர்ந்த தரவரிசையில் உள்ளன என்பதைக் குறிக்கின்றன.




*படம் 1 - பதிலளிப்பவரின் பார்வையின் அடிப்படையில் இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு மிகவும் பாதிக்கப்படக்கூடிய நிறுவனங்களின் பிரிவு.*

கணக்கெடுப்பில் பதிலளித்தவர்கள் தங்கள் தனிப்பட்ட அனுபவங்களின் அடிப்படையில் ஐந்து நிறுவனங்களை மிகவும் ஊழல் நிறைந்த நிறுவனங்களாகக் குறிப்பிட்டனர்: பொலிஸ், கல்வி நிறுவனங்கள், காணிப் பதிவகம், உள்ளூராட்சி அதிகார சபை மற்றும் மாகாண சபைகள். இந்த தரவரிசை ஒரு கவலைக்குரிய நிலைமையை பிரதிபலிக்கிறது, இது சட்ட அமுலாக்கம் மற்றும் சமூக மட்டத்தில் அத்தியாவசிய பொது சேவைகள் இரண்டிலும் ஊழல் பரவலாக இருப்பதாகக் கருதப்படுகிறது, இது இந்த முக்கியமான நிறுவனங்களின் மீதான ஒட்டுமொத்த நம்பிக்கையைப் பாதிக்கிறது. மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்கள் மற்றும் உள்ளூராட்சி அதிகார சபை ஊழியர்களுக்கு எதிராக CIABOC இற்கு தொடர்ந்து ஏராளமான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்று வருகிறது, இது கணக்கெடுப்பு முடிவுகளுக்கு நம்பகத்தன்மையை அளிக்கிறது. (2024 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்கள் மற்றும் உள்ளூர் அரசாங்க அதிகாரிகளின் ஊழியர்களுக்கு எதிராக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு முறைப்பாடுகளைப் பெற்றது.) பொது சேவைகளைப் பரவலாக்குவதற்கான புதுப்பிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில், அடிமட்ட நிறுவனங்களில் ஊழலின் அபாயங்களைக் குறைப்பது அவசியம்.




*படம் 2 - பதிலளித்தவர்களின் அனுபவத்தின் அடிப்படையில் இலஞ்சம் மற்றும் ஊழல் அதிகமாக இருக்கும் நிறுவனங்களின் பிரிவு.*

ஒன்பது மாகாணங்களிலும், இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான மதிப்பீடுகளின் படி பொலிஸ் திணைக்களமே அடிக்கடி தொடர்புடைய நிறுவனம் என்று பதிலளித்தவர்கள் குறிப்பிட்டனர். இந்த பரவலான உணர்வு, நாட்டில் சட்ட அமுலாக்க நிறுவனங்களின் நேர்மை மற்றும் பொறுப்புக்கூறல் குறித்த குறிப்பிடத்தக்க கவலையை வெளிப்படுத்துகிறது. இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு நடத்திய சோதனைகளின் போது மேற்கொள்ளப்பட்ட கைதுகளின் எண்ணிக்கையால் இந்த கண்டுபிடிப்புகள் உறுதிப்படுத்தப்படுகின்றன, இது 2024 ஆம் ஆண்டில், பொதுத்துறை நிறுவனங்களில் இலங்கை பொலிஸார் அதிக எண்ணிக்கையிலான கைதுகளை மேற்கொண்டது, அவற்றின் எண்ணிக்கை 22 ஆக காணப்பட்டது. அதே நேரத்தில், 2024 ஆம் ஆண்டில் உயர் நீதிமன்றத்தில் ஊழல் தொடர்பான விசாரணைகளில் 15 பொலிஸ் அதிகாரிகள் குற்றம் சாட்டப்பட்டவர்களாகவும் பெயரிடப்பட்டுள்ளனர்.




*படம் 3- அனுபவத்தின் அடிப்படையில் மாகாணங்களில் ஊழல் மற்றும் இலஞ்ச அபாயமுள்ள முதல் 5 நிறுவனங்கள்*

முந்தைய தேசிய பாதுகாப்பு அமுலாக்கக் குழு 2019-2023 ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகளை செயல்படுத்துவதில் சட்ட அமுலாக்க நிறுவனமாக பொலிஸ் திணைக்களத்தின் முக்கிய பங்கை வலியுறுத்தி, அத்தகைய நிறுவனங்களை வலுப்படுத்துவதற்கு ஒரு தூணாக அர்ப்பணித்திருந்தாலும், இந்த கணக்கெடுப்பின் கண்டுபிடிப்புகள் ஊழலுக்கு எதிரான போராட்டத்தில் இலங்கைக்கு முன்னால் உள்ள ஒரு குறிப்பிடத்தக்க சவாலை வெளிப்படுத்துகின்றன. மிக முக்கியமாக, நாட்டில் ஊழலை நிவர்த்தி செய்வதற்கான சட்ட மற்றும் கொள்கை கட்டமைப்பை திறம்பட செயல்படுத்துவதற்கான அவசரத் தேவையை இந்த முடிவுகள் எடுத்துக்காட்டுகின்றன.

ஊக்கமளிக்கும் விதமாக, 2023ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட தனியார் துறை இலஞ்சக் குற்றத்தின் கீழ் தனிநபர்கள் தனியார் துறை ஊழியர்களுக்கு எதிராக முறைப்பாடுகளை வழங்கி வருவதாக CIABOC இன் அதிகாரப்பூர்வ புள்ளிவிவரங்கள் குறிப்பிடுகின்றன. இன்றுவரை ஒரே ஒரு கைது மட்டுமே நடந்திருப்பது, ஊழலை நிவர்த்தி செய்ய புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட சட்ட விதிகளை மக்கள் தீவிரமாகப் பயன்படுத்துகிறார்கள் என்பதை இது நிரூபிக்கிறது. இருப்பினும், 2024 ஆம் ஆண்டில் CIABOC பெற்ற 3850 முறைப்பாடுகளில், 1714 முறைப்பாடுகள் ஆணைக்குழுவின் வெளியே இருந்தன. ஊழல் என்றால் என்ன என்பது மற்றும் CIABOC இன் பங்களிப்பு குறித்து பொதுமக்களுக்குக் கல்வி கற்பிப்பதன் அவசியத்தை இது எடுத்துக்காட்டுகிறது, இதனால் மக்கள் ஆணைக்குழுவை எப்போது தொடர்பு கொள்ள வேண்டும் என்பதை அறிவார்கள்.

## b. ஊழலின் தன்மை, காரணங்கள் மற்றும் விளைவுகள்

பொது கணக்கெடுப்பில் பதிலளித்தவர்களில் சுமார் 49% பேர் தாங்கள் தனிப்பட்ட முறையில் இலஞ்சம் கொடுத்ததாக ஏற்றுக்கொண்டனர், அதே நேரத்தில் 18% பேர் தாங்கள் ஊழலை அனுபவித்திருக்கிறீர்களா என்பது குறித்து உறுதியாக தெரியவில்லை. பணம், பொருட்கள், சேவைகள் மற்றும் பாலியல் சலுகைகள் என இலஞ்சம் வழங்கப்பட்டதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன.




*படம் 4 - இலஞ்சங்களின் வகைகள்*

பதிலளித்தவர்களிடையே இது போன்ற இலஞ்சம் கொடுப்பதற்கான பொதுவான காரணங்கள் அபராதம் செலுத்துவதைத் தவிர்ப்பதும், பொது நிறுவனங்களில் நிர்வாக செயன்முறைகளை விரைவுபடுத்துவதும் ஆகும்.




*படம் 5: இலஞ்சம் கொடுப்பதற்கான காரணங்கள்.*

மேற்கண்ட காரணங்களுடன் மேலதிகமாக, பதிலளித்தவர்கள் பின்வரும் காரணங்களையும் அடையாளம் கண்டனர்

- பிள்ளைகளைப் பாடசாலைக்கு சேர்க்க
- ஒரு மருத்துவரிடம் சந்திப்பைப் பெறுவதற்கு
- பதவி உயர்வு பெற
- கேள்விப் பத்திரங்களை நிறைவேற்ற வேண்டும் என்பதற்கு
- தேர்தல்களின் போது அரசியல் நன்மையினை பெற
- பொலிஸ் உத்தியோகத்தர்கள் அல்லது பிற அரச அதிகாரிகளுக்கு பயந்து

இலங்கையில் பலருக்கு ஊழல் ஒரு “வாழ்க்கை முறையாக” மாறிவிட்டது என்பதை கணக்கெடுப்பு முடிவுகள் தெளிவாகக் காட்டுகின்றன. இது பொதுத்துறை அல்லது அதன் ஊழியர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட பிரச்சினை அல்ல மாறாக, பல தனிநபர்கள் ஊழலை தனிப்பட்ட ஆதாயங்கள் மற்றும் நன்மைகளை அடைவதற்கான ஏற்றுக்கொள்ளக்கூடிய வழிமுறையாகக் கருதுகின்றனர். ஊழலின் முதன்மைக் காரணங்களும் பயனாளிகளும் பொதுத்துறைக்குள் காணப்பட்டாலும், இலங்கையில் ஊழல் ஒரு பரவலான கலாச்சாரமாக வளர்ந்துள்ளது.

இலங்கையில் இலஞ்ச கலாச்சாரத்திற்கு பங்களிக்கும் காரணிகளை ஆராயும்போது, பலவீனமான சட்ட அமுலாக்கம், குறைந்த சம்பள அளவுகள் மற்றும் அதனை முறைப்பாடு செய்யாது இலஞ்சத்தை பொதுவாக ஏற்றுக்கொள்வது ஆகியவை சமூகத்தில் ஊழல் நடைமுறைகளை ஒரு வாழ்க்கை முறையாகப் பழக்கப்படுத்துவதிலும் இயல்பாக்குவதிலும் குறிப்பிடத்தக்க பங்களிப்பு வழங்குகின்றன என்பதை கணக்கெடுப்பின் ஊடக அறியக்கூடியதாகவிருக்கின்றது. நீண்ட காலத்திற்கு ஊழல் நடைமுறைகளைத் தடுப்பது இந்த முக்கிய முறையான பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதை உள்ளடக்கியிருக்கலாம்.




*படம் 6: ஊழல் நிறைந்த கலாச்சாரத்திற்கான காரணங்கள் குறித்த பொதுமக்களின் கருத்து*

மேலும், 2023 GDA பொதுத்துறையில் ஊழலுக்கான பல காரணங்களையும், துறைகளின் குறுக்குவெட்டுத்தன்மையையும், பொது கொள்முதலில் உள்ள சிக்கல்களையும் அடையாளம் கண்டுள்ளது. அதிக மதிப்புள்ள ஊழல் பெரும்பாலும் அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களுடன் தொடர்புடையது என்று அடையாளம் கண்டுள்ளது, இது பொது நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு இடையேயான வலுவான தொடர்புகளை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது, குறிப்பாக நிதித்துறையில். பொது கொள்முதல், அரசு ஒப்பந்தம் மற்றும் மூலோபாய முதலீடுகளுக்கு சலுகைகளை வழங்குதல் போன்ற துறைகளில் கொள்கை உருவாக்கம் மற்றும் செயல்படுத்தலில் வழங்கப்படும் குறிப்பிடத்தக்க விருப்புரிமை ஊழலுக்கான பாதிப்புகளை அதிகரித்துள்ளது, ஏனெனில் இந்த களங்களில் அரசு நடவடிக்கைகள் எளிதில் சவால் செய்யப்படுவதில்லை, இது வெளிப்படைத்தன்மை இல்லாத பல துண்டுகளான அதிகார அமைப்பு மற்றும் ஒரு சில தனிநபர்களின் கைகளில் பொறுப்புகள் குவிவதால் நிலைமை மோசமாகிறது. இது பொது மற்றும் தனியார் உயர்மட்ட அலுவலர்களை இணைக்கும் நீண்டகால உறவுகள் உறவினர்கள் மற்றும் சார்புக்கு வழிவகுக்கிறது என்பதைக் குறிக்கிறது. எந்தவொரு வருடத்திலும் CIABOC பெறும் பெரும்பாலான முறைப்பாடுகள் பதவி துஷ்பிரயோகம் (அல்லது “ஊழல்” குற்றம்) தொடர்பானவை, இது இந்த தொடர்புகளை எடுத்துக்காட்டுகிறது.

இலங்கையில் ஊழலின் விலை பன்முகத்தன்மை கொண்டது மற்றும் சமூகம் மற்றும் பொருளாதாரத்தின் பல்வேறு அம்சங்களை பாதிக்கிறது. ஊழலின் ஒட்டுமொத்த செலவின் துல்லியமான எண் புள்ளிவிவரங்களை துல்லியமாகக் கூறுவது கடினம் என்றாலும், அதன் பரவலான தன்மை நாட்டின் வளர்ச்சி மற்றும் நல்வாழ்வை கணிசமாக பாதிக்கிறது. அரசாங்க விலைமனுக்களை கொள்முதல் தொடர்பான ஊழலால் இலங்கைக்கு ஆண்டுதோறும் ஏற்படும் இழப்பு நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தோராயமாக 1% ஆகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது[4], அதாவது ஊழல் நாட்டிற்கு குறிப்பிடத்தக்க பொருளாதார இழப்புகளுக்கு வழிவகுக்கும், இது பில்லியன் கணக்கான டொலர்களில் மதிப்பிடப்பட்டுள்ளது. நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கு ஊழலை எதிர்கொள்வது இன்றியமையாததென்று ஐக்கிய நாடுகள் சபை அடையாளம் கண்டுள்ளது. ஏனெனில், பரவலான ஊழல் அரசு நிறுவனங்களில் பொதுமக்களின் நம்பிக்கையை இல்லாதொழித்து, ஏமாற்றத்திற்கும் குடிமை நடவடிக்கைகளில் ஈடுபாட்டின்மைக்கும் வழிவகுக்கிறது, இது சமூக ஒப்பந்தத்தை பலவீனப்படுத்துகிறது மற்றும் "நம்பிக்கை பற்றாக்குறையை" அதிகரிக்கிறது[5]. இது வெளிநாட்டு முதலீட்டைப் பாதிக்கிறது, வணிகம் செய்வதற்கான செலவை அதிகரிக்கிறது, இதன் விளைவாக பொருளாதார வளர்ச்சியைத் தடுக்கிறது. ஊழல் பொது சேவைகளின் தரத்தையும் குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது, இது சுகாதாரம், கல்வி மற்றும் உள்கட்டமைப்பில் திறமையின்மைக்கு வழிவகுக்கிறது. இது குடிமக்களுக்கு போதுமான சேவைகள் இல்லாததற்கும் ஒட்டுமொத்த வாழ்க்கைத் தரத்தைக் குறைப்பதற்கும் வழிவகுக்கும். ஊழல் பெரும்பாலும் பரந்த மக்கள் தொகையின் இழப்பில் ஒரு சிறிய உயரடுக்கிற்கு பயனளிக்கிறது, சமூக ஏற்றத்தாழ்வுகளை அதிகரிக்கிறது மற்றும் அதிகார ஏற்றத்தாழ்வுகள், ஊதிய ஏற்றத்தாழ்வுகள், குறைந்த வாழ்க்கைத் தரங்கள் மற்றும் வாழ்க்கைச் செலவுகளை அதிகரிப்பதன் மூலம் சமூக இயக்கத்தைத் தடுக்கிறது.

இதன் விளைவாக, ஊழலின் பரவலான விளைவுகள் உடனடி நிதி இழப்புகளுக்கு அப்பால் நீண்டு, இலங்கையின் சமூகக் கட்டமைப்பு, பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் சர்வதேச நற்பெயரைப் பாதிக்கின்றன என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். எனவே, ஊழலைக் கையாள்வது என்பது நிர்வாகத்தின் ஒரு விடயம் மட்டுமல்ல நிலையான வளர்ச்சி, சமூக சமத்துவம், வெளிநாட்டு முதலீடுகளை வளர்ப்பதற்கும், மிகவும் வெளிப்படையான, பொறுப்புணர்வு மற்றும் வளமான எதிர்காலத்திற்கு வழி வகுக்கும்.

4 https://www.dailymirror.lk/business-news/Sri-Lankas-annual-loss-due-to-government-tender-corruption-amounts-to-1-of-Gross-Domestic-Product-Verit%C3%A9-Research/273-29801222

5 https://unis.unvienna.org/unis/en/pressrels/2023/uniscp1172.html

## C. ஊழலைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள்

இலங்கையில் ஊழலைக் கட்டுப்படுத்த தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளை மதிப்பிடும் போது, நாட்டில் தற்போதுள்ள சட்ட மற்றும் கொள்கை கட்டமைப்பை ஆராய்வது முக்கியமானதாகும். 2022 "அரகலயா" (மக்கள் போராட்டம்) இற்கு பிறகு இலங்கை பொருளாதார மற்றும் அரசியல் சீர்திருத்தப் பாதையில் தொடர்ந்து செல்லும் நிலையில், பாராளுமன்றம் 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க ஊழல் எதிரப்பு சட்டத்தை இயற்றியது. இந்தச் சட்டத்தின் கூறப்பட்ட நோக்கங்களில் ஜனநாயக சமூகத்தின் நலனுக்காக இலஞ்சம் மற்றும் ஊழலைத் தடுப்பது மற்றும் ஒழிப்பது பொது பங்கேற்பு உட்பட நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் நேர்மையை மேம்படுத்துதல் சட்டத்தின் செயல்படுத்தலை மேற்பார்வையிடவும் ஊழல் தொடர்பான குற்றங்களை விசாரித்து வழக்குத் தொடரவும் ஒரு சுயாதீன ஆணைகுழுவை நிறுவுதல் ஊழலைத் தடுப்பது குறித்த கல்வி முயற்சிகளை நடத்துதல் சட்டவிரோத செயற்பாடுகளை தடுக்க ஒரு வலுவான சொத்துகளை வெளிப்படுத்தல் அறிவிப்பு முறையை செயல்படுத்துதல் ஊழலை எதிர்த்துப் போராடுவதில் நிறுவனங்களுக்கு இடையேயான மற்றும் சர்வதேச ஒத்துழைப்பை வளர்ப்பது மற்றும் சர்வதேச கடமைகள் மற்றும் சிறந்த நடைமுறைகளை செயல்படுத்துதல் ஆகியவை அடங்கும்.

மேற்கூறியவற்றைக் கருத்திற் கொண்டு இலங்கை நாடுகளுக்கு இடையிலான பரஸ்பர ஒத்துழைப்புக்களை பெரும் வகையில் புதிய சட்டத்தை ஏற்படுத்தியுள்ளது. அதன் மூலமாக அதன் சர்வதேச கடமைகளை அதன் உள்நாட்டு சட்ட கட்டமைப்பில் இணைக்க வெளிப்படையான நடவடிக்கைகளை எடுத்துள்ளது என்பது தெளிவாகிறது. மேலும், ஊழல் எதிர்ப்பு சட்டம் (அத்தியாயம் 26), 1994 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்யும் ஆணைக்குழுச் சட்டம் மற்றும் 1975 ஆம் ஆண்டு 1 ஆம் இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள்

வெளிப்படுத்தல் சட்டம் ஆகியவற்றை இரத்து செய்த அதே வேளையில், ஊழல் எதிர்ப்பு சட்டம் முந்தைய சட்ட கட்டமைப்பின் கீழ் இருந்த ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகளின் நோக்கத்தை மேம்படுத்தியுள்ளது. உதாரணமாக, இந்தச் சட்டம் CIABOC இன் செயல்பாட்டு மற்றும் நிதி சுதந்திரத்தை மேம்படுத்துகிறது மற்றும் ஊழலைத் தடுப்பதற்கும் அரசாங்கத்தின் ஊழல் எதிர்ப்புக் கொள்கைகளை செயல்படுத்துவதற்கும் வெளிப்படையாக விதிகளை உள்ளடக்கியது. இது தலைவர் மற்றும் சுயாதீன சுயாதீன ஆணைக்குழுக்களின் உறுப்பினர்கள் போன்ற முன்னர் விலக்கு அளிக்கப்பட்ட அதிகாரிகளுக்கும் சொத்து அறிவிப்புத் தேவைகளை விரிவுபடுத்துகிறது. முந்தைய சட்ட கட்டமைப்பில் உள்ள இடைவெளிகளை நிவர்த்தி செய்வதோடு மட்டுமல்லாமல், நாட்டில் ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகள் மற்றும் நிறுவனங்களின் நோக்கம் மற்றும் ஆணைக்குழு அதிகரிக்க ஊழல் எதிர்ப்புச் சட்டம் புதிய விதிகளையும் அறிமுகப்படுத்தியது. அத்தகைய விதிகளில், சட்டத்தின் கீழ் புதிய குற்றங்கள், செல்வாக்குடன் வர்த்தகம் செய்தல்[6], வெளிநாட்டு அதிகாரிக்கு இலஞ்சம் கொடுத்தல்[7], தனியார் துறையில் இலஞ்சம் கொடுத்தல்[8], வட்டி மோதலை அறிவிக்கத் தவறுதல்[9] மற்றும் விளையாட்டு தொடர்பான குற்றங்கள்[10] ஆகியவை குறிப்பிடத்தக்கவை. மேலும், இலஞ்சம் கொடுத்தோ அல்லது இலஞ்சத்தின் மூலம் பெறப்பட்டதாகக் கண்டறியப்பட்ட அசையும் அல்லது அசையாச் சொத்துக்களை அனைத்து சுமைகளிலிருந்தும் விடுவித்து அரசுக்கு பறிமுதல் செய்ய உத்தரவிட நீதிமன்றத்திற்கு பிரிவு 109 அதிகாரம் அளிக்கிறது. பிரிவு 112 இல், இந்தச் சட்டம் 2006 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க நிதி துய்த்தாக்கல் தடுப்புச் சட்டத்தின் தொடர்பிற்கும் இடையே ஒரு தொடர்பை உருவாக்குகிறது, இதன் மூலம் பணமோசடி நிகழ்வுகளை உறுதி செய்கிறது. ஊழல் நடைமுறைகளைப் முறைப்பாடளிக்கும் தகவல் தெரிவிப்பவர்களின் பாதுகாப்பையும் இந்தச் சட்டம் வழங்குகிறது, அவர்கள் பழிவாங்கும் அச்சமின்றி அவ்வாறு செய்ய முடியும் என்பதை உறுதி செய்கிறது.

6 ஊழல் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 104

7 ஊழல் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 105

8 ஊழல் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 106

9 ஊழல் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 107

10 ஊழல் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 108

கூடுதலாக, 2023 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க தேர்தல் செலவின ஒழுங்குமுறைச் சட்டத்தின் மூலம் தேர்தல் பிரச்சார நிதியை ஒழுங்குபடுத்துவதற்கான விரிவான சட்ட கட்டமைப்பை நாடாளுமன்றம் இயற்றியது. உள்ளூர் அதிகாரசபை, மாகாண சபை, நாடாளுமன்றம் மற்றும் ஜனாதிபதித் தேர்தல்கள் உட்பட அனைத்து மட்டங்களிலும் தேர்தல் பிரச்சார நிதி மற்றும் செலவு தொடர்பான முக்கியமான விதிமுறைகளை இந்தச் சட்டம் அறிமுகப்படுத்தியது. அரசாங்கத் துறைகள், குறிப்பிடத்தக்க அரசு உரிமையைக் கொண்ட நிறுவனங்கள், வெளிநாட்டு அரசாங்கங்கள், சர்வதேச அமைப்புகள் மற்றும் பெயர் குறிப்பிடப்படாத ஆதாரங்கள் உள்ளிட்டவற்றிலிருந்து நன்கொடைகளை ஏற்றுக்கொள்வது மற்றும் செலவினங்களுக்கு இந்தச் சட்டம் கட்டுப்பாடுகளை விதிக்கிறது. 2024 ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களில் சட்டத்தின் விதிகள் பயன்படுத்தப்பட்டன.

UNCAC இன் பிரிவுகள் 5 மற்றும் இணை நடைமுறைப்படுத்தும் வகையில், விரிவான மற்றும் ஒருங்கிணைந்த செயல் திட்டத்தைக் கோரும் இலங்கை, 2019-2023 ஆம் ஆண்டிற்கான இலஞ்சம் மற்றும் ஊழலை எதிர்த்துப் போராடுவதற்கான அதன் முதல் தேசிய செயற்றிட்டத்தை உருவாக்கியது. இந்த NAP, நிலையான வளர்ச்சி இலக்குகளை (SDGs) நாடு பின்தொடர்வதையும், குறிப்பாக இலக்கு 16 - அமைதி, நீதி மற்றும் வலுவான நிறுவனங்களை ஆதரிக்கிறது. கூடுதலாக, இது திறந்த அரசாங்க கூட்டாண்மை (OGP) மற்றும் GSP+ வர்த்தக சலுகைகளின் கீழ் இலங்கையின் உறுதிமொழிகளை நிவர்த்தி செய்கிறது, இது ஊழல் எதிர்ப்பு கட்டமைப்பை மேம்படுத்துவதற்கும், பொது, தனியார் மற்றும் சிவில் சமூகத் துறைகளை உள்ளடக்கிய ஊழல் எதிர்ப்பு முயற்சிகளின் முத்தரப்பு மேற்பார்வை மற்றும் உரிமையை ஊக்குவிப்பதற்கும் ஊழல் தடுப்பு செயல் திட்டத்தின் அவசியத்தை வலியுறுத்தியது. இந்த NAP இன் அடிப்படையில், சர்வதேச அமைப்புகள் மற்றும் பிற சிவில் சமூக அமைப்புகளின் நிதி உதவியுடன், CIABOC, சர்வதேச அமைப்புகள் மற்றும் பிற சிவில் சமூக அமைப்புகளின் நிதி உதவியுடன், பொது மக்களையும் பொது அதிகாரிகளையும் குறிவைத்து தீவு முழுவதும் விழிப்புணர்வு பிரச்சாரங்களை நடத்தியது. மேலும், முந்தைய NAP இன் பல்வேறு அம்சங்களை செயல்படுத்த உலக வங்கி, IMF மற்றும் UNDP உள்ளிட்ட சர்வதேச அமைப்புகள் CIABOC இற்கு தொழில்நுட்ப ஆதரவை வழங்கியுள்ளன.

கூடுதலாக, அரசியலமைப்பு ரீதியாகவும் அல்லது சட்டபூர்வமாகவும் நிறுவப்பட்ட சுயாதீன ஆணைக்குழுக்கள், தகவல் உரிமை ஆணைக்குழு, தேர்தல் ஆணைக்குழு மற்றும் தேசிய கொள்முதல் ஆணைக்குழு ஆகியவை நாட்டின் ஊழல் எதிர்ப்பு நிகழ்ச்சி நிரலில் முக்கிய பங்களிப்பினை வழங்குகின்றது. இந்த அமைப்புகள், முன்கூட்டியே வெளிப்படுத்தல் தேவைகள், தகவல் கோரிக்கைகளுக்கான அணுகல், பொது ஆலோசனைகள் மற்றும் பொறுப்புக்கூறலை ஊக்குவிப்பதற்கான கருத்து போன்ற வழிமுறைகள் மூலம் நிர்வாகத்தில் குடிமக்களின் ஈடுபாட்டை ஊக்குவிக்கின்றன.

இலங்கையில் அரசு சேவைகளை டிஜிட்டல் மயமாக்குவதற்கும், செயல்பாடுகளை ஒழுங்குபடுத்துவதற்கும், செயல்திறனை மேம்படுத்துவதற்கும் அடுத்தடுத்த அரசாங்கங்களும் பணியாற்றியுள்ளன. அரசு சேவைகளை இணையத்தளத்தில் நகர்த்துவது, நேரடி தொடர்புகளைக் குறைக்கிறது, இது ஊழலுக்கான வாய்ப்புகளைக் குறைக்கும். அரசாங்க தகவல் அமைப்புகளில் இயங்குதன்மையை உறுதி செய்வதற்கான திறந்த தரநிலைகளின் தொகுப்பான இலங்கை இடை செயற்பாட்டு (Lanka interoperability framework) கட்டமைப்பு, பல்வேறு அரசு நிறுவனங்கள் தகவல்களைத் தடையின்றிப் பகிர்ந்து கொள்வதையும், பொது சேவைகளின் மனித இடைமுகத்தைக் குறைப்பதையும் உறுதி செய்வதற்காகவும் நியமிக்கப்பட்டது. மனித தொடர்புகளைக் கட்டுப்படுத்துவது ஊழலுக்கான வாய்ப்புகளைக் குறைக்கும். இருப்பினும், அரசு சேவைகளை டிஜிட்டல் மயமாக்குவது நாட்டில் மட்டுப்படுத்தப்பட்ட வெற்றியை மட்டுமே பெற்றுள்ளது, உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கும், குடிமக்கள் மற்றும் அதிகாரிகளிடையே டிஜிட்டல் கல்வியறிவை மேம்படுத்துவதற்கும், வலுவான சைபர் பாதுகாப்பு நடவடிக்கைகளை உறுதி செய்வதற்கும் மேலும் ஒருங்கிணைந்த முயற்சிகளை அவசியமாக்குகிறது. கூடுதலாக, சவால்களை நிவர்த்தி செய்வதற்கும், இணையத்தள சேவைகளின் நன்மைகளை மேம்படுத்துவதற்கும், இறுதியில் மிகவும் வெளிப்படையான மற்றும் திறமையான நிர்வாக அமைப்புக்காக பாடுபடுவதற்கும் பங்குதாரர்களின் ஈடுபாட்டின் தொடர்ச்சியான தேவை உள்ளது.

# 04. இலங்கையிலிருந்து இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிப்பதற்கான தேசிய செயற்பாட்டுத்திட்டம் 2019-2023 இன் நடைமுறைப்படுத்தலினூடான வெளிப்படுத்தல்கள்

இலங்கையில் இலஞ்சம் மற்றும் ஊழலை எதிர்த்துப் போராடுவதற்கான தேசிய செயற்பாட்டுத் திட்டத்தின் மதிப்பீடு 2019-2023 மிக முக்கியமானது, ஏனெனில் இது கடந்த கால உத்திகள் மற்றும் முன்முயற்சிகளின் செயல்திறன் பற்றிய நுண்ணறிவுகளை வழங்குகிறது, எது சிறப்பாக செயல்பட்டது, எது செயல்படவில்லை என்பதை அடையாளம் காண உதவுகிறது. இந்த கண்டறிதல் கொள்கை வகுப்பாளர்கள் வெற்றிகள் மற்றும் தோல்விகளில் இருந்து கற்றுக்கொள்ள அனுமதிக்கிறது, தற்போதைய திட்டம் ஆதாரங்களின் உறுதியான அடித்தளத்தில் கட்டமைக்கப்பட்டுள்ளது என்பதை உறுதி செய்கிறது. இது செயல்படுத்தும் நிறுவனங்களிடையே பொறுப்புணர்வை வளர்க்கிறது, ஊழலை எதிர்த்துப் போராடுவதில் தங்கள் பங்குகளை உரிமையாக்க ஊக்குவிக்கிறது.

2019-2023 NAP இன் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு, ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட சுயாதீன நிபுணர்கள் குழுவைக் கொண்ட "தேசிய நேர்மைதன்மை கூட்டமைப்பினால்" நடத்தப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. NAP செயல்படுத்தல் குறித்த அவ்வப்போது மதிப்பாய்வுகளை மேற்கொள்வதுடன் முக்கிய செயல்திறன் குறிகாட்டிகளை (KPI) சரிசெய்தல் மற்றும் தேவைப்பட்டால் கூடுதல் வளங்களை ஒதுக்க பாதீடு நிறுவனங்களை வழிநடத்துவது ஆகியவை பேரவை மற்ற பணிகளுக்கு இடையேயான கடமையாகும். NAP திறம்பட செயல்படுத்தப்படுவதை உறுதி செய்வதற்காக, ஜனாதிபதி செயலகத்திற்கு அவ்வப்போது அறிக்கை அளிக்கவும் இது தேவைப்பட்டது. இருப்பினும், தேசிய நேர்மைதன்மை பேரவை இன்றுவரை ஜனாதிபதியால் நியமிக்கப்படவில்லை, இது 2019-2023 NAP இன் பயனுள்ள கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டை சீர்குலைத்தது.

இதன் விளைவாக, கண்டறிதலின் நோக்கங்களுக்காக, NAP இல் ஒவ்வொரு நிறுவனத்திற்கும் ஒதுக்கப்பட்ட செயல்பாடுகளின் செயல்படுத்தல் குறித்த முன்னேற்ற புதுப்பிப்பை வழங்க அனைத்து பொறுப்பான நிறுவனங்களும் கேட்டுக் கொள்ளப்பட்டன. ஒவ்வொரு செயல்பாடும், அதாவது நிறைவு செய்யப்பட்டதா/ செயல்பாட்டில் உள்ளதா/ அல்லது செயல்படுத்தப்படவே இல்லையா என்ற நிலையை வழங்க இந்த நிறுவனங்கள் கேட்டுக் கொள்ளப்பட்டன, மேலும் ஒவ்வொரு செயல்பாடு தொடர்பான ஏதேனும் சவால்கள் மற்றும் அவதானிப்புகளையும் வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன.

## a. செயலாக்கநிலை

ஆரம்பத்தில் டிசம்பர் 2023 இல் காலாவதியாகவிருந்த NAP 2019-2023, அமைச்சரவை முடிவின் மூலம் டிசம்பர் 2024 வரை நீட்டிக்கப்பட்டது, அதன் செயல்படுத்தல் காலத்தில் மிதமான முன்னேற்றத்தை அடைந்துள்ளது. உத்தி D (சட்டம் மற்றும் கொள்கைச் சீர்திருத்தம்) இன் கீழ் பெரும்பாலான நடவடிக்கைகள் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டுள்ளன, மேலும் தொடர்புடைய நோக்கங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. கூடுதலாக, உத்தி C (CIABOC மற்றும் பிற சட்ட அமுலாக்க நிறுவனங்களின் நிறுவன வலுப்படுத்தல்) இன் கீழ் CIABOC இற்கு ஒதுக்கப்பட்ட பல நிறுவன மற்றும் செயல்பாட்டு சீர்திருத்தங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன, உத்தி B (மதிப்பு அடிப்படையிலான கல்வி மற்றும் சமூக ஈடுபாடு) இன் ஒரு பகுதியாக ஊழல் எதிர்ப்புச் செய்திகளைப் பரப்புவதற்கான பொருள் உருவாக்கத்துடன்.

பல்வேறு பொறுப்புள்ள நிறுவனங்களின் முன்னேற்ற அறிக்கைகள், உத்தி A (தடுப்பு நடவடிக்கைகள்) மற்றும் உத்தி B இல் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள பல விழிப்புணர்வு முயற்சிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன என்பதைக் குறிக்கின்றன. இருப்பினும், தடுப்புக் கொள்கைகளை உருவாக்குதல் மற்றும் பள்ளிகள், பல்கலைக்கழகங்கள், தொழிற்கல்வி பயிற்சி மற்றும் பொது அதிகாரிகளின் பயிற்சிக்கான பாடத்திட்டங்களில் ஊழல் எதிர்ப்பு கல்வியை ஒருங்கிணைத்தல் போன்ற பிற முக்கியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. தனியார் துறையுடன் ஈடுபாடு மற்றும் ஒத்துழைப்புக்கு அழைப்பு

விடுத்த பெரும்பாலான நடவடிக்கைகள் கவனிக்கப்படாமல் உள்ளன. NAP இன் செயல்திறனை மேம்படுத்தவும், எதிர்காலத்திற்கான மிகவும் விரிவான மற்றும் நிலையான ஊழல் எதிர்ப்பு உத்தியை உறுதி செய்யவும், இந்த பகுதிகளில் முன்னோக்கிச் செல்வதில் புதுப்பிக்கப்பட்ட கவனம் செலுத்த வேண்டியதன் அவசியத்தை இது எடுத்துக்காட்டுகிறது..

## b. முக்கிய பிரச்சினைகள் மற்றும் சவால்கள்

2019-2023 ஆம் ஆண்டுக்கான NAP-இணை வெற்றிகரமாக செயற்படுத்துவதற்கான முக்கிய சவால், தேசிய நேர்மைதன்மை பேரவையினை நியமிக்கத் தவறியதாகும். NAP இணை அவ்வப்போது மதிப்பாய்வு செய்து சரிசெய்தல் செய்யும் பணி இந்த அமைப்பில் இருந்ததால், இந்த நிறுவனம் இல்லாததால் NAP இன் முன்னேற்றம் குறித்த சரியான நேரத்தில் மதிப்பீடுகள் இல்லாதது ஏற்பட்டது. இது நடவடிக்கைகளின் முன்னேற்றத்தை திறம்பட கண்காணிப்பதையும், விளைவுகளை மதிப்பிடுவதையும், அத்தகைய மதிப்பீடுகளின் அடிப்படையில் தலையீடுகளை மறு மதிப்பீடு செய்வதையும் தடுத்தது. எனவே, அதிகபட்ச தாக்கத்தை ஏற்படுத்த நடவடிக்கைகளை சரியான நேரத்தில் சரிசெய்ய முடியவில்லை. இதிலிருந்து கற்றுக்கொண்ட பாடம் என்னவென்றால், அரசியலின் மாறுபாடுகளுக்கு ஆளாகக்கூடிய புதிய கட்டமைப்புகளை உருவாக்குவதற்குப் பதிலாக, கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டிற்கு ஏற்கனவே உள்ள கட்டமைப்புகளைப் பயன்படுத்துவதாகும்.

கூடுதலாக, பல்வேறு நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்ட ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகளின் செயற்திறனை பல சவால்கள் தடுத்தன என்பதை பொறுப்பான நிறுவனங்களின் கருத்து வெளிப்படுத்துகிறது, அவை கீழே கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன :

**a. வரையறுக்கப்பட்ட வளங்கள் :** மனித, நிதி மற்றும் உட்கட்டமைப்பு வளங்களின் குறிப்பிடத்தக்க பற்றாக்குறை உள்ளது. போதுமான வளங்கள் இல்லாதது தேவையான கருவிகள் மற்றும் தொழில்நுட்பங்களில் முதலீடு செய்யும் திறனைக் கட்டுப்படுத்துகிறது, அதே போல் சமீபத்திய ஊழல் எதிர்ப்பு உத்திகள், சட்ட மாற்றங்கள் மற்றும் சிறந்த நடைமுறைகள் குறித்து தொடர்ந்து அறிந்திருக்கத் தேவையான பயிற்சித் திட்டங்களிலும். அமுலாக்க நிறுவனங்களுக்கு ஒதுக்கப்படும் போதுமான வளங்கள் ஊழல் வழக்குகளை திறம்பட விசாரித்து வழக்குத் தொடரும் திறனைத் தடுக்கின்றன.

**b. பணிச்சுமை கட்டுப்பாடுகள்:** அதிக பணிச்சுமை அதிகாரிகள் அத்தியாவசிய பயிற்சித் திட்டங்களில் பங்கேற்பதைத் தடுக்கிறது, இதனால் அவர்களின் திறன்கள் மற்றும் அறிவை மேம்படுத்தும் திறன் கட்டுப்படுத்தப்படுகிறது. அதிகாரிகள் பொறுப்புகளில் மூழ்கும்போது, அவர்கள் பெரும்பாலும் நீண்டகால திறன் மேம்பாட்டை விட உடனடி பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கிறார்கள், இதனால் பயிற்சி அமர்வுகளில் கலந்து கொள்ள தயக்கம் அல்லது இயலாமை ஏற்படுகிறது. இந்த பங்கேற்பின்மை ஊழல் எதிர்ப்பு உத்திகளில் சமீபத்திய அறிவு மற்றும் சிறந்த நடைமுறைகளுக்கான அணுகலைக் கட்டுப்படுத்துகிறது, மேலும் வளர்ந்து வரும் சவால்களுக்கு திறம்பட பதிலளிக்கும் திறனைக் குறைக்கிறது.

**c. தொடர் பயிற்சி தேவை:** ஊழல் எதிர்ப்பு முயற்சிகளில் வேகத்தைத் தக்கவைத்துக்கொள்வதற்கும், வளர்ந்து வரும் சவால்களுக்கு ஏற்ப மாற்றுவதற்கும் தொடர்ச்சியான பயிற்சி மற்றும் கல்வி முயற்சிகள் அவசியம். தொடர்ச்சியான பயிற்சி மற்றும் கல்வி முயற்சிகள் இல்லாதது ஊழல் எதிர்ப்பு முயற்சிகளை கணிசமாகக் குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது, ஊழலை எதிர்த்துப் போராடுவதில் நிலையான வெற்றிக்கு ஒரு தடையை உருவாக்குகிறது. வழக்கமான பயிற்சி இல்லாமல், தற்போதைய ஊழல் எதிர்ப்பு உத்திகள், சட்ட கட்டமைப்புகள் மற்றும் ஊழல் நடைமுறைகளில் வளர்ந்து வரும் போக்குகள் பற்றிய புரிதலில் பணியாளர்கள் காலாவதியாகி விடுகிறார்கள். இந்த அறிவு இடைவெளி ஊழலை திறம்பட அடையாளம் கண்டு எதிர்த்துப் போராடுவதற்கான அவர்களின் திறனைத் தடுக்கலாம், இதனால் நிறுவனங்கள் புதிய வடிவிலான ஊழலுக்கு ஆளாக நேரிடும். இது ஒரு மெத்தனப் போக்கு கலாச்சாரத்திற்கும் வழிவகுக்கிறது, அங்கு ஊழியர்கள் சந்தேகத்திற்கிடமான செயல்பாடுகளைப் முறைப்பாடளிப்பது அல்லது தேவையான சீர்திருத்தங்களுக்கு வாதிடுவது குறைவு.

**d.** **நிறுவன ரீதியான எதிர்ப்பு :** நிறுவனங்களுக்குள் ஏற்படும் எதிர்ப்பு, ஊழலுக்கு எதிரான முயற்சிகளை ஏற்றுக்கொள்வதிலும் செயல்படுத்துவதிலும் சில நேரங்களில் தடையாக உள்ளது, பெரும்பாலும் அவற்றில் வேரூன்றிய நடைமுறைகள் மற்றும் மனநிலைகள் காரணமாக. புதிய ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தும் முயற்சிகள் சந்தேகம் அல்லது நேரடி எதிர்ப்பை சந்திக்கின்றன. பல ஆண்டுகளாக இந்த கட்டமைப்புகளுக்குள் செயற்பட்டு வரும் ஊழியர்கள், மாற்றத்தை ஏற்றுக்கொள்ள தயங்கலாம், அது அவர்களின் பாத்திரங்களை சீர்குலைக்கும் அல்லது அவர்களின் அதிகாரத்தை சவால் செய்யும் என்று அஞ்சுகிறார்கள்.

**e.** **கலாச்சார மற்றும் கட்டமைப்புத் தடைகள்:** நிறுவனங்களுக்குள் உள்ள முறைசாரா கலாச்சாரங்கள் மற்றும் கட்டமைப்புத் தடைகள், குறிப்பாக தனியார் துறைக்குள், வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை ஊக்குவிப்பதற்கான முயற்சிகளை குறைமதிப்பிற்கு உட்படுத்தக்கூடும். இந்த கலாச்சார விதிமுறைகள் ஊழியர்கள் தவறான நடத்தையைப் முறைப்பாடளிப்பதையோ அல்லது பொறுப்புக்கூறலைத் தேடுவதையோ தடுக்கலாம், இது அமைதி மற்றும் உடந்தையாக இருக்கும் சூழலை வளர்க்கும். மேலும், நிறுவனங்களுக்கு நெறிமுறை நடத்தை குறித்த தெளிவான கொள்கைகள் அல்லது வழிகாட்டுதல்கள் இல்லாதபோது, ஊழியர்கள் அவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படும் தரநிலைகள் குறித்து நிச்சயமற்றவர்களாக இருக்கலாம், இது சீரற்ற நடைமுறைகளுக்கும் ஊழல் அபாயத்திற்கும் வழிவகுக்கும்.

**f.** **பயனற்ற அமுலாக்கம் :** ஊழலுக்கு எதிரான சட்டங்கள் மற்றும் கொள்கைகளை பயனற்ற முறையில் அமுலாக்குவது அவற்றின் நோக்கம் கொண்ட தாக்கத்தைக் குறைத்து, ஊழல் நடைமுறைகள் நீடிக்க அனுமதிக்கிறது. வலுவான ஊழலுக்கு எதிரான சட்டக் கட்டமைப்பு இருந்தபோதிலும், அமுலாக்க வழிமுறைகள் பலவீனமாகவோ அல்லது சீரற்ற முறையில் பயன்படுத்தப்படும்போது, தனிநபர்களும் அமைப்புகளும் நெறிமுறையற்ற நடத்தைக்கான விளைவுகள் இல்லாததை உணர்கிறார்கள், இது தண்டனையிலிருந்து விலக்கு அளிக்கும் கலாச்சாரத்திற்கு வழிவகுக்கிறது.

**g.** **வலுவான அரசியல் விருப்பம் தேவை:** ஊழல் எதிர்ப்பு முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதற்கும், நேர்மைதன்மையின் கலாச்சாரத்தை வளர்ப்பதற்கும் அரசியல் தலைவர்களிடமிருந்து ஒரு வலுவான அர்ப்பணிப்பு அவசியம். அரசாங்கத் தலைவர்களிடமிருந்து ஒரு வலுவான அர்ப்பணிப்பு இல்லாதது, ஊழல் எதிர்ப்பு முயற்சிகளை முன்னெடுப்பதற்கும், நேர்மைதன்மையின் கலாச்சாரத்தை வளர்ப்பதற்கும், குறிப்பாக தேவையான வளங்களை ஒதுக்கும்போதும், ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகளை திறம்பட செயல்படுத்துவதை உறுதி செய்வதற்கும் ஒரு முக்கியமான தடையாக அமைகிறது. தலைவர்கள் இந்த முயற்சிகளை தீவிரமாக ஆதரிக்கும்போது, அவர்கள் பொறுப்புணர்வின் தொனியை அமைப்பது மட்டுமல்லாமல், அரசாங்கத்திலும் சமூகத்திலும் உள்ள மற்றவர்களையும் இதே போன்ற நிலைப்பாடுகளை எடுக்க ஊக்குவிக்கிறார்கள். நெறிமுறை நடத்தை எதிர்பார்க்கப்படும் மற்றும் வெகுமதி அளிக்கப்படும் ஒரு வெளிப்படையான சூழலை வளர்ப்பதற்கு இந்தத் தலைமை மிக முக்கியமானது. இந்த அர்ப்பணிப்பு இல்லாமல், ஊழல் எதிர்ப்பு முயற்சிகள் அர்த்தமுள்ள மாற்றத்தை ஏற்படுத்த தேவையான ஆதரவையும் உந்துதலையும் இழக்கக்கூடும், இதன் விளைவாக தொடர்ச்சியான ஊழல் சுழற்சி மற்றும் பொது நிறுவனங்களில் நம்பிக்கை பலவீனமடையக்கூடும்.

ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகளின் செயல்திறனை மேம்படுத்துவதற்கும், மிகவும் வெளிப்படையான மற்றும் பொறுப்புணர்வுள்ள நிர்வாக கட்டமைப்பை வளர்ப்பதற்கும் இந்த சவால்களை எதிர்கொள்வது மிகவும் முக்கியமானது. இந்த சிக்கல்களை நிவர்த்தி செய்வது, பயனுள்ள ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு பங்குதாரர்கள் மிகவும் உகந்த சூழலை உருவாக்க உதவும்.



## 05. நிகழ்வுகளின் நிழல்கள் ‘Snapshot’




Date – 5th December, 2024
Venue –Anthurium Hall, Taj Samudra Hotel, Colombo, Sri Lanka





## 06. செயற்றிட்டம் – மூலோபாய முன்னுரிமை பகுதிகள்

***மூலோபாயத்தின் தொடக்கத்தில் ஒவ்வொரு உத்திக்கும் சுருக்கம்***



**A. தடுப்பு நடவடிக்கைகள்**



**B. கல்வி மற்றும் சமூக ஈடுபாடு**



**C. நிறுவன வலுப்படுத்துதலும் அமுலாக்கமும்**



**D. சட்டம் மற்றும் கொள்கை சீர்திருத்தம்**



சிறகுகள் – பாதுகாப்பு

# A. தடுப்பு நடவடிக்கைகள்

## A. தடுப்பு நடவடிக்கைகள்

### *மூலோபாய முன்னுரிமை பகுதி ஒன்று: தடுப்பு நடவடிக்கைகள்*

ஊழல் ஏற்படுவதற்கு முன்பே அதைத் தவிர்ப்பதற்கும், தவறான நடத்தைக்கான வாய்ப்புகளைக் குறைப்பதற்கும், ஊழல் நடத்தையைத் தடுக்க அமைப்புகளை வலுப்படுத்துவதற்கும் தடுப்பு நடவடிக்கைகள் மிக முக்கியமானது. வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் பயனுள்ள மேற்பார்வை வழிமுறைகள் இல்லாத இடங்களில் ஊழல் செழித்து வளரும் என்பதை அங்கீகரிப்பதில் இது அடித்தளமாக உள்ளது. ஊழலைத் தடுப்பதும் UNCAC இன் முக்கிய தூண்களில் ஒன்றாகும். ஊழலுக்கு வழிவகுக்கும் நிலைமைகளைக் குறைப்பதில் கவனம் செலுத்தும் கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகளை செயல்படுத்தவும், ஊழலை அது நிகழும் முன் ஒழிப்பதை நோக்கமாகக் கொண்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கவும் UNCAC உறுப்பு நாடுகளை ஊக்குவிக்கிறது.

“வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் நேர்மைத்திறனை நிறுவனமயமாக்குவதற்காக அனைத்து துறைகளிலும் ஊழல் அபாயங்களைக் குறைப்பதற்கும் நெறிமுறை நடைமுறைகளை ஊக்குவிப்பதற்கும் விரிவான தடுப்பு நடவடிக்கைகளை செயல்படுத்துதல்” என்ற ஒட்டுமொத்த மூலோபாய நோக்கத்துடன், இந்த NACAP “தடுப்பு நடவடிக்கைகள்” என்பதை அதன் முக்கிய மூலோபாய பகுதிகளில் ஒன்றாக முன்மொழிகிறது. NACAP இன் தடுப்பு முக்கியத்துவம் ஊழலை நிவர்த்தி செய்வதற்கான ஒரு விரிவான அணுகுமுறையை வழங்குகிறது, தனிப்பட்ட பொறுப்புக்கூறலில் மட்டுமல்ல, எதிர்கால ஊழல் அபாயங்களிலிருந்து பாதுகாக்கக்கூடிய முறையான கட்டமைப்புகளை வலுப்படுத்துவதிலும் கவனம் செலுத்துகிறது. பின்வரும் பிரிவுகள் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் நல்லாட்சியை ஊக்குவிக்கின்றன, அத்துடன் வலுவான குற்றவியல் நீதி கட்டமைப்புகளை ஊக்குவிக்கின்றன, இலங்கையில் நிலவும் ஊழல் கலாச்சாரத்தை நிவர்த்தி செய்தல், குறைத்தல் மற்றும் இறுதியில் நீக்குதல் என்ற நம்பிக்கையில் ஊழலின் மூல காரணங்களை நிவர்த்தி செய்யவும் அதன்படி, ஊழலைத் தடுப்பதற்கான பின்வரும் ஏழு (07) துணை நோக்கங்களை NACAP முன்மொழிகிறது:

**துணை நோக்கம் 1:** பொதுத்துறைக்குள் ஊழலைத் தடுக்க நேர்மைதிறனை மேம்படுத்துதல் மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை செயல்படுத்துதல்.

**துணை நோக்கம் 2:** பொதுத்துறைக்குள் முரண்பாட்டு ஆர்வ மோதல்கள், சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல்கள் மற்றும் அன்பளிப்பு விதிமுறைகளை நிர்வகிப்பதை மேம்படுத்துதல்.

**துணை நோக்கம் 3:** பொது சேவைகளின் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் செயற்றிறனை மேம்படுத்துவதற்காக மக்கள் பொது சேவைகளுக்கான அணுகலை மேம்படுத்துதல்.

**துணை நோக்கம் 4:** ஊழலைத் தடுக்கவும், பயனுள்ள வள ஒதுக்கீட்டை உறுதி செய்யவும் பொது கொள்முதல் மற்றும் பொது நிதி முகாமையில் நேர்மை மற்றும் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துதல்.

**துணை நோக்கம் 5:** தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் நேர்மை மற்றும் பொறுப்புணர்வை உறுதி செய்வதற்கும், பொதுமக்களின் நம்பிக்கை மற்றும் நெறிமுறை நிர்வாகத்தை வளர்ப்பதற்கும் வலுவான வழிமுறைகளை நிறுவுதல்.

**துணை நோக்கம் 6:** குற்றவியல் நீதி அமைப்பின் நேர்மை மற்றும் செயற்றிறன் குறித்து பொதுமக்களின் நம்பிக்கையை மேம்படுத்துதல்.

**துணை நோக்கம் 7:** தனியார் துறைக்குள் ஊழலைத் தடுக்கவும், நெறிமுறை வணிக நடைமுறைகளை மேம்படுத்தவும் உத்தேச முயற்சிகளை செயற்படுத்துதல்.

ஊழல் நடந்த பிறகு அதற்கு எதிர்வினையாற்றுவதை விட, ஊழலைத் தடுப்பது செலவு குறைந்ததாகவும் நிலையானதாகவும் இருக்கும் என்பதை உணர்ந்தாலும், இந்த நடவடிக்கைகள் பயனுள்ளதாக இருக்க, பொது மற்றும் தனியார் துறைகளிடமிருந்தும், பொதுவாக பொதுமக்களிடமிருந்தும், உலகளாவிய சமூகத்தின் ஆதரவும் அர்ப்பணிப்பும் நிலையான முயற்சிகளும் தேவை என்பதை உறுதியாகக் குறிப்பிடுகிறோம்.

**மூலோபாய நோக்கம்: வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் நேர்மைத்திறனை நிறுவனமயமாக்குவதற்காக அனைத்து துறைகளிலும் ஊழல் அபாயங்களைக் குறைப்பதற்கும் நெறிமுறை நடைமுறைகளை ஊக்குவிப்பதற்கும் விரிவான தடுப்பு நடவடிக்கைகளை செயற்படுத்துதல்.**

**துணை நோக்கம் 1: பொதுத்துறைக்குள் ஊழலைத் தடுக்க நேர்மையை மேம்படுத்துதல் மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை செயல்படுத்துதல்.**

| இல. | அளவீடு/ செயல் | முக்கிய செயல்திறன் குறிகாட்டிகள் (KPIகள்) | கால அளவு | | | பொறுப்பான (முன்னணி) நிறுவனம் | செயல்படுத்தும் முகவர்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | S | M | L | | |
| 1 | ஊழலை எதிர்த்துப் போராடவும், நெறிமுறை நடத்தையை வளர்க்கவும், பொது நிறுவனங்களுக்குள் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்யவும் ஒவ்வொரு அரசு நிறுவனத்திலும் உள்ளக அலுவல்கள் பிரிவுகளை (IAU) நிறுவுதல். | 1. நிறுவப்பட்ட IAU-க்களின் எண்ணிக்கை<br>2. IAU களின் செயல்திறன் மற்றும் வெளிப்படைத்தன்மை தொடர்பான பங்குதாரர் கணக்கெடுப்புகளில் திருப்தி விகிதம் குறைந்தது 75% ஆகும். | S | | | CIABOC மற்றும் ஜனாதிபதி செயலகம் | அனைத்து அரச நிறுவனங்களும் |
| 2 | அனைத்து IAU-க்களின் உறுப்பினர்களுக்கும் அவர்களின் கடமைகளை திறம்படச் செய்வதற்குத் தேவையான அறிவு, திறன்கள் மற்றும் கருவிகளுடன் அவர்களைச் சித்தப்படுத்துவதற்காக, ஐயுரு-வின் செயற்பாட்டு மற்றும் உள்ளடக்க அம்சங்கள் குறித்த தூண்டல் மற்றும் அவ்வப்போது புதிய பயிற்சிகளை நடத்துதல். | 1. அனைத்து பயிற்சி உள்ளீடுகளும் உருவாக்கப்பட்டன.<br>2. நடத்தப்பட்ட பயிற்சி அமர்வுகளின் எண்ணிக்கை<br>3. பயிற்சி பங்கேற்பு விகிதம் குறைந்தது 90% ஆகும்.<br>4. பயிற்சி நிறைவு விகிதம் குறைந்தது 95% ஆகும்.<br>5. பயிற்சிக்குப் பின்னரான அறிவு மதிப்பீடு, அறிவுத் தக்கவைப்பு மற்றும் செயற்பாட்டு மற்றும் பொருள் சார்ந்த அம்சங்களைப் புரிந்துகொள்வதற்கு சராசரியாக 80% ஆகும்.<br>6. ஊழல் சம்பவங்களில் வருடாந்த வீழ்ச்சி | S-M | | | CIABOC | அனைத்து அரச நிறுவனங்களும் |
| 3 | ஊழல் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து IAU க்கு வெளியே உள்ள மற்ற ஊழியர்களுக்கு பயிற்சி அளிக்கவும். | 1. அனைத்து பயிற்சி உள்ளீடுகளும் உருவாக்கப்பட்டன.<br>2. நடத்தப்பட்ட பயிற்சி அமர்வுகளின் எண்ணிக்கை.<br>3. பயிற்சி பங்கேற்பு விகிதம் குறைந்தது 90% ஆகும்.<br>4. பயிற்சி நிறைவு விகிதம் குறைந்தது 95% ஆகும்.<br>5. பயிற்சிக்கு முந்தைய பயிற்சி முதல் பயிற்சிக்கு பிந்தைய மதிப்பீடுகள் வரையிலான மதிப்பெண்களில் அறிவு மேம்பாடு குறைந்தது 30% ஆகும்.<br>6. தங்கள் துறைகளுக்குள் ஊழல் எதிர்ப்பு முயற்சிகளில் குறைந்தது 50% ஈடுபாடு.<br>7. ஊழல் சம்பவங்களில் வருடாந்த வீழ்ச்சி | S-M | | | அனைத்து அரசு நிறுவனங்களின் IAUக்கள் | அனைத்து அரசு நிறுவனங்களும் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4 | ஒவ்வொரு நிறுவனத்திலும் உள்ள ஊழல் பாதிப்புகளைக் கண்டறிந்து கண்டுபிடிப்புகளை வெளியிட, நிறுவன ஊழல் அபாய மதிப்பீடுகளை (ICRA) ஒவ்வொரு 3 வருடங்களுக்கும் நடத்துதல்:<br>1. ICRA வழிமுறைகள் மற்றும் கட்டமைப்புகளை உருவாக்குதல்<br>2. ICRA-க்களை நடத்துவதற்கு சுயாதீனமான பலதுறை குழுக்களை அடையாளம் காணுதல், பல்வேறு நிபுணத்துவத்தை உறுதி செய்தல்.<br>3. ICRA-வை செயல்படுத்துவது குறித்து ஒவ்வொரு நிறுவனத்தின் ஊழியர்களுக்கும் பயிற்சி அளித்தல்.<br>4. ICRA-க்களை திட்டமிடுதல் மற்றும் செயற்படுத்துதல்<br>5. பரிந்துரைக்கப்பட்ட நடவடிக்கைகளின் செயல்படுத்தலைக் கண்காணிக்கவும், காலப்போக்கில் மேம்பாடுகளைக் கண்காணிக்கவும் ஒரு பின்தொடர்தல் திட்டத்தை நிறுவுதல். | 1. ICRA முறை உருவாக்கப்பட்டது.<br>2. சுயாதீனமான பல்துறை குழுக்கள் உருவாக்கப்பட்டன.<br>3. ICRA செயற்படுத்தல் குறித்த பயிற்சி முடிந்தது.<br>4. ICRA திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டது.<br>5. ICRA இன் கண்டுபிடிப்புகள் வெளியிடப்பட்டன.<br>6. குறைந்தபட்சம் 60% பரிந்துரைகள் செயல்படுத்தப்பட்டுள்ளன.<br>7. அடையாளம் காணப்பட்ட பாதிப்புகளில் முன்னேற்றத்தை அளவிடுவதற்கான தொடர் மதிப்பீடு. | M | அனைத்து அரசு நிறுவனங்களும் | அனைத்து அரசு நிறுவனங்களின் IAUக்கள் |
| 5 | ஊழலை முன்கூட்டியே எதிர்த்துப் போராட, இந்த NAP மற்றும் ICRA-க்களின் அடிப்படையில் நிறுவன செயற்றிட்டங்களை (IAPs) உருவாக்கி செயற்படுத்தவும், இதன் மூலம்:<br>துறைத் தலைவர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு IAP-களை உருவாக்கி செயல்படுத்த பயிற்சித் திட்டங்களை நடத்துதல்.<br>1. மேற்கூறியவற்றின் அடிப்படையில் இலஞ்சம் மற்றும் ஊழலைத் தடுப்பதற்கான IAP-களை உருவாக்க சுற்றறிக்கைகளை வெளியிடுங்கள்.<br>2. நிறுவன மட்டத்தில் IAP-களை செயற்படுத்துதல். | 1. அனைத்து பயிற்சி உள்ளீடுகளும் உருவாக்கப்பட்டன.<br>2. நடத்தப்பட்ட பயிற்சிகளின் எண்ணிக்கை<br>3. பயிற்சி பங்கேற்பு விகிதம் குறைந்தது 90% ஆகும்.<br>4. வெளியிடப்பட்ட சுற்றறிக்கை<br>5. IAPகள் 12 மாதங்களுக்குள் உருவாக்கப்பட்டன<br>6. IAP-களின் செயல்படுத்தல் விகிதம் குறைந்தபட்சம் 75% செயல்களாகும். | M | அனைத்து அரச நிறுவனங்களும் | அனைத்து அரச நிறுவனங்களின் IAUக்கள் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6 | ஊழல் நடைமுறைகள் தொடர்பில் முறைப்பாடளிக்க CIABOC உடன் இணைக்கப்பட்ட பாதுகாப்பான மற்றும் இரகசிய அறிக்கையிடல் முறைகளைப் பயன்படுத்தி, IAUக்கள் மூலம் பாதுகாப்பான அறிக்கையிடல் வழிமுறைகளை (அநாமதேயமானவை உட்பட) உருவாக்குங்கள். | 1. நிறுவன ரீதியான தகவல் தெரிவிப்பவர் பாதுகாப்புக் கொள்கைகள் வரைவு செய்யப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டன.<br>2. CIABOC உடன் இணைக்கப்பட்ட பாதுகாப்பான மற்றும் இரகசிய அறிக்கையிடல் முறைமைகள் நிறுவப்பட்டுள்ளன.<br>3. 100% பயனாளர் அணுகல் விகிதம்.<br>4. முதல் ஆண்டில் சம்பவ அறிக்கையிடல் அளவு 25% அதிகரிப்பைக் காட்டுகிறது.<br>5. அறிக்கையிடல் வழிமுறைகளின் செயல்திறன் மற்றும் இரகசியத்தன்மை தொடர்பான வருடாந்த பயனர் கணக்கெடுப்புகளில் திருப்தி விகிதம் குறைந்தது 75% ஆகும். | S-M | அனைத்து அரச நிறுவனங்களும் | அனைத்து அரச நிறுவனங்களின் IAUக்கள் |
| 7 | அனைத்து அரச நிறுவனங்களுக்கும் நேர்மை அதிகாரிகளை நியமிப்பதைத் தொடரவும், அவர்களை IAU-களில் இணைக்கவும். | 1. நியமிக்கப்பட்ட நேர்மை அதிகாரிகளின் எண்ணிக்கை<br>2. நேர்மை அதிகாரிகளின் செயற்றிறன் மற்றும் இரகசியத்தன்மை தொடர்பான வருடாந்த பயனர் கணக்கெடுப்புகளில் திருப்தி விகிதம் குறைந்தது 75% ஆகும். | S | | அனைத்து அரச நிறுவனங்களும் |
| 8 | நேர்மை அதிகாரிகளுக்கு சிறப்பு அறிமுக மற்றும் அவ்வப்போது புதுப்பிக்கப்பட்ட பயிற்சி திட்டங்களை நடத்துதல். | 1. அனைத்து பயிற்சி உள்ளீடுகள் உருவாக்கப்பட்டன.<br>2. அறிமுகப் பயிற்சி முடிந்தது. பயிற்சி நிறைவு விகிதம் 100%<br>3. ஒவ்வொரு ஆண்டும் குறைந்தது 01 புத்தாக்கப் பயிற்சி அமர்வு நிறைவடைகிறது.<br>4. பயிற்சி பங்கேற்பு விகிதம் குறைந்தது 90% ஆகும்.<br>5. பயிற்சி நிறைவு விகிதம் குறைந்தது 95% ஆகும்.<br>6. பயிற்சிக்குப் பின்னரான அறிவு மதிப்பீடு, அறிவுத் தக்கவைப்பு மற்றும் செயற்பாட்டு மற்றும் உள்ளடக்க அம்சங்களைப் புரிந்துகொள்வதற்கு சராசரியாக 80% ஆகும்.<br>7. பயிற்சி உள்ளடக்கத்தின் 70% பயன்பாடு<br>8. ஊழல் சம்பவங்களில் வருடாந்த வீழ்ச்சி | இலங்கை | CIABOC | அனைத்து அரச நிறுவனங்களும் |
| 9 | திணைக்கள தலைவர்களுக்கான பயிற்சித் திட்டங்களை நேர்மை அதிகாரிகள் நடத்துவதை உறுதி செய்தல் . | 1. அனைத்து வடிவமைக்கப்பட்ட பயிற்சிப் உள்ளீடுகள் உருவாக்கப்பட்டன.<br>2. பயிற்சி பங்கேற்பு விகிதம் குறைந்தது 90% ஆகும்.<br>3. பயிற்சி நிறைவு விகிதம் குறைந்தது 95% ஆகும்.<br>4. பயிற்சிக்குப் பின்னரான அறிவு மதிப்பீடு அறிவுத் தக்கவைப்பு மற்றும் உள்ளடக்கத்தைப் புரிந்துகொள்வதற்கு சராசரியாக 70% ஆகும்.<br>5. பயிற்சி உள்ளடக்கத்தின் 70% நடைமுறை பயன்பாடு | இலங்கை | அனைத்து அரச நிறுவனங்களும் | அனைத்து அரச நிறுவனங்களும் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 10 | நிறுவனக் குறியீட்டை மதிப்பாய்வு செய்து, நெறிமுறை தரநிலைகள், முரண்பாட்டு ஆர்வங்கள் மற்றும் சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல்களை வலியுறுத்த தேவையான திருத்தங்களைக் கருத்தில் கொள்ளுங்கள். | 1. ஆரம்ப மதிப்பாய்வு முடிந்தது.<br>2. பங்குதாரர் ஆலோசனைகள் நிறைவடைந்தன<br>3. மதிப்பாய்வு இறுதி செய்யப்பட்டது.<br>4. தேவையான திருத்தங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.<br>5. திருத்தப்பட்ட விதிகள் குறித்து அரச அதிகாரிகளுக்கு பயிற்சி மற்றும் விழிப்புணர்வு<br>6. இணக்க கண்காணிப்பு கட்டமைப்பு நிறுவப்பட்டது<br>7. செயற்திறன் மற்றும் பொருத்தத்திற்கான வருடாந்த மதிப்பாய்வு நடத்தப்பட்டது. | L | பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூ ராட்சி அமைச்சு | பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு<br><br>அரசசேவை ஆணைக்குழு (PSC) |
| 11 | பல்வேறு பொதுத்துறை நிறுவனங்களில் தற்போதுள்ள ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகளின் செயல்திறனை மதிப்பிடுவதற்கும் முன்னேற்றத்திற்கான பகுதிகளை அடையாளம் காண்பதற்கும் ஊழல் எதிர்ப்பு முயற்சி மதிப்பீடுகளை (AIA) நடத்துதல். | 1. AIA மதிப்பீட்டு கட்டமைப்பு உருவாக்கப்பட்டது.<br>2. மதிப்பீட்டிற்காக அடையாளம் காணப்பட்ட பொதுத்துறை நிறுவனங்கள்.<br>3. மதிப்பீட்டுக் குழுக்கள் அமைக்கப்பட்டன.<br>4. AIA திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்பட்டது.<br>5. மதிப்பீட்டு நிறைவு விகிதம் குறைந்தபட்சம் 75% நிறுவனங்களாகும்.<br>6. முன்னேற்றத்திற்கான பகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.<br>7. குறைந்தபட்சம் 70% பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டுள்ளன.<br>8. அடையாளம் காணப்பட்ட பகுதிகளில் முன்னேற்றத்தை அளவிடுவதற்கான தொடர் மதிப்பீடு | S-M | CIABOC | அனைத்து அரச நிறுவனங்களின் IAUக்கள் |
| **துணை நோக்கம் 2: பொதுத்துறைக்குள் முரண்பாட்டு ஆர்வங்கள், சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல்கள் மற்றும் அன்பளிப்பு விதிமுறைகளை நிர்வகிப்பதை மேம்படுத்துதல்.** | | | | | |
| 1 | 2023 ஆம் ஆண்டின் ஊழலுக்கு எதிரான சட்டம் 09ஆம் இலக்க ஊழல் எதிர்ப்பு சட்டத்தில் உள்ளீர்க்கப்பட்ட சொத்து பொறுப்புக்கள் வெளிப்படுத்தலை நடைமுறைப்படுத்துதல்.<br>அம்முறையை, பிற நிறுவன சொத்து தரவுத்தளங்களுடன் இணைக்கப்பட்ட, தானியங்கி சரிபார்ப்பை செயல்படுத்தும் வகையில், ஆன்லைன், பொதுவில் அணுகக்கூடிய சொத்து அறிவிப்பு அமைப்பை நிறுவுவதன் மூலம் செயற்படுத்தவும். | 1. கணினி விவரக்குறிப்புகளுடன் கூடிய கருத்துக் குறிப்பு உருவாக்கப்பட்டது.<br>2. கேள்விமனுக்கோரல் அழைப்பு.<br>3. கொள்முதல் குழுவின் ஒன்று கூடல்<br>4. தேவையான மென்பொருள் வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்டது.<br>5. தேவையான வன்பொருள் வாங்கப்பட்டது.<br>6. குறைந்தது 80% பயனர் பயிற்சிகள் நடத்தப்பட்டன.<br>7. செயற்படுத்தலை மேற்பார்வையிட தொழில்நுட்பக் குழு நியமிக்கப்பட்டது.<br>8. முறைமை இயக்கப்பட்டது. | S-M | CIABOC | CIABOC |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2 | 2023 ஆம் ஆண்டு ஊழல் எதிர்ப்புச் சட்டத்தில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் முறையை செயற்படுத்துவதற்கான விதிமுறைகளை உருவாக்கி செயற்படுத்தவும். இதில் பின்வருவன அடங்கும்:<br>i. யார் ஒரு வெளிப்படுத்தலை செய்ய வேண்டும்<br>ii. வெளிப்படுத்த வேண்டிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடரபான படிவம்<br>iii. ஒரு வெளிப்படுத்தலை தாக்கல் செய்யும் செயல்முறை<br>iv. சொத்துக்கள் பொறுப்புக்களின் வெளியீடு, சரிபார்ப்பு மற்றும் சேமிப்பு<br>v. தாக்கல் செய்யத் தவறியதற்காக அல்லது தவறான தகவல்களை வழங்குவதற்கான தண்டணைகள்<br>vi. முறைமையின் செயல்திறன் குறித்த பொது அறிக்கையிடல்<br>vii. தரவு தனியுரிமை மற்றும் வெளிப்படைத்தன்மை | 1. விதிமுறைகள் வரைவு செய்யப்பட்டன.<br>2. பங்குதாரர்களுடனான கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன.<br>3. விதிமுறைகள் அங்கீகரிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டன.<br>4. இணக்க கண்காணிப்பு கட்டமைப்பு உருவாக்கப்பட்டது. | S | CIABOC | CIABOC |
| 3 | முறையை அணுகுவதற்கான செயன்முறையை விளக்கும் மாற்றுத்திறனாளிகளை உள்ளடக்கிய, எளிதில் புரிந்துகொள்ளக்கூடிய உள்ளடக்கத்தைப் பயன்படுத்தி தகவல்களைப் பரப்புவதற்கு சமூக ஊடகங்கள், சமூகப் பட்டறைகள் மற்றும் தகவல் வலைத்தளங்கள் போன்ற பல்வேறு தளங்களை எவ்வாறு பயன்படுத்துவது என்பது உட்பட சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்தலை சமர்ப்பிப்பதில் தகவல்களை எவ்வாறு அணுகுவது என்பது குறித்து அறிவிப்பாளர்களுக்குக் போதிக்க ஒரு தகவல் தொடர்புத் திட்டத்தை உருவாக்குதல் . | 1. தொடர்புத் திட்டம் உருவாக்கப்பட்டது.<br>2. உள்ளடக்கம் உருவாக்கப்பட்டது.<br>3. பின்னூட்டல் வழிமுறை செயற்படுத்தப்பட்டது.<br>4. உருவாக்கப்பட்ட தகவல் தொடர்பு முயற்சிகளின் செயல்திறனை மதிப்பிடுவதற்கான செயற்றிறன் அளவீடுகள். | S | CIABOC | CIABOC |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4 | ஊழல் எதிர்ப்பு முயற்சிகளில் சர்வதேச ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக, வெளிநாட்டு சகாக்களுடன் சொத்துக்கள் தொடர்பான தகவல்களைப் பகிர்ந்து கொள்ள தகுதிவாய்ந்த அதிகாரிகளை அனுமதிக்கும் வழிகாட்டுதல்களை உருவாக்குதல். | 1. வழிகாட்டுதல்கள் வரைவு செய்யப்பட்டன.<br>2. பங்குதாரர் ஆலோசனைகள் நடத்தப்பட்டன.<br>3. வழிகாட்டுதல்கள் அங்கீகரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டன. | S | CIABOC | CIABOC |
| 5 | 2023ஆம் ஆண்டின் ஊழல் எதிர்ப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளை செயல்படுத்துவதற்கான விதிமுறைகளை உருவாக்கி இயற்றுதல். அவற்றுள்:<br>முரண்பாட்டு ஆர்வங்களின் வரையறைகள்<br>1. முரண்பாட்டு ஆர்வங்களை அறிவித்தல் மற்றும் நிர்வகித்தல் குறித்த வழிகாட்டுதல், வெளிப்படுத்தல் மற்றும் மறுப்புக்கான தெளிவான வழிகாட்டுதல்கள் உட்பட.<br>2. முரண்பாட்டு ஆர்வங்களை அறிவிக்கவோ அல்லது நிர்வகிக்கவோ தவறியதற்கான தண்டனைகள்<br>3. அமைப்பின் செயல்திறன் குறித்த பொது அறிக்கையிடல் | 1. விதிமுறைகள் வரைவு செய்யப்பட்டன.<br>2. பங்குதாரர் ஆலோசனைகள் நடத்தப்பட்டன.<br>3. விதிமுறைகள் அங்கீகரிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டன.<br>4. இணக்க கண்காணிப்பு கட்டமைப்பு உருவாக்கப்பட்டது. | S | CIABOC | CIABOC |
| 6 | முரண்பாட்டு ஆர்வங்களைத் தடுக்க, தனியார் துறைப் பணிகளுக்கு மாறும் அரச அதிகாரிகளுக்கு கால வரையறைகளை அறிமுகப்படுத்தி செயற்படுத்தவும். | 1. விதிகள் வரைவு செய்யப்பட்டன.<br>2. பங்குதாரர் ஆலோசனைகள் நடத்தப்பட்டன.<br>3. விதிகள் அங்கீகரிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டன.<br>4. இணக்க கண்காணிப்பு கட்டமைப்பு உருவாக்கப்பட்டது. | S-M | CIABOC | CIABOC |
| 7 | விழிப்புணர்வை மேம்படுத்துதல் மற்றும் முரண்பாட்டு ஆர்வ விதிகளை கடைபிடித்தல். | 1. தொடர்புத் திட்டம் உருவாக்கப்பட்டது.<br>2. உள்ளடக்கம் உருவாக்கப்பட்டது.<br>3. பின்னூட்டல் வழிமுறை செயற்படுத்தப்பட்டது.<br>4. உருவாக்கப்பட்ட தகவல் தொடர்பு முயற்சிகளின் செயற்றிறனை மதிப்பிடுவதற்கான செயல்திறன் அளவீடுகள். | S-M | CIABOC | CIABOC |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 8 | அன்பளிப்புக்களை ஏற்றுக்கொள்வது மற்றும் முறைபாடளிப்பது தொடர்பான விதிகளை ஏற்றுக்கொள்ளல்.. | 1. விதிகள் வரைவு செய்யப்பட்டன.<br>2. பங்குதாரர் ஆலோசனைகள் நடத்தப்பட்டன.<br>3. விதிகள் அங்கீகரிக்கப்பட்டு வெளியிடப்பட்டன.<br>4. பொது அதிகாரிகளுக்கு விதிகள் குறித்து பயிற்சிகள் மற்றும் விழிப்புணர்வு நடத்தப்பட்டது.<br>5. வழிகாட்டுதல்களை ஊக்குவிக்க விழிப்புணர்வு பிரச்சாரம் நடத்தப்பட்டது.<br>6. இணக்க கண்காணிப்பு கட்டமைப்பு உருவாக்கப்பட்டது. | S-M | CIABOC | CIABOC<br><br>பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு<br><br>அரசாங்க சேவை ஆணைக்குழு<br><br>ஜனாதிபதி செயலகம்<br><br>பாராளுமன்றம் |
| 9 | ஒவ்வொரு அரச நிறுவனத்திற்கும் ஒரு அன்பளிப்பு பதிவேட்டை உருவாக்குதல். | 1. தரப்படுத்தப்பட்ட வடிவம் உருவாக்கப்பட்டது.<br>2. தரவு சேகரிப்பு கட்டமைப்பு உருவாக்கப்பட்டது.<br>3. குறைந்தபட்சம் 80% பொது நிறுவனங்களுக்கு அன்பளிப்பு பதிவேடு உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது.<br>4. அன்பளிப்பு பதிவேடுகளுக்கு தகவல்களைச் சமர்ப்பிப்பது குறித்து பொது அதிகாரிகளுக்கு பயிற்சிகள் மற்றும் விழிப்புணர்வு நடத்தப்பட்டது.<br>5. இணக்க கண்காணிப்பு கட்டமைப்பு உருவாக்கப்பட்டது.<br>6. அன்பளிப்பு பதிவு முறையின் செயல்திறன் மற்றும் பொருத்தத்தை மதிப்பிடுவதற்காக ஆண்டுதோறும் மதிப்பாய்வு செய்யப்படுகிறது. | S | CIABOC | அனைத்து அரசு நிறுவனங்களும் |
| 10 | பொதுவாக அணுகக்கூடிய, நிகழ்நிலை ரீதியான பயனளிக்கும் உரிமையாளர் பதிவேட்டை உருவாக்குதல் | 1. தரவு சேகரிப்பு மற்றும் முகாமைத்துவதிற்கான<br>2. தரவு சேகரிப்பு கட்டமைப்பு உருவாக்கப்பட்டது.<br>3. கணினி விவரக்குறிப்புகளுடன் கூடிய கருத்துக் குறிப்பு உருவாக்கப்பட்டது.<br>4. வழங்கப்பட்ட ஏலங்களுக்கான அழைப்பு.<br>5. கொள்முதல் குழு கூடியது.<br>6. தேவையான மென்பொருள் வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்டது.<br>7. தேவையான வன்பொருள் வாங்கப்பட்டது.<br>8. குறைந்தது 80% பயனர் பயிற்சிகள் நடத்தப்பட்டன.<br>9. விளம்பர மற்றும் விழிப்புணர்வு பிரச்சாரங்கள் தொடங்கப்பட்டன.<br>10. அமைப்பு இயக்கப்பட்டது.<br>11. இணக்க கண்காணிப்பு கட்டமைப்பு உருவாக்கப்பட்டது.<br>12. பதிவேட்டின் செயல்திறன் மற்றும் பயனர் ஈடுபாடு குறித்த வருடாந்த மதிப்பாய்வு நடத்தப்பட்டது. | S | கம்பனிப் பதிவாளர் | கம்பனிப் பதிவாளர் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 11 | நிதி நிறுவனங்கள் (FIs), நியமிக்கப்பட்ட நிதி சாராத வணிகங்கள் (DNFBs) மற்றும் பொதுமக்கள் அணுகக்கூடிய அரசியல் ரீதியாக பிரபலமான நபர்கள் (PEP) தொடர்பான தரவுத்தளத்தை உருவாக்குதல். | 1. தரவு சேகரிப்பு மற்றும் முகாமைக்கான ஒழுங்குமுறை கட்டமைப்பு உருவாக்கப்பட்டது.<br>2. தரவு சேகரிப்பு கட்டமைப்பு உருவாக்கப்பட்டது.<br>3. கணினி விவரக்குறிப்புகளுடன் கூடிய கருத்துக் குறிப்பு உருவாக்கப்பட்டது.<br>4. வழங்கப்பட்ட ஏலங்களுக்கான அழைப்பு.<br>5. கொள்முதல் குழு கூடியது.<br>6. தேவையான மென்பொருள் வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்டது.<br>7. தேவையான வன்பொருள் வாங்கப்பட்டது.<br>8. தரவுத்தளத்தைப் பயன்படுத்துவது குறித்து நிதி நிறுவனங்கள் மற்றும் DNFB-களுக்கு 90% பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நடத்தப்பட்டது.<br>9. விளம்பர மற்றும் பொது விழிப்புணர்வு பிரச்சாரங்கள் தொடங்கப்பட்டன.<br>10. தரவுத்தளம் செயல்படுத்தப்படுகிறது.<br>11. தரவுத்தளத்தின் செயல்பாடு மற்றும் அணுகல் தன்மை குறித்த பயனர் உள்ளீட்டைச் சேகரிக்க பின்னூட்ட வழிமுறை உருவாக்கப்பட்டது.<br>12. இணக்க கண்காணிப்பு கட்டமைப்பு உருவாக்கப்பட்டது.<br>13. தரவுத்தளத்தின் செயல்திறன் மற்றும் பயனர் ஈடுபாடு குறித்த வருடாந்த மதிப்பாய்வு நடத்தப்பட்டது. | S | மத்திய வங்கி | மத்திய வங்கி<br><br>நிதி புலனாய்வுப் பிரிவு (FIU) |
| **துணை நோக்கம் 3: பொது சேவைகளின் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் செயல்திறனை மேம்படுத்துவதற்காக பொதுமக்கள் பொது சேவைகளுக்கான அணுகலை மேம்படுத்துதல்** | | | | | |
| 1 | தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் பிரிவு 8 மற்றும் பிரிவு 10 இன் கீழ் பொது அதிகாரிகளின் முன்னெச்சரிக்கையான வெளிப்படுத்தல்களைக் கண்காணிக்க வழிமுறைகளை அறிமுகப்படுத்துதல். | 1. கண்காணிப்பு கட்டமைப்பு உருவாக்கப்பட்டது.<br>2. தரவு சேகரிப்பு கட்டமைப்பு உருவாக்கப்பட்டது.<br>3. பொது அதிகாரிகளுக்கான வழிகாட்டுதல்கள் உருவாக்கப்பட்டன.<br>4. நிறுவப்பட்ட வெளிப்படுத்தல்களின் செயல்திறன் மற்றும் அணுகல் குறித்து பொதுமக்கள் முறைப்பாடளிப்பதற்கான கருத்து வழிமுறை.<br>5. செயல்திறன் மற்றும் பயனர் ஈடுபாடு குறித்த வருடாந்த மதிப்பாய்வு நடத்தப்பட்டது. | M | தகவல் அறியும் உரிமைகளுக்கான ஆணைக்குழு (RTIC) | RTIC |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2 | தகவல்களை அணுகுவதை மேம்படுத்த தரப்படுத்தப்பட்ட வடிவங்களை வெளியிடுதல் மற்றும் சமர்ப்பிப்புகளை டிஜிட்டல் மயமாக்குதல். | 1. தரப்படுத்தப்பட்ட வடிவங்கள் உருவாக்கப்பட்டன.<br>2. பங்குதாரர் ஆலோசனைகள் நடத்தப்பட்டன.<br>3. டிஜிட்டல் மயமாக்கல் உத்தி உருவாக்கப்பட்டது.<br>4. டிஜிட்டல் தளங்கள் உருவாக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டன.<br>5. பயனர்களுக்கான பயிற்சிகளில் குறைந்தது 80% நடத்தப்பட்டது.<br>6. பொது விழிப்புணர்வு பிரச்சாரங்கள் தொடங்கப்பட்டன.<br>7. உருவாக்கப்பட்ட தளங்களின் செயல்பாடு மற்றும் அணுகல் தன்மை குறித்த பயனர் உள்ளீட்டைச் சேகரிக்க பின்னூட்ட வழிமுறை.<br>8. இணக்க கண்காணிப்பு கட்டமைப்பு உருவாக்கப்பட்டது.<br>9. செயல்திறன் மற்றும் பயனர் திருப்தி குறித்த வருடாந்த மதிப்பாய்வு நடத்தப்பட்டது. | S | RTIC | RTIC |
| 3 | பொது மக்கள் கோரும் மொழியில் தகவல் வழங்கப்படுவதை உறுதி செய்வதற்கான ஒரு பொறிமுறையை நிறுவுதல். | 1. மொழித் தேவை மதிப்பீடு நடத்தப்பட்டது.<br>2. கோரப்பட்ட மொழிகளில் தகவல்களை வெளியிடுவதற்கான கொள்கை உருவாக்கப்பட்டது.<br>3. மொழிபெயர்ப்பு வளங்கள் அடையாளம் காணப்பட்டு பாதுகாக்கப்படுகின்றன.<br>4. கொள்கையை பின்பற்றுவது குறித்து ஊழியர்களுக்கு 100% பயிற்சிகள்.<br>5. பொது விழிப்புணர்வு பிரச்சாரங்கள் தொடங்கப்பட்டன.<br>6. இணக்க கண்காணிப்பு கட்டமைப்பு உருவாக்கப்பட்டது.<br>7. மொழி சார்ந்த தகவல் கோரிக்கைகள் தொடர்பான தங்கள் அனுபவங்களைப் முறைப்பாடளிக்க குடிமக்களுக்கான பின்னூட்ட வழிமுறை உருவாக்கப்பட்டுள்ளது.<br>8. இணக்க கண்காணிப்பு கட்டமைப்பு உருவாக்கப்பட்டது.<br>9. செயல்திறன் மற்றும் பயனர் திருப்தி குறித்த வருடாந்த மதிப்பாய்வு நடத்தப்பட்டது. | S | RTIC | RTIC |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4 | வெளிப்படைத்தன்மையை உறுதி செய்வதற்காக, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கான தேவைகள் மற்றும் நடைமுறைகள் குறித்து பொது அதிகாரிகளுக்கு பயிற்சி அளித்தல். | 1. பயிற்சி தேவைகளுக்கான மதிப்பீடு நடத்தப்பட்டது.<br>2. அனைத்து பயிற்சிப் பொருட்களும் உருவாக்கப்பட்டன.<br>3. ஒவ்வொரு நிறுவனத்திலும் குறைந்தது 30% அதிகாரிகள் ஒவ்வொரு ஆண்டும் பயிற்சி பெறுகிறார்கள்.<br>4. பயிற்சி பங்கேற்பு விகிதம் குறைந்தது 90% ஆகும்.<br>5. பயிற்சி நிறைவு விகிதம் குறைந்தது 95% ஆகும்.<br>6. பயிற்சிக்குப் பின்னைய அறிவு மதிப்பீடு, அறிவுத் தக்கவைப்பு மற்றும் செயல்பாட்டு மற்றும் உள்ளடக்க அம்சங்களைப் புரிந்துகொள்வதற்கு சராசரியாக 80% ஆகும்.<br>7. கோரிக்கைகளுக்கு இணங்குவதில் ஆண்டுக்கு ஆண்டு முன்னேற்றம். | S-M | RTIC | RTIC<br><br>இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனம் (SLIDA) |
| 5 | பொதுமக்கள் சந்திக்கும் சேவைகளில் மனித இடைமுகத்தைக் குறைக்க டிஜிட்டல் மயமாக்கலைச் செயல்படுத்துதல், இதில் பொது அணுகலுடன் கூடிய மின்னணு கட்டணத் தளத்தை அறிமுகப்படுத்துதல் (உ-ம்: விகிதங்கள், வரிகள், உரிமக் கட்டணங்கள்). | 1. மனித இடைத்தொடர்பை குறைப்பதற்கான விரிவான டிஜிட்டல் உத்தி உருவாக்கப்பட்டது.<br>2. பங்குதாரர் ஆலோசனைகள் நடத்தப்பட்டன.<br>3. வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்ப விவரக்குறிப்புகள் உருவாக்கப்பட்டன.<br>4. இலத்திரனியல் கட்டண தளம் தற்போதுள்ள பொது சேவை அமைப்புகளுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.<br>5. இலத்திரனியல் கட்டண தளம் செயற்படுத்தப்படுகிறது.<br>6. பொது சேவைகளில் டிஜிட்டல் மயமாக்கலின் தாக்கம் குறித்த வருடாந்த மதிப்பாய்வு நடத்தப்பட்டது. | S-M | நிதி அமைச்சு<br><br>டிஜிட்டல் பொருளாதார அமைச்சு | அனைத்து அரசு நிறுவனங்களும் |

| துணை நோக்கம் 4: ஊழலைத் தடுக்கவும், பயனுள்ள வள ஒதுக்கீட்டை உறுதி செய்யவும் பொது கொள்முதல் மற்றும் பொது நிதி முகாமையில் நேர்மை மற்றும் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துதல். | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | அதிக ஊழல் அபாயங்களைக் கொண்ட பொது நிறுவனங்களான சுங்கத் திணைக்களம், உள்நாட்டு இறைவரி திணைக்களம் (IRD) மற்றும் மதுவரி திணைக்களம் ஆகியவற்றிற்கு ஊழல் அபாய மதிப்பீடுகளை (CRA) நடத்துதல்:<br>1. மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கும், பல்வேறு நிபுணத்துவத்தை உறுதி செய்வதற்கும் ஒரு பல்துறை குழுவை உருவாக்குதல்.<br>2. ஒவ்வொரு நிறுவனத்தின் குறிப்பிட்ட அபாயங்களுக்கு ஏற்ப மதிப்பீட்டு அளவுகோல்கள் மற்றும் வழிமுறைகளை உருவாக்குதல்.<br>3. CRA-வை திட்டமிடுதல் மற்றும் நடத்துதல்.<br>4. ஒவ்வொரு நிறுவனத்திற்கும் ஒரு விரிவான அறிக்கையில் கண்டுபிடிப்புகள் மற்றும் பரிந்துரைகளைத் தொகுத்தல்.<br>5. பரிந்துரைக்கப்பட்ட நடவடிக்கைகளின் செயல்படுத்தலைக் கண்காணிக்கவும், காலப்போக்கில் மேம்பாடுகளைக் கண்காணிக்கவும் ஒரு பின்தொடர்தல் திட்டத்தை நிறுவுதல். | 1. சுயாதீனமான பல்துறை குழுக்கள் உருவாக்கப்பட்டன.<br>2. CRA முறை உருவாக்கப்பட்டது<br>3. ICRA செயற்படுத்தல் குறித்த பயிற்சி முடிந்தது.<br>4. CRA திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டது.<br>5. CRA இன் கண்டுபிடிப்புகள் வெளியிடப்பட்டன.<br>6. குறைந்தபட்சம் 60% பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டுள்ளன.<br>7. அடையாளம் காணப்பட்ட பாதிப்புகளில் முன்னேற்றத்தை அளவிடுவதற்கான தொடர் மதிப்பீடு. | M | இலங்கை சுங்கம்<br><br>உள்நாட்டு இறைவரி<br><br>மது வரி திணைக்களங்கள் | இலங்கை சுங்கம்<br><br>உள்நாட்டு இறைவரி<br><br>மது வரி திணைக்களங்கள் |
| 2 | பொது கொள்முதல் மற்றும் பொது நிதி தொடர்பான அனைத்து அமைச்சரவை முடிவுகளையும் அரசு தகவல் துறையின் இணையதளத்தில் வெளியிடுதல். | 1. பொது கொள்முதல் மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பொது நிதி தொடர்பான அமைச்சரவை முடிவுகளை வெளியிடுவதற்கான தேவைகள் மற்றும் நடைமுறைகளை கோடிட்டுக் காட்டும் கொள்கை.<br>2. அமைச்சரவை முடிவுகளை வெளியிடுவதற்கான கொள்கையுடன் இணங்குவதை மதிப்பிடுவதற்கான வருடாந்த மதிப்பாய்வு, குறைந்தபட்சம் 80% இணக்க விகிதத்துடன் நடத்தப்படுகிறது. | S | அமைச்சரவை அலுவலகம் | அமைச்சரவை அலுவலகம்<br><br>நிதி அமைச்சு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | அதிக வெளிப்படைத்தன்மைக்காக மின்னணு கொள்முதல் முறையை செயல்படுத்துதல். | 1. பங்குதாரர்களின் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புகளை அடையாளம் காண மதிப்பீடு தேவை.<br>2. கணினி விவரக்குறிப்புகளுடன் கூடிய கருத்துக் குறிப்பு உருவாக்கப்பட்டது.<br>3. வழங்கப்பட்ட ஏலங்களுக்கான அழைப்பு.<br>4. கொள்முதல் குழு கூடியது.<br>5. தேவையான மென்பொருள் வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்டது.<br>6. தேவையான வன்பொருள் வாங்கப்பட்டது.<br>7. குறைந்தது 80% பயனர் பயிற்சிகள் நடத்தப்பட்டன.<br>8. செயல்படுத்தலை மேற்பார்வையிட தொழில்நுட்பக் குழு நியமிக்கப்பட்டது.<br>9. அமைப்பு இயக்கப்பட்டது.<br>10. மின்னணு கொள்முதல் முறையின் செயல்திறனை மதிப்பிடுவதற்கான வருடாந்த மதிப்பாய்வு. | S-M | பொது நிதித் துறை, நிதி அமைச்சு | பொது கணக்குகள் திணைக்களம்<br><br>நிதி அமைச்சு<br><br>தேசிய கொள்முதல் ஆணைக்குழு |
| 4 | இலத்திரனியல் கொள்முதல் முறையின் செயற்றிறனை மேம்படுத்த அச் செயல்முறையைப் பயன்படுத்துபவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துதல் | 1. விழிப்புணர்வு ஏற்படுத்தும் அனைத்துப் பொருட்களும் உருவாக்கப்பட்டன<br>2. நடத்தப்பட்ட விழிப்புணர்வு அமர்வுகளின் எண்ணிக்கை<br>3. பயிற்சி பங்கேற்பு விகிதம் குறைந்தது 90% ஆகும்.<br>4. பயிற்சி நிறைவு விகிதம் குறைந்தது 95% ஆகும்.<br>5. அறிவுத்தக்கவைப்பு மற்றும் செயல்பாட்டு மற்றும் முக்கிய அம்சங்களை புரிந்து கொள்வதற்கு<br>6. பயிற்சிக்குப் பின்னைய அறிவு மதிப்பீடு, சராசரியாக 80% ஆகும். | S-M | தேசிய கொள்முதல் ஆணைக்குழு | தேசிய கொள்முதல் ஆணைக்குழு |
| 5 | இலத்திரனியல் கொள்முதல் கண்காணிப்பு அமைப்பை (EPMS) நிறுவுதல். | 1. EPMS பொறிமுறைக்கான கட்டமைப்பு உருவாக்கப்பட்டது.<br>2. மேற்பார்வைக் குழு அமைக்கப்பட்டு நியமனங்கள் செய்யப்பட்டன.<br>3. SOPகள் உருவாக்கப்பட்டன.<br>4. மேற்பார்வை செயற்பாடுகள் மற்றும் சிறந்த நடைமுறைகள் குறித்து குழு உறுப்பினர்கள் மற்றும் பொது கொள்முதல் அதிகாரிகளுக்கு பயிற்சி.<br>5. EPMS பொறிமுறையின் செயல்திறனை மதிப்பிடுவதற்கான வருடாந்த மதிப்பாய்வு. | S-M | தேசிய கொள்முதல் ஆணைக்குழு | தேசிய கொள்முதல் ஆணைக்குழு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6 | சந்தேகத்திற்கிடமான கொள்முதல் நடவடிக்கைகள் குறித்து சரியான நேரத்தில் எச்சரிக்கைகளை செயல்படுத்த EPMS தளத்துடன் இணைக்கப்பட்டு, ஒரு கொள்முதல் சிவப்புக் கொடி அமைப்பை உருவாக்கி, CIABOC உடன் இணைப்பை ஏற்படுத்துதல். | 1. நடத்தப்படும் அமைப்பிற்கான முக்கிய குறிகாட்டிகள் மற்றும் அளவுகோல்களை அடையாளம் காண ஒரு தேவை மதிப்பீடு.<br>2. வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்ப விவரக்குறிப்புகள் உருவாக்கப்பட்டன.<br>3. இந்த அமைப்பு CIABOC உடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.<br>4. பயனாளர் பயிற்சிகளில் குறைந்தது 90% நிறைவடைந்துள்ளன.<br>5. கொடியிடப்பட்ட செயற்பாடுகளைக் கண்காணித்து CIABOC-க்கு அறிக்கைகளை உருவாக்கும் ஒரு கண்காணிப்பு அமைப்பு நிறுவப்பட்டுள்ளது.<br>6. அமைப்பு இயக்கப்பட்டது. | S-M | தேசிய கொள்முதல் ஆணைக்குழு | தேசிய கொள்முதல் ஆணைக்குழு<br><br>CIABOC |
| 7 | நேரடி கொள்முதலைக் குறைப்பதற்கான உத்திகளை உருவாக்குதல். | 1. தற்போதைய நேரடி கொள்முதல் நடைமுறைகள் குறித்த விரிவான பகுப்பாய்வு.<br>2. நேரடி கொள்முதலைக் குறைப்பதற்கான குறிப்பிட்ட நடவடிக்கைகளை கோடிட்டுக் காட்டும் உத்திகள் உருவாக்கப்பட்டன.<br>3. மாற்று கொள்முதல் முறைகள் மற்றும் சிறந்த நடைமுறைகள் குறித்து கொள்முதல் அதிகாரிகளுக்கு குறைந்தபட்சம் 90% பயிற்சிகள் நடத்தப்படுகின்றன.<br>4. உத்திகளை செயல்படுத்துவதையும் அவற்றின் செயற்றிறனையும் கண்காணிக்க ஒரு M&E கட்டமைப்பு உருவாக்கப்பட்டது.<br>5. குறைப்பு இலக்கு குறிப்பிடப்பட்டுள்ளது. | S | தேசிய கொள்முதல் ஆணைக்குழு | அனைத்து அமைச்சரவை அமைச்சுக்கள் |
| 8 | திருத்தப்பட்ட அரசு கொள்முதல் வழிகாட்டுதல்களை அறிமுகப்படுத்துதல். | 1. வழிகாட்டுதல்கள் திருத்தப்பட்டன.<br>2. பங்குதாரர் ஆலோசனைகள் நடத்தப்பட்டன.<br>3. வழிகாட்டுதல்கள் அங்கீகரிக்கப்பட்டு வெளியிடப்பட்டன.<br>4. வழிகாட்டுதல்கள் குறித்து பொது அதிகாரிகளுக்கு பயிற்சிகள் மற்றும் விழிப்புணர்வு.<br>5. வழிகாட்டுதல்களை ஊக்குவிக்க விழிப்புணர்வு பிரச்சாரம் நடத்தப்பட்டது.<br>6. இணக்க கண்காணிப்பு கட்டமைப்பு உருவாக்கப்பட்டது. | S | தேசிய கொள்முதல் ஆணைக்குழு | தேசிய கொள்முதல் ஆணைக்குழு |
| 9 | கொள்முதல் வழிகாட்டுதல்கள் குறித்து பொது அதிகாரிகளுக்கு விழிப்புணர்வு அமர்வுகளை நடத்துதல். | 1. விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கான நோக்கங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன.<br>2. விழிப்புணர்வு ஏற்படுத்தும் அனைத்து உள்ளடக்கங்களும் உருவாக்கப்பட்டன.<br>3. நடத்தப்பட்ட அமர்வுகளின் எண்ணிக்கை.<br>4. அமர்வு பங்கேற்பு விகிதம் குறைந்தது 90% ஆகும்.<br>5. அமர்வுகளின் செயல்திறன் குறித்த கருத்து ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. | S-M | தேசிய கொள்முதல் ஆணைக்குழு | தேசிய கொள்முதல் ஆணைக்குழு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 10 | தேசிய கொள்முதல் ஆணைக்குழு, தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மற்றும் கொள்முதல் குழு உறுப்பினர்களுக்கு வருடாந்த பயிற்சித் திட்டங்களை ஏற்பாடு செய்தல். | 1. பயிற்சி நோக்கங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன.<br>2. அனைத்து பயிற்சிப் பொருட்களும் உருவாக்கப்பட்டன.<br>3. நடத்தப்பட்ட பயிற்சி அமர்வுகளின் எண்ணிக்கை.<br>4. பயிற்சி பங்கேற்பு விகிதம் குறைந்தது 90% ஆகும்.<br>5. பயிற்சி நிறைவு விகிதம் குறைந்தது 95% ஆகும்.<br>6. பயிற்சிக்கு முந்தைய பயிற்சி முதல் பயிற்சிக்கு பிந்தைய மதிப்பீடுகள் வரையிலான மதிப்பெண்களில் அறிவு மேம்பாடு குறைந்தது 30% ஆகும். | S-L | தேசிய கொள்முதல் ஆணைக்குழு | தேசிய கொள்முதல் ஆணைக்குழு |
| 11 | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மற்றும் கொள்முதல் குழு உறுப்பினர்களுக்கான பிரகடனப் படிவத்தை, முரனண்பாட்டு ஆர்வம் வெளிப்பாடுகளைச் சேர்க்க திருத்தவும். | 1. தற்போதைய அறிவிப்பு படிவம் மதிப்பாய்வு செய்யப்பட்டு திருத்தப்பட்டது.<br>2. பங்குதாரர் ஆலோசனைகள் நடத்தப்பட்டன.<br>3. திருத்தப்பட்ட அறிவிப்பு படிவம் அங்கீகரிக்கப்பட்டு வெளியிடப்பட்டது.<br>4. திருத்தப்பட்ட படிவம் குறித்து குழு உறுப்பினர்களுக்கு பயிற்சிகள் மற்றும் விழிப்புணர்வு நடத்தப்பட்டது.<br>5. இணக்க கண்காணிப்பு கட்டமைப்பு உருவாக்கப்பட்டது. | S | தேசிய கொள்முதல் ஆணைக்குழு | தேசிய கொள்முதல் ஆணைக்குழு |
| 12 | கொள்முதல் மற்றும் பொது நிதி முகாமைத்துவம் தொடர்பான அனுபவங்களையும் சிறந்த நடைமுறைகளையும் வெளிநாட்டு சகாக்களுடன் பகிர்ந்து கொள்வதற்கான அமர்வுகளை நடத்துதல். | 1. அமர்வின் நோக்கங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன.<br>2. அனைத்து அமர்வு உள்ளடக்கமும் உருவாக்கப்பட்டது.<br>3. நடத்தப்பட்ட அமர்வுகளின் எண்ணிக்கை.<br>4. அமர்வு பங்கேற்பு விகிதம் குறைந்தது 90% ஆகும்.<br>5. அமர்வுகளின் பொருத்தம் மற்றும் பயன் குறித்து பங்கேற்பாளர்களின் கருத்து ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. | S-L | தேசிய கொள்முதல் ஆணைக்குழு | தேசிய கொள்முதல் ஆணைக்குழு |
| 13 | ஒரு நிலையான விலைமனு ஆவணத்தை உருவாக்கி செயற்படுத்துதல் | 1. வடிவம் வரைவு செய்யப்பட்டது.<br>2. பங்குதாரர் ஆலோசனைகள் நடத்தப்பட்டன.<br>3. வடிவம் இறுதி செய்யப்பட்டு வெளியிடப்பட்டது.<br>4. கொள்முதல் அதிகாரிகள் மற்றும் ஏலதாரர்களுக்கு நடத்தப்பட்ட ஆவணம் குறித்து பயிற்சிகள் மற்றும் விழிப்புணர்வு.<br>5. இணக்க கண்காணிப்பு கட்டமைப்பு உருவாக்கப்பட்டது. | S | தேசிய கொள்முதல் ஆணைக்குழு | தேசிய கொள்முதல் ஆணைக்குழு |
| 14 | கொள்முதல்க்குப் பிந்தைய மதிப்பாய்வு (PPR) முறையை அறிமுகப்படுத்துதல். | 1. PPR இன் வளர்ச்சி மற்றும் செயற்படுத்தல் நிறைவடைந்துள்ளது.<br>2. குறைந்தபட்சம் 70% கொள்முதல் ஒப்பந்தங்கள் ஆண்டுதோறும் மதிப்பாய்வு செய்யப்படுகின்றன. | M | தேசிய கொள்முதல் ஆணைக்குழு | தேசிய கொள்முதல் ஆணைக்குழு<br>அனைத்து அரசு நிறுவனங்கள் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 15 | முன்னுரிமைப்படுத்தப்பட்ட திட்டப் பட்டியலைப் பராமரிப்பதை கட்டாயமாக்குதல். | 1. ஆரம்ப முன்னுரிமை பட்டியல் உருவாக்கப்பட்டது.<br>2. பங்குதாரர் ஆலோசனைகள் நடத்தப்பட்டன.<br>3. ஆரம்ப பட்டியல் இறுதி செய்யப்பட்டு வெளியிடப்பட்டது.<br>4. ஆரம்ப பட்டியல் அவ்வப்போது புதுப்பிக்கப்படும். | S | நிதி அமைச்சு | பொது கணக்குகள் திணைக்களம், நிதி அமைச்சு |
| 16 | அனைத்து பொது ஒப்பந்தங்கள் மற்றும் பொது-தனியார் கூட்டு ஒப்பந்தங்களில் கட்டாய ஊழல் எதிர்ப்பு பிரிவைச் சேர்த்தல். | 1. இந்தப் பிரிவு வரைவு செய்யப்பட்டு இறுதி செய்யப்பட்டுள்ளது.<br>2. சுற்றறிக்கை வெளியிடப்பட்டது.<br>3. அனைத்து ஒப்பந்தங்கள் மற்றும் ஒப்பந்தங்களிலும் இந்தப் பிரிவை 100% சேர்த்தல்.<br>4. இணக்க கண்காணிப்பு அமைப்பு நிறுவப்பட்டுள்ளது. | S | நிதி அமைச்சு | பொது கணக்குகள் திணைக்களம், நிதி அமைச்சு |
| 17 | மாநில நிர்வாகம் மற்றும் அரசுக்கு சொந்தமான நிறுவனங்களில் உள்ள அனைத்து பதவிகளுக்கும் ஆட்சேர்ப்பு செய்வதில் தகுதி மற்றும் தொழில்முறை அளவுகோல்களை தொடர்ந்து பயன்படுத்துவதை உறுதி செய்தல். | 1. தரப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு அளவுகோல்கள் மற்றும் செயல்முறைகள் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்படுகின்றன.<br>2. புதிய ஆட்சேர்ப்பு அளவுகோல்கள் குறித்த ஆட்சேர்ப்பு அதிகாரிகளுக்கான பயிற்சி அமர்வுகள் குறைந்தபட்சம் 90% பங்கேற்பு விகிதத்துடன் நடத்தப்படுகின்றன.<br>3. இணக்க கண்காணிப்பு அமைப்பு நிறுவப்பட்டுள்ளது. | S | நிதி அமைச்சு | பொது கணக்குகள் திணைக்களம், நிதி அமைச்சு |
| 18 | பொது கொள்முதலில் முரண்பாடு ஆர்வ விதிகளை மீறும் அரசு ஊழியர்கள் மீது வழக்கமான தடைகள் விதிக்கப்படுவதை உறுதி செய்தல். | 1. குறைந்தபட்சம் 90% பங்கேற்புடன் நடத்தப்படும் தடைகள் விதிப்பது குறித்த பயிற்சி.<br>2. முரண்பாடு சார்ந்த மீறல்களைப் முறைப்பாடளிப்பதிலும் அவற்றை நிவர்த்தி செய்வதிலும் 90% இணக்க விகிதம் அடையப்படுகிறது.<br>3. அடையாளம் காணப்பட்ட மீறல் வழக்குகளில் குறைந்தது 80% தடைகள் விதிக்கப்படுகின்றன. | இலங்கை | தேசிய கொள்முதல் ஆணைக்குழு | தேசிய கொள்முதல் ஆணைக்குழு |
| 19 | தணிக்கை அறிக்கைகளின் கண்டுபிடிப்புகள் மற்றும் பரிந்துரைகளை செயல்படுத்துவதை கண்காணிக்க ஒரு பொறிமுறையை உருவாக்குதல். | 1. கண்காணிப்பு கட்டமைப்பு உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டது.<br>2. தணிக்கை பரிந்துரைகளின் குறைந்தபட்சம் 80% செயல்படுத்தல் விகிதம் அடையப்பட்டுள்ளது. | M | பாராளுமன்றம் | பொதுக் கணக்குக் குழு<br>பொது நிறுவனங்கள் குழு (COPE) |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 20 | 1. பின்வரும் அம்சங்கள் மூலம், வலுவான நிதித் திட்டமிடலை ஊக்குவிக்கும் மற்றும் வலுவான கட்டுப்பாடு மற்றும் வெளிப்படைத்தன்மைக்கான அடித்தளத்தை நிறுவும் ஒரு பயனுள்ள தேசிய பாதீட்டு செயல்முறையை செயல்படுத்துதல் :<br>2. துல்லியமான முன்னறிவிப்புகள் மற்றும் முழுமையான இடர் பகுப்பாய்வை நம்பியிருக்கும் நடுத்தர கால நிதி கட்டமைப்பைப் பயன்படுத்தி தேசிய பாதீட்டை உருவாக்குங்கள்.<br>3. நிதி திட்டமிடல் மற்றும் கொள்கை தலையீடுகளில் முழு வெளிப்படைத்தன்மையை உறுதி செய்வதற்காக, பாதீடு முழு பொது அரசுத் துறையையும் உள்ளடக்கியதாக இருப்பதை உறுதி செய்யவும்.<br>4. பாதீட்டை அங்கீகரிப்பதற்கான பாராளுமன்றத்தின் அதிகாரத்தை நிலைநிறுத்தும் மற்றும் வள பயன்பாட்டிற்கு பாதீட்டு நிறுவனங்களை பொறுப்பேற்க வைக்கும் வரையறுக்கப்பட்ட, வெளிப்படையான மற்றும் சரியான நேரத்தில் செயல்முறை மூலம் பாதீட்டை தயாரிக்கவும். | 1. தேசிய பாதீட்டு நடுத்தர கால நிதி கட்டமைப்பைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டது.<br>2. முழு பொது அரசுத் துறையும் பாதீட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | S | நிதி அமைச்சு | நிதி அமைச்சு |
| 21 | பாராளுமன்றம் ஒப்புதலுக்கு சற்று முன்பு பெரிய மாற்றங்களைச் செய்வதைத் தடுப்பதன் மூலம் பாதீட்டின் செலவுத் திட்டமிடலில் ஒழுக்கத்தை மேம்படுத்துதல், அனைத்து மாற்றங்களும் செலவு-பயன் மற்றும் சாத்தியக்கூறுகளின் முன் பகுப்பாய்விற்கு உட்படுவதை உறுதிசெய்து, பாதீட்டுப் பற்றாக்குறையில் அவற்றின் தாக்கத்தை கவனமாகக் கருத்திற் கொள்ளுதல். | 1. பாதீட்டின் செலவினத் திட்டமிடலில் பெரிய அளவில் சரிசெய்தல்களின் அதிர்வெண் குறைந்தது 70% குறைக்கப்பட்டது. | S | நிதி அமைச்சு | நிதி அமைச்சு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 22 | நிதிக் கொள்கையில் முழுமையான வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வை உறுதி செய்வதற்காக, அனைத்து பொது நிதிகளையும் தேசிய பாதீட்டிற்குள் ஒருங்கிணைத்து, பாதீட்டுக்கு வெளியே நிலையான உள் கட்டுப்பாடுகள் மற்றும் வெளிப்புற மேற்பார்வை இல்லாத நிதிகளுடன் தொடர்புடைய ஊழல் அபாயத்தைக் குறைத்தல். | 1. பங்குதாரர் ஆலோசனைகள் நடத்தப்பட்டன.<br>2. தேசிய பாதீட்டிற்க்குள் அனைத்து பொது நிதிகளும் 100% ஒருங்கிணைக்கப்பட்டன.<br>3. அனைத்து ஒருங்கிணைந்த பொது நிதிகள் மற்றும் அவற்றின் ஒதுக்கீடுகளை விவரிக்கும் வருடாந்த வெளிப்படைத்தன்மை அறிக்கைகள் வெளியிடப்படுகின்றன. | S | நிதி அமைச்சு | தேர்தல் ஆணைக்குழு |
| **துணை நோக்கம் 5: தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் நேர்மை மற்றும் பொறுப்புணர்வை உறுதி செய்வதற்கும், பொதுமக்களின் நம்பிக்கை மற்றும் நெறிமுறை நிர்வாகத்தை வளர்ப்பதற்கும் வலுவான வழிமுறைகளை நிறுவுதல்.** | | | | | |
| 1 | தேர்தல் பிரச்சார செலவின கண்காணிப்பு தொடர்பான சட்ட மீறல்கள் தொடர்பான எச்சரிக்கைக் கொடிகளை முறையாகக் கண்டறிவதற்கான தரவுகளை மையப்படுத்த ஒரு மின்னணு அமைப்பை நிறுவுதல். | 1. செயல்படுத்தலை மேற்பார்வையிட தொழில்நுட்பக் குழு நியமிக்கப்பட்டது.<br>2. பங்குதாரர்களின் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புகளை அடையாளம் காண மதிப்பீடு தேவை.<br>3. கணினி விவரக்குறிப்புகளுடன் கூடிய கருத்துக் குறிப்பு உருவாக்கப்பட்டது.<br>4. தொடர்புடைய அனைத்து தரவு மூலங்களும் அடையாளம் காணப்பட்டு தரவு தரப்படுத்தல் நெறிமுறைகள் உருவாக்கப்பட்டன.<br>5. வழங்கப்பட்ட ஏலங்களுக்கான அழைப்பு.<br>6. கொள்முதல் குழு கூடியது.<br>7. தேவையான மென்பொருள் வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்டது.<br>8. தேவையான வன்பொருள் வாங்கப்பட்டது.<br>9. குறைந்தது 80% பயனர் பயிற்சிகள் நடத்தப்பட்டன.<br>10. மையப்படுத்தப்பட்ட அமைப்பில் தொடர்புடைய தரவு மூலங்களை 100% ஒருங்கிணைத்தல்.<br>11. அமைப்பு இயக்கப்பட்டது.<br>12. நடத்தப்பட்ட அமைப்பின் செயற்றிறன் மற்றும் செயற்றிறன் மதிப்பிடுவதற்கான வருடாந்த மதிப்பாய்வு. | M | தேர்தல் ஆணைக்குழு | தேர்தல் ஆணைக்குழு |
| 2 | பொது அலுவலகத்தில் பொறுப்புக்கூறல் மற்றும் நேர்மையை மேம்படுத்த நாடாளுமன்ற நடத்தை விதிகளை விரிவாக மதிப்பாய்வு செய்தல். | 1. ஒரு மீள் ஆய்வுக் குழுவை அமைக்கவும்.<br>2. தற்போதைய நடத்தை விதிகள் ஒரு ஆலோசனை செயல்முறை மூலம் மதிப்பாய்வு செய்யப்பட்டன.<br>3. திருத்தங்கள் இறுதி செய்யப்பட்டன.<br>4. திருத்தப்பட்ட சட்டத் தொகுப்பு குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு (எம்.பி.க்கள்) 100% பயிற்சி மற்றும் விழிப்புணர்வு அமர்வுகள் நடத்தப்பட்டன. | M | பாராளுமன்றம் | பாராளுமன்றம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூ ராட்சி மன்றங்களின் பிரதிநிதிகள் மற்றும் கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்களுக்கான நேர்மை மற்றும் பொறுப்புக்கூறலை மேம்படுத்துவதற்காக நெறிமுறைக் குறியீடுகளை உருவாக்கி அறிமுகப்படுத்துதல். | 1. பணிக்குழு நியமிக்கப்பட்டது. ஆரம்ப வரைவுகள் நிறைவடைந்தன.<br>2. பங்குதாரர் ஆலோசனைகள் நடத்தப்பட்டன.<br>3. நடத்தை விதிகள் இறுதி செய்யப்பட்டன.<br>4. மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகள் மற்றும் கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்களுக்கு நெறிமுறைகள் குறித்த 100% பயிற்சி மற்றும் விழிப்புணர்வு அமர்வுகள் நடத்தப்பட்டன. | M | | |
| **துணை நோக்கம் 6: குற்றவியல் நீதி அமைப்பின் நேர்மை மற்றும் செயல்திறன் குறித்த பொதுமக்களின் நம்பிக்கையை மேம்படுத்துதல்.** | | | | | |
| 1 | 2023 ஆம் ஆண்டு 09 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்பு சட்டத்தின் கீழ், பொது அதிகாரிகள் மற்றும் பொதுமக்களுக்கு தகவல் தெரிவிப்பவர் பாதுகாப்பு பொறிமுறையைப் பற்றித் தெரிவிக்க ஒரு விரிவான தகவல் தொடர்பு உத்தியை உருவாக்கல் | 1. தொடர்பு உத்தி உருவாக்கப்பட்டது.<br>2. உள்ளடக்கம் உருவாக்கப்பட்டது.<br>3. தகவல்களைப் பரப்புவதற்குப் பொறுப்பான ஊழியர்களுக்கான பயிற்சி 100% நிறைவடைந்துள்ளது.<br>4. பொதுமக்களுக்கும் அரசு அதிகாரிகளுக்கும் விழிப்புணர்வு பிரச்சாரங்கள் நடத்தப்பட்டன.<br>5. பின்னூட்ட வழிமுறை செயல்படுத்தப்பட்டது.<br>6. உருவாக்கப்பட்ட தகவல் தொடர்பு முயற்சிகளின் செயல்திறனை மதிப்பிடுவதற்கான செயல்திறன் அளவீடுகள். | M | CIABOC | CIABOC |
| 2 | ஊழல் குற்றங்கள் தொடர்பில் முறைப்பாடு அளிப்பவரின் பாதுகாப்பு பொறிமுறை மற்றும் ஊழலைப் முறைப்பாடளிப்பதற்கான செயல்முறை பற்றிய விவரங்களை விளக்க பொது அதிகாரிகள் மற்றும் பங்குதாரர்களுக்கு பயிற்சி அமர்வுகளை ஏற்பாடு செய்தல் | 1. அனைத்து பயிற்சிப் பொருட்களும் உருவாக்கப்பட்டன.<br>2. பயிற்சி பங்கேற்பு விகிதம் குறைந்தது 85% ஆகும்.<br>3. பயிற்சி நிறைவு விகிதம் குறைந்தது 90% ஆகும்.<br>4. பயிற்சிக்குப் பிந்தைய அறிவு மதிப்பீடு, அறிவுத் தக்கவைப்பு மற்றும் செயல்பாட்டு மற்றும் உள்ளடக்க அம்சங்களைப் புரிந்துகொள்வதற்கு சராசரியாக 80% ஆகும்.<br>5. பயிற்சி உள்ளடக்கத்தின் 70% பயன்பாடு. | S-M | CIABOC | CIABOC<br>SLIDA |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | தகவல் தெரிவிப்பவர்களைப் பாதுகாக்கவும், அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும் துறைத் தலைவருக்கு (HoD) அதிகாரம் அளித்தல்:<br>1. தகவல் தெரிவிப்பவர்களைப் பாதுகாப்பதிலும் அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதிலும் பிரிவுத் தலைவர்களின் பொறுப்புகளைத் தெளிவாக வரையறுத்தல்.<br>2. தகவல் தெரிவிப்பவர்களை திறம்பட ஆதரிப்பதற்கும் பாதுகாப்பதற்கும் வளங்கள் மற்றும் வழிகாட்டுதல்களை திணைக்கள தலைவர்களுக்கு வழங்குதல். | 1. திணைக்கள தலைவர்களின் பொறுப்புகளை கோடிட்டுக் காட்டும் தெளிவான ஆவணம் உருவாக்கப்பட்டு பரப்பப்படுகிறது.<br>2. குறைந்தது 80% திணைக்கள தலைவர்கள் தகவல் வெளியிடுபவர் பாதுகாப்பு குறித்த பயிற்சியை முடிக்கிறார்கள்.<br>3. துறைத் தலைவர்களுக்கும் விரிவான வளங்களும் வழிகாட்டுதல்களும் வழங்கப்படுகின்றன .<br>4. தகவல் தெரிவிப்பவர்களை ஆதரிப்பதில் திணைக்கள தலைவர்களின் நம்பிக்கை மற்றும் செயல்திறனை மதிப்பிடுவதற்கு பின்னூட்ட வழிமுறை நிறுவப்பட்டது. | S | CIABOC | CIABOC<br><br>அனைத்து அரசாங்க நிறுவனங்களின் IAUகள் |
| 4 | நீதித்துறையின் நேர்மை மற்றும் பொறுப்புணர்வை மேம்படுத்துவதற்காக, நீதித்துறையே உருவாக்கிய தெளிவான நடத்தை வழிகாட்டுதல்களை உருவாக்குங்கள். | 1. பங்குதாரர் ஆலோசனைகள் நடத்தப்பட்டன.<br>2. வழிகாட்டுதல்கள் வரைவு செய்யப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டன.<br>3. புதிய வழிகாட்டுதல்கள் குறித்து 100% நீதித்துறை உறுப்பினர்களுக்கு பயிற்சி அமர்வுகள் நடத்தப்பட்டன. | S | நீதித்துறை சேவை ஆணைக்குழு (JSC) | JSC |
| 5 | சட்ட அமுலாக்க அதிகாரிகளுக்கான நடத்தை விதிகளை அறிமுகப்படுத்துதல், அதை அவர்களின் வேலைவாய்ப்பு ஒப்பந்தங்களின் கட்டாய பகுதியாகக் கடைப்பிடித்தல். | 1. ஆரம்ப வரைவு முடிந்தது.<br>2. பங்குதாரர் ஆலோசனைகள் நடத்தப்பட்டன.<br>3. நடத்தை விதிகள் இறுதி செய்யப்பட்டன.<br>4. புதிய விதிகள் குறித்த பயிற்சி மற்றும் விழிப்புணர்வு அமர்வுகள் 100% நடத்தப்பட்டன.<br>5. புதிய வேலைவாய்ப்பு ஒப்பந்தங்களில் 100% நடத்தை விதிகளைப் பின்பற்றுவதும் அடங்கும்.<br>6. இணக்க கண்காணிப்பு கட்டமைப்பு நிறுவப்பட்டது.<br>7. செயற்றிறன் மற்றும் பொருத்தத்திற்கான வருடாந்த மதிப்பாய்வு நடத்தப்பட்டது. | S | CIABOC | இலங்கை பொலிஸ் திணைக்களம்<br><br>CIABOC |
| 6 | தெளிவான நெறிமுறை தரநிலைகளை நிறுவுவதற்கும் பொதுமக்களின் நம்பிக்கையை மேம்படுத்துவதற்கும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் வழக்கறிஞர்களுக்கு ஒரு நடத்தை விதிகளை அறிமுகப்படுத்துதல். | 1. ஆரம்ப வரைவு முடிந்தது.<br>2. பங்குதாரர் ஆலோசனைகள் நடத்தப்பட்டன.<br>3. நடத்தை விதிகள் இறுதி செய்யப்பட்டன.<br>4. புதிய விதிகள் குறித்த பயிற்சி மற்றும் விழிப்புணர்வு அமர்வுகள் 100% நடத்தப்பட்டன.<br>5. செயல்திறன் மற்றும் பொருத்தத்திற்கான வருடாந்த மதிப்பாய்வு நடத்தப்பட்டது. | S | சட்டமா அதிபர் திணைக்களம் | சட்டமா அதிபர் திணைக்களம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7 | சட்டத்தரணிகளிடையே நெறிமுறை நடத்தையை ஊக்குவிக்க உச்ச நீதிமன்ற விதிகளின் அமுலாக்கத்தை வலுப்படுத்துதல். | 1. விதிகளின் மதிப்பாய்வு முடிந்தது.<br>2. பங்குதாரர் ஆலோசனைகள் நிறைவடைந்தன.<br>3. திருத்தங்கள் இறுதி செய்யப்பட்டன.<br>4. புதிய விதிகள் குறித்து வழக்கறிஞர் சங்க உறுப்பினர்களுக்கு பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நடத்தப்பட்டது.<br>5. இணக்க கண்காணிப்பு கட்டமைப்பு நிறுவப்பட்டது.<br>6. செயல்திறன் மற்றும் பொருத்தத்திற்கான வருடாந்த மதிப்பாய்வு நடத்தப்பட்டது. | | இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் (BASL) | BASL |
| 8 | மனித உரிமை மீறல்கள் தொடர்பான முறைப்பாடுகளுக்குள் ஊழல் பிரச்சினைகளை திறம்பட கையாள்வது குறித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு (HRCSL) அதிகாரிகளுக்கு பயிற்சி அளித்தல். | 1. அனைத்து பயிற்சிப் பொருட்களும் உருவாக்கப்பட்டன.<br>2. நடத்தப்பட்ட பயிற்சி அமர்வுகளின் எண்ணிக்கை.<br>3. பயிற்சி பங்கேற்பு விகிதம் குறைந்தது 90% ஆகும்.<br>4. பயிற்சி நிறைவு விகிதம் குறைந்தது 95% ஆகும்.<br>5. பயிற்சிக்கு முந்தைய பயிற்சி முதல் பயிற்சிக்கு பிந்தைய மதிப்பீடுகள் வரையிலான மதிப்பெண்களில் அறிவு மேம்பாடு குறைந்தது 40% ஆகும்.<br>6. பயிற்சி செயல்திறன் நோக்கம் 85% உடன் குறைந்தது 80% பங்கேற்பாளர்களிடமிருந்து கருத்துகள் பெறப்பட்டன. | S | இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு (HRCSL) | CIABOC<br><br>HRCSL |
| **துணை நோக்கம் 7: தனியார் துறைக்குள் ஊழலைத் தடுக்கவும், நெறிமுறை வணிக நடைமுறைகளை மேம்படுத்தவும் இலக்கு வைக்கப்பட்ட முயற்சிகளை செயல்படுத்துதல்.** | | | | | |
| 1 | தனியார் துறை, சட்ட வல்லுநர்கள் மற்றும் ஊழல் எதிர்ப்பு அமைப்புகளின் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு பணிக்குழுவை உள்ளடக்கிய ஒரு ஆலோசனை செயல்முறை மூலம், தனியார் துறைக்கு குறிப்பாக ஒரு மாதிரி நிறுவன நேர்மை மற்றும் ஊழல் எதிர்ப்பு குறியீட்டை உருவாக்குதல். | 1. பணிக்குழு நியமிக்கப்பட்டது.<br>2. ஆரம்ப வரைவு முடிந்தது.<br>3. பங்குதாரர் ஆலோசனைகள் நடத்தப்பட்டன.<br>4. நடத்தை விதிகள் இறுதி செய்யப்பட்டன. | M | CIABOC | CIABOC<br><br>கம்பனிப் பதிவாளர்<br><br>பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு<br><br>(SEC)<br><br>வர்த்தக சபைகள்<br><br>இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம் (CA இலங்கை)<br><br>இலங்கை முதலாளிகள் கூட்டமைப்பு (EFC) |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2 | செயற்பாட்டு அமைப்புகளில் குறியீட்டின் செயல்திறன் மற்றும் நடைமுறைத்தன்மையை செயல்படுத்தவும் சோதிக்கவும் விரும்பும் நிறுவனங்களுடன் ஒரு முன்னோடித் திட்டத்தை செயல்படுத்துதல். | 1. பங்கேற்கும் நிறுவனங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.<br>2. புதிய விதிகள் குறித்த பயிற்சி மற்றும் விழிப்புணர்வு அமர்வுகள் 100% நடத்தப்பட்டன.<br>3. செயல்படுத்தப்பட்ட குறியீட்டின் விதிகள்.<br>4. இணக்க கண்காணிப்பு கட்டமைப்பு நிறுவப்பட்டது.<br>5. செயற்றிறன் மற்றும் பொருத்தம் குறித்த 2 ஆண்டு மதிப்பாய்வு நடத்தப்பட்டது. | M | CIABOC | கம்பனிப் பதிவாளர்<br><br>PSC<br><br>வர்த்தக சபைகள்<br><br>இலங்கை பட்டயக்கணக்காளர் (CA)<br><br>EFC |
| 3 | நிறுவனங்கள் குறியீட்டை திறம்பட புரிந்துகொண்டு செயல்படுத்த உதவும் பயிற்சிப் பொருட்கள் மற்றும் வளங்களை உருவாக்குங்கள். | 1. பயிற்சித் தேவைகள் அடையாளம் காணப்பட்டன.<br>2. அனைத்து உள்ளடக்கமும் பயிற்சிப் பொருட்களும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் உருவாக்கப்பட்டன.<br>3. பயிற்சி அமர்வுகளில் நிறுவனங்களின் குறைந்தது 70% ஈடுபாடு அடையப்பட்டுள்ளது. | M | CIABOC | கம்பனிப் பதிவாளர்<br><br>PSC<br><br>வர்த்தக சபைகள்<br><br>இலங்கை பட்டயக்கணக்காளர் (CA)<br><br>EFC |
| 4 | நிறுவனங்கள் பெருநிறுவன நேர்மை மற்றும் ஊழல் எதிர்ப்பு குறியீட்டை ஏற்றுக்கொண்டு செயல்படுத்துவதற்கான ஊக்கத்தொகைகளை உருவாக்குதல். | 1. ஊக்கத்தொகைகளுக்கான கட்டமைப்பு உருவாக்கப்பட்டது.<br>2. முதல் வருடத்திற்குள் ஊக்கத்தொகை திட்டத்தில் குறைந்தது 40 நிறுவனங்களின் பங்கேற்பு உறுதி செய்யப்பட்டது.<br>3. திட்டத்தின் செயல்திறனை அவ்வப்போது மதிப்பீடு செய்தல் மற்றும் கட்டமைப்பில் செய்யப்பட்ட சரிசெய்தல்.<br>4. நிறுவப்பட்ட வெற்றிகரமான நிறுவனங்களுக்கு தெரிவுநிலை மற்றும் அங்கீகாரத்தை வழங்குவதற்கான திட்டம். | M | CIABOC | கம்பனிப் பதிவாளர்<br><br>PSC<br><br>ர்த்தக சபைகள்<br><br>இலங்கை பட்டயக்கணக்காளர் (CA)<br><br>EFC |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5 | தனியார் துறை நிறுவனங்களிடையே இந்த விதியை ஊக்குவிக்க ஒரு பிரச்சாரத்தைத் தொடங்குங்கள், இது பெருநிறுவன பொருளாதார செயல்திறன் மற்றும் நற்பெயருக்கு அதன் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது. | 1. பிரச்சாரம் வடிவமைக்கப்பட்டு தொடங்கப்பட்டது.<br>2. பிரச்சாரத்திற்கு முந்தைய மற்றும் பிந்தைய ஆய்வுகள், இதன் விளைவாக நடத்தப்பட்ட நெறிமுறைகள் குறித்த விழிப்புணர்வு குறைந்தது 30% அதிகரித்துள்ளது.<br>3. பிரச்சாரம் தொடர்பான நிகழ்வுகள் அல்லது முன்முயற்சிகளில் குறைந்தது 50 நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன. | M | CIABOC | கம்பனிப் பதிவாளர்<br><br>PSC<br><br>வர்த்தக சபைகள்<br><br>இலங்கை பட்டயக்கணக்காளர் (CA)<br><br>EFC |
| 6 | ஊழல் நடைமுறைகளைப் முறைப்பாடளிக்க ஊழியர்கள் பாதுகாப்பான அறிக்கையிடல் வழிமுறைகளை (அநாமதேயமானவை உட்பட) நிறுவுதல். | 1. பாதுகாப்பான மற்றும் ரகசியமான அறிக்கையிடல் சேனல்கள் நிறுவப்பட்டுள்ளன.<br>2. 100% பயனாளர் அணுகல் விகிதம்.<br>3. முதல் ஆண்டில் சம்பவ அறிக்கையிடல் அளவு 25% அதிகரிப்பைக் காட்டுகிறது.<br>4. அறிக்கையிடல் வழிமுறைகளின் செயல்திறன் மற்றும் ரகசியத்தன்மை தொடர்பான வருடாந்த பயனர் கணக்கெடுப்புகளில் திருப்தி விகிதம் குறைந்தது 75% ஆகும். | S | CIABOC<br><br>SEC | தனியார் துறை நிறுவனங்கள் |
| 7 | பொது நிர்வாகத்தை கையாள்வதில் எதிர்கொள்ளும் ஊழல் மற்றும் பிற முறைகேடுகளைப் முறைப்பாடளிக்க தேசிய மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள் ஒரு தளத்தை வழங்க இலங்கையில் வணிக குறைதீர்ப்பாளரின் அலுவலகத்தை நிறுவுதல். | 1. ஆலோசனை செயல்முறை மூலம் உருவாக்கப்பட்ட சட்ட மற்றும் செயல்பாட்டு கட்டமைப்பு.<br>2. குறைதீர்ப்பாளரின் அலுவலகம் நிறுவப்பட்டது.<br>3. அலுவலகம் தேவையான அனைத்து வளங்களுடனும் வழங்கப்படுகிறது.<br>4. விரிவான விழிப்புணர்வு பிரச்சாரம் தொடங்கப்பட்டது.<br>5. செயல்பாட்டின் முதல் வருடத்திற்குள் குறைந்தது 60% வழக்குகளில் தீர்வு விகிதம். | M | நிதி அமைச்சு | அமைச்சரவை<br><br>நிதி அமைச்சு<br><br>கம்பனிப் பதிவாளர் |



கடுப்புல் மலர் – நேர்மை

# B. கல்வி மற்றும் சமூக ஈடுபாடு

## B. கல்வி மற்றும் சமூக ஈடுபாடு

***மூலோபாய முன்னுரிமை பகுதி இரண்டு: கல்வி மற்றும் சமூக ஈடுபாடு***

ஒரு தேசமாக ஊழலை எதிர்த்துப் போராடும்போது, பன்முக அணுகுமுறை தேவைப்படுகிறது - இது சட்ட மற்றும் நிறுவன சீர்திருத்தங்களை மட்டுமல்ல, கல்வி மற்றும் சமூக ஈடுபாட்டின் மூலம் பொதுமக்களை மேம்படுத்துவதையும் உள்ளடக்கியது. ஊழலை அதன் வேர்களில் எதிர்த்துப் போராடக்கூடிய வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் நெறிமுறை நிர்வாகத்தின் கலாச்சாரத்தை உருவாக்குவதில் இந்த அம்சம் முக்கியமானது, அத்துடன் பங்குதாரர்களிடையே நெறிமுறை விழிப்புணர்வு மற்றும் நேர்மை திறனிற்கான அடித்தளத்தை உருவாக்கும்.

ஊழலின் தீங்கு விளைவிக்கும் விளைவுகளைப் பற்றிய ஆழமான புரிதலை ஊக்குவிப்பதன் மூலம், தனிநபர்கள் தனிப்பட்ட மற்றும் சமூக மட்டத்தில் அதன் தீங்கு விளைவிக்கும் விளைவுகளை அடையாளம் காண கல்வி உதவுகிறது. மேலும், பொதுமக்களின் உரிமைகள் மற்றும் ஊழல் அதிகாரிகளை பொறுப்புக்கூற வைப்பதற்கான வழிமுறைகள் குறித்த விழிப்புணர்வை கல்வி அதிகரிக்கிறது. இதன் மூலம், பொதுமக்கள் பொறுப்புக்கூறலைக் கோருவதற்கும், ஊழல் நடைமுறைகளை சவால் செய்வதற்கும், நெறிமுறையை முடிவெடுக்கும் செயன்முறைகளில் ஈடுபடுவதற்கும் சிறப்பாகத் தயாராக இருப்பார்கள். இந்த வழியில், கல்வி தனிப்பட்ட விழிப்புணர்வை ஏற்படுத்துவது மட்டுமல்லாமல், நல்லாட்சிக்கான செயலில் பங்கேற்பு மற்றும் வாதத்தை ஊக்குவிப்பதன் மூலம் ஜனநாயக நிறுவனங்களையும் பலப்படுத்துகிறது.

கல்வி தனிநபர்களுக்கு அதிகாரம் அளிக்கும் அதே வேளையில், சமூக ஈடுபாட்டுடன் ஊழலை எதிர்கொள்வதற்கான ஒரு கூட்டு சக்தியை உருவாக்குகிறது. மக்கள் செயலற்றவர்களாகவோ அல்லது ஈடுபாட்டிலிருந்து விடுபட்டவர்களாகவோ இருக்கும் சூழல்களில் ஊழல் செழித்து வளர்கிறது, இதனால் ஊழல் நடைமுறைகள் கட்டுப்படுத்தப்படாமல் போக அனுமதிக்கின்றன. சமூக ஈடுபாடானது பகிரப்பட்ட பொறுப்புணர்வு உணர்வை வளர்க்கிறது, நீதி, வெளிப்படைத்தன்மை மற்றும் நெறிமுறை நிர்வாகம் போன்ற பொதுவான இலக்குகளை நோக்கி தனிநபர்கள் ஒன்றிணைந்து செயற்பட ஊக்குவிக்கிறது. இந்த வழியில், சமூகங்கள் சீர்திருத்தத்திற்கான சக்திவாய்ந்த அமைப்பாகச் செயற்பட முடியும், ஊழல் நடைமுறைகள் பகிரங்கப்படுத்தப்பட்டு தீர்க்கப்படுவதை உறுதி செய்கிறது.

இந்தச் சூழ்நிலையில், NACAP "கல்வி மற்றும் சமூக ஈடுபாட்டை" அதன் இரண்டாவது முக்கிய மூலோபாய முன்னுரிமைப் பகுதியாக அடையாளம் காட்டுகிறது. இதன் ஒட்டுமொத்த மூலோபாய நோக்கமானது "மதிப்பு அடிப்படையிலான கல்வி மற்றும் சமூக ஈடுபாட்டை ஊக்குவித்தல், பிரஜைகளை அதிகாரம் அளித்தல் மற்றும் தகவலறிந்த பங்கேற்பு மற்றும் நெறிமுறை நடத்தை மூலம் ஊழலைக் குறைத்தல்" என்பதாகும்.

ஊழலை நோக்கிய தற்போதைய கலாச்சாரம் மற்றும் அணுகுமுறைகளை மாற்ற வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து, பொதுவாக ஊழலை எதிர்த்துப் போராடுவதன் அவசியத்தை உணர்ந்து, NACAP, முறையான கல்வி முறைக்குள் சிறுவர்களுக்கு நேர்மை, வெளிப்படைத்தன்மை மற்றும் சட்டத்தின் ஆட்சியின் முக்கியத்துவத்தை கற்பிக்க (பிற நடவடிக்கைகளுடன்) முன்மொழிகிறது. ஆரம்பக் கல்வி மூலம் வலுவான குடிமைப் பொறுப்புணர்வு உணர்வை வளர்ப்பதன் மூலமும், நேர்மை மற்றும் நியாயத்தின் மதிப்புகளை வளர்ப்பதன் மூலமும், குழந்தைகள் ஒருமைப்பாட்டின் கலாச்சாரத்திற்குள் திறம்பட அறிமுகப்படுத்தப்படுகிறார்கள், இது வலுவான நெறிமுறைக் கொள்கைகளைக் கொண்ட முன்மாதிரியான பெரியவர்களாக அவர்களின் வளர்ச்சிக்கு பங்களிக்கும். அதே நேரத்தில், பிரஜை ஈடுபாடு தனிநபர்கள் ஆளுகை கட்டமைப்புகளுடன் தொடர்பு கொள்ளவும், அவர்களின் செயற்பாடுகளை கண்காணிக்கவும் உதவுகிறது, அவர்கள் ஊழல் நடைமுறைகளில் ஈடுபடவில்லை என்பதை உறுதி செய்கிறது.

அத்தகைய நோக்கத்திற்காக, NAAP பின்வரும் எட்டு (08) துணை நோக்கங்களின் கீழ் நடவடிக்கைகளை முன்மொழிகிறது:

**துணை நோக்கம் 1:** சிறுவர்கள் மற்றும் இளைஞர்களுக்கு ஒழுக்க விழுமியங்களை வளர்க்கவும், வளர்ச்சியின் உருவாக்கும் கட்டங்களில் பொறுப்பான குடியுரிமையை ஊக்குவிக்கவும் நேர்மை கல்வியை வழங்குதல்.

**துணை நோக்கம் 2:** பொது அதிகாரிகளிடையே வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் நெறிமுறை நடைமுறைகளை மேம்படுத்துவதற்காக பொதுத்துறைக்குள் விழிப்புணர்வை ஏற்படுத்தும் முயற்சிகளை மேம்படுத்துதல்.

**துணை நோக்கம் 3:** வெளிப்படைத்தன்மை மற்றும் நல்லாட்சியை ஊக்குவிப்பதில் சிவில் சமூகம் மற்றும் குடிமக்களின் பங்கை வலுப்படுத்துவதன் மூலம் பொறுப்புக்கூறலுக்கான பொதுமக்களின் கோரிக்கையை வளர்ப்பது.

**துணை நோக்கம் 4:** சமூகத்திற்குள் ஒருமைப்பாடு கலாச்சாரத்தை வளர்ப்பதிலும் நெறிமுறை தரங்களை மேம்படுத்துவதிலும் ஊடகங்களின் பங்கை வலுப்படுத்துதல்.

**துணை நோக்கம் 5:** மதிப்பு அடிப்படையிலான கல்வி முயற்சிகள் மூலம் நேர்மையான சமூகத்தை நிறுவுவதற்கு தனியார் துறையை ஈடுபடுத்துதல்.

**துணை நோக்கம் 6:** ஊழல் எதிர்ப்புப் பகுதியில் ஈடுபாட்டை மேம்படுத்த மதிப்பு அடிப்படையிலான கல்வி முயற்சிகள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளிடையே விழிப்புணர்வை ஊக்குவித்தல்.

**துணை நோக்கம் 7:** குற்றவியல் நீதிச் செயற்பாட்டில் பங்குதாரர்களிடையே விழிப்புணர்வை மேம்படுத்துதல்.

**துணை நோக்கம் 8:** நாட்டில் ஊழலின் காரணங்கள், தாக்கங்கள் மற்றும் வடிவங்களை பகுப்பாய்வு செய்யும் விரிவான ஆராய்ச்சி முயற்சிகள் மூலம் அதைப் பற்றிய புரிதலை மேம்படுத்துதல்.

தனிநபர்களும் சமூகங்களும் தங்கள் உரிமைகள், ஊழலின் விளைவுகள் மற்றும் அவர்கள் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய வழிகள் பற்றி அறிந்து கொள்ளும்போது, ஊழலுக்கு எதிரான போராட்டத்தை அனைத்து கோணங்களிலிருந்தும் வலுப்படுத்த, தனித்தனியாகவும் கூட்டாகவும் நடவடிக்கை எடுக்க அதிக வாய்ப்புள்ளது, இதன் மூலம் நேர்மைக் கலாச்சாரத்தை உருவாக்குகிறது.

| மூலோபாய நோக்கம்: பிரஜைகளை அதிகாரம் அளிக்கவும், தகவலறிந்த பங்கேற்பு மற்றும் நெறிமுறை நடத்தை மூலம் ஊழலைக் குறைக்கவும் மதிப்பு அடிப்படையிலான கல்வி மற்றும் சமூக ஈடுபாட்டை ஊக்குவித்தல். | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **துணை நோக்கம் 1: குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கு ஒழுக்க விழுமியங்களை வளர்க்கவும், வளர்ச்சியின் உருவாக்கும் கட்டங்களில் பொறுப்பான குடியுரிமையை ஊக்குவிக்கவும் நேர்மை கல்வியை வழங்குதல்.** | | | | | | | |
| **இல** | அளவீடு/செயற்பாடு | முக்கிய செயற்றிறன் குறிகாட்டிகள் (KPIகள்) | **கால அளவு** | | | **பொறுப்பான (முன்னணி) நிறுவனம்** | **செயற்படுத்தும் அமைப்புக்கள்** |
| | | | S | M | L | | |
| 1 | இலங்கைக்கான ஊழல் எதிர்ப்பு மற்றும் நேர்மை கல்வி குறித்த தேசிய கொள்கையை உருவாக்குதல். | 1. வரைவு கொள்கை உருவாக்கப்பட்டது.<br>2. பங்குதாரர் ஆலோசனைகள் நிறைவடைந்தன.<br>3. வரைவு இறுதி செய்யப்பட்டது.<br>4. செயற்படுத்தல் உத்தி உருவாக்கப்பட்டது. | | M | | கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு | கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு |
| 2 | பங்கேற்பு கல்வி முறைகள் மூலம் நேர்மை மற்றும் ஊழல் எதிர்ப்பு செய்திகள் இணைக்கப்படுவதை உறுதிசெய்ய, தொடக்க, நடுநிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளுக்கான தற்போதைய பாடத்திட்டங்களை விரிவாக மதிப்பாய்வு செய்யவும். | 1. தற்போதுள்ள பாடத்திட்டங்கள் 100% மதிப்பாய்வு செய்யப்பட்டன.<br>2. பாடத்திட்டங்களில் இணைக்கப்பட்ட பங்கேற்பு முறைகள் மூலம் ஊழலுக்கு எதிரான செய்திகள்.<br>3. புதுப்பிக்கப்பட்ட பாடத்திட்டங்களை செயற்படுத்துவதில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களில் குறைந்தது 80% பேர் பயிற்சி பெற்றுள்ளனர். | | | L | கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு | கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு<br>தேசிய கல்வி நிறுவனம் |
| 3 | ஊழல் தடுப்புக் கல்வியை பல்கலைக்கழகங்களின் பாடத்திட்டங்களில் ஒருங்கிணைக்க வேண்டும். | 1. தற்போதுள்ள பாடத்திட்டங்கள் 100% மதிப்பாய்வு செய்யப்பட்டன.<br>2. குறைந்தது 5 புதிய அல்லது திருத்தப்பட்ட படிப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.<br>3. பயிற்சி பெற்ற பாடநெறிகளை வழங்கும் ஆசிரியர்களில் குறைந்தது 80% பேர்.<br>4. ஊழல் எதிர்ப்பு கல்வியின் பொருத்தம் மற்றும் தரம் குறித்து குறைந்தபட்சம் 85% மாணவர் திருப்தி விகிதம். | | M | | கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) |
| 4 | தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் தொழிற்கல்வி நிறுவனங்களின் பாடத்திட்டங்களில் ஊழல் எதிர்ப்பு கல்வியை ஒருங்கிணைத்தல். | 1. தற்போதுள்ள பாடத்திட்டங்கள் 100% மதிப்பாய்வு செய்யப்பட்டன.<br>2. குறைந்தது 3 புதிய அல்லது திருத்தப்பட்ட படிப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.<br>3. பயிற்சி பெற்ற பாடங்களை வழங்கும் பயிற்றுனர்களில் குறைந்தது 80% பேர்.<br>4. ஊழல் எதிர்ப்பு படிப்புகளின் பொருத்தம் மற்றும் தரம் குறித்து குறைந்தபட்சம் 85% மாணவர் திருப்தி விகிதம் எட்டப்பட்டுள்ளது. | | M | | கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு | தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை (NAITA) |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5 | பல்கலைக்கழக இளங்கலை பட்டதாரி மாணவர்களுக்கான குவிநோக்கு திட்டங்களில் ஊழல் எதிர்ப்பு மற்றும் நேர்மை முறைமைகளை அறிமுகப்படுத்துதல். | 1. ஒரு விரிவான அமர்வுத் திட்டத்தை உருவாக்கி இறுதி செய்யுங்கள்.<br>2. விழிப்புணர்வு ஏற்படுத்தும் அனைத்துப் பொருட்களும் உருவாக்கப்பட்டன.<br>3. அமர்வு பங்கேற்பு விகிதம் குறைந்தது 90% ஆகும்.<br>4. அமர்வுகளின் செயல்திறன் குறித்த கருத்து ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. | M | UGC | UGC |
| 6 | ஊழல் எதிர்ப்பு மற்றும் நேர்மையை பாடத்திட்டத்தில் எவ்வாறு ஒருங்கிணைப்பது என்பது குறித்து பாலர் பள்ளி மற்றும் பாடசாலை ஆசிரியர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் பட்டறைகள் மற்றும் ஆசிரியர் பயிற்சி பட்டறைகளை நடத்துதல். | 1. விழிப்புணர்வு ஏற்படுத்தும் அனைத்துப் பொருட்களும் உருவாக்கப்பட்டன.<br>2. நடத்தப்பட்ட பட்டறைகளின் எண்ணிக்கை.<br>3. பயிற்சி பங்கேற்பு விகிதம் குறைந்தது 90% ஆகும்.<br>4. பயிற்சி நிறைவு விகிதம் குறைந்தது 95% ஆகும்.<br>5. பயிற்சிக்குப் பிந்தைய அறிவு மதிப்பீடு அறிவுத் தக்கவைப்புக்கு சராசரியாக 80% ஆகும். | S-L | கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு | கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு |
| 7 | ஊழலுக்கு ஆளாகக்கூடிய காலங்களில், குறிப்பாக 1, 5 மற்றும் 12 ஆம் வகுப்புகளுக்கான சேர்க்கையின் போது, ஊழல் நடைமுறைகளைத் தவிர்க்க பள்ளி அதிகாரிகளுக்கு தேவையான வழிகாட்டுதல்கள் மற்றும் சுற்றறிக்கைகளை வெளியிடுதல். | 1. வழிகாட்டுதல்கள் மற்றும் சுற்றறிக்கைகள் உருவாக்கப்பட்டு பரப்பப்பட்டன.<br>2. விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருள் உருவாக்கப்பட்டது.<br>3. விழிப்புணர்வு பிரச்சாரம் தொடங்கப்பட்டது.<br>4. செயற்றிறன் மற்றும் பொருத்தத்திற்கான வருடாந்த மதிப்பாய்வு நடத்தப்பட்டது. | S | கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு | கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு |
| 8 | மாணவர்களிடையே நேர்மை கலாச்சாரத்தை வளர்ப்பதற்காக பாடசாலைகளில் நேர்மை குழுக்களை நிறுவுவதைத் தொடரவும். | 1. இலக்கு வைக்கப்பட்ட பாடசாலைகளில் குறைந்தது 80% பாடசாலைகளில் நேர்மை குழுக்கள் நிறுவப்பட்டுள்ளன.<br>2. பள்ளிகளுக்குள் குறைந்தது 70% உறுப்பினர் விகிதம்.<br>3. குறைந்தபட்சம் 75% குழு உறுப்பினர்கள் ஒவ்வொரு ஆண்டும் குறைந்தது இரண்டு நேர்மை தொடர்பான நடவடிக்கைகளில் பங்கேற்கின்றனர்.<br>4. நேர்மை குழு உறுப்பினர்களை ஆதரிக்கவும் வழிகாட்டவும் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் மற்றும் கல்லூரி நிர்வாகிகளின் எண்ணிக்கை. | S-M | கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு | கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு |
| 9 | உயர்ந்த நெறிமுறை தரங்களை முன்மாதிரியாகக் காட்டும் நேர்மைக் குழுக்களிலிருந்து பாடசாலை மாணவர்களை தெரிவு செய்து வெகுமதி வழங்கவும் | 1. முறையான அங்கீகாரத் திட்டம் நிறுவப்பட்டது.<br>2. நேர்மை குழு அங்கீகாரம் மற்றும் வெகுமதி திட்டத்தில் பங்கேற்கும் பாடசாலைகளின் எண்ணிக்கை.<br>3. நேர்மை மற்றும் ஊழல் எதிர்ப்பு விழிப்புணர்வை ஊக்குவிக்கும் மாணவர் தலைமையிலான முயற்சிகளின் எண்ணிக்கை. | M | கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு | கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 10 | மாணவர்களை ஆக்கப்பூர்வமாக ஈடுபடுத்த, கலை மற்றும் நாடகம் மூலம் இணை பாடத்திட்ட ஊழல் எதிர்ப்பு முயற்சிகள் | 1. வடிவமைக்கப்பட்ட இணை பாடத்திட்ட ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகளின் எண்ணிக்கை (நாடகங்கள், விவாதங்கள், கலைப் போட்டிகள், கதை சொல்லல்).<br>2. கலை மற்றும் நாடகம் சார்ந்த ஊழல் எதிர்ப்பு திட்டங்களை அவற்றின் இணை பாடத்திட்ட நடவடிக்கைகளில் இணைத்துள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை.<br>3. குறைந்தபட்சம் 60% பள்ளிகள் ஒரு கல்வியாண்டில் குறைந்தது ஒரு ஊழல் எதிர்ப்பு கருப்பொருள் கொண்ட படைப்பு செயற்பாட்டையாவது ஏற்றுக்கொள்கின்றன.<br>4. ஊழல் எதிர்ப்பு கலை மற்றும் நாடக நடவடிக்கைகளில் பங்கேற்கும் மாணவர்களின் எண்ணிக்கை.<br>5. மாணவர்கள் உருவாக்கிய கலை மற்றும் நாடக தயாரிப்புகள் மூலம் தெரிவிக்கப்படும் ஊழல் எதிர்ப்பு செய்திகளின் எண்ணிக்கை. | S-L | கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு | கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு |
| 11 | பாடசாலைகளில் ஊழல் எதிர்ப்பு தலைப்புகளில் விவாதங்கள் மற்றும் போட்டிகளை நடத்துங்கள். | 1. பாடசாலை, மாவட்டம் மற்றும் தேசிய அளவில் ஆண்டுதோறும் நடத்தப்படும் பொருத்தமான விவாதங்கள் மற்றும் போட்டிகளின் எண்ணிக்கை.<br>2. ஊழல் எதிர்ப்பு விவாதங்கள் மற்றும் போட்டிகளில் பங்கேற்கும் பாடசாலைகளின் எண்ணிக்கை.<br>3. விவாதங்கள் மற்றும் போட்டிகளில் பங்கேற்க பதிவுசெய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை.<br>4. போட்டிக்குப் பின்னரான அறிவு மதிப்பீடு, பங்கேற்பதற்கு முன்னும் பின்னும் ஊழல் எதிர்ப்புக் கொள்கைகளின் அறிவுத் தக்கவைப்புக்கு சராசரியாக 80% ஆகும். | S-L | கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு | கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு |
| 12 | ஊழல் தடுப்பு நடவடிக்கைகளில் இளைஞர் குழுக்களை ஈடுபடுத்துவதற்கான உத்திகளை உருவாக்குங்கள். | 1. ஊழல் தடுப்பு முயற்சிகளில் ஈடுபட்டுள்ள இளைஞர் குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை.<br>2. ஊழல் எதிர்ப்பு விழிப்புணர்வு மற்றும் தலைமைத்துவம் குறித்து இளைஞர் குழு உறுப்பினர்களுக்கு நடத்தப்பட்ட பயிற்சி அமர்வுகளின் எண்ணிக்கை.<br>3. இளைஞர் குழுக்களால் ஏற்பாடு செய்யப்பட்ட ஊழல் எதிர்ப்பு பிரச்சாரங்கள், பட்டறைகள் மற்றும் சமூக ஈடுபாட்டுத் திட்டங்களின் எண்ணிக்கை.<br>4. சமூகம் அல்லது நிறுவன மட்டத்தில் ஊழல் தொடர்பான பிரச்சினைகளை நிவர்த்தி செய்ய இளைஞர்கள் தலைமையிலான முயற்சிகளின் எண்ணிக்கை.<br>5. கொள்கை வகுப்பாளர்கள், சிவில் சமூக அமைப்புகள் அல்லது தனியார் துறையுடன் நேரடி ஈடுபாட்டை உள்ளடக்கிய இளைஞர் குழு நடவடிக்கைகளின் சதவீதம்.<br>6. இளைஞர்கள் தலைமையிலான ஊழல் எதிர்ப்பு விழிப்புணர்வு திட்டங்கள் மூலம் சமூக உறுப்பினர்கள் மற்றும் மாணவர்களுக்கு சென்றடைந்தது. | S-M | தேசிய இளைஞர்கள் சேவைகள் மன்றம் | தேசிய இளைஞர்கள் சேவைகள் மன்றம் |

| துணை நோக்கம் 2: பொது அதிகாரிகளிடையே வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் விழுமிய நடைமுறைகளை மேம்படுத்துவதற்காக பொதுத்துறைக்குள் விழிப்புணர்வு ஏற்படுத்தும் முயற்சிகளை மேம்படுத்துதல். | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | உயர்மட்ட ஊழல் எதிர்ப்புத் திட்டங்களைத் தொடங்குதல், ஊழலுக்கு பூச்சிய சகிப்புத்தன்மை அணுகுமுறையை வலியுறுத்துதல். | 1. ஊழல் எதிர்ப்புத் திட்டங்களை அதிகாரப்பூர்வமாகத் தொடங்கும் பொது நிறுவனங்களின் எண்ணிக்கை.<br>2. குறைந்தபட்சம் 80% நிறுவனத் தலைவர்கள் இந்தத் திட்டத்தைப் பகிரங்கமாக ஆதரித்து ஆதரிக்கின்றனர்.<br>3. திட்ட தொடக்க நிகழ்வுகள், விழிப்புணர்வு அமர்வுகள் மற்றும் பயிற்சி மூலம் எட்டப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை.<br>4. நிறுவனங்களுக்குள் செயற்படுத்தப்பட்ட ஊழல் எதிர்ப்பு முயற்சிகளின் எண்ணிக்கை. | S | பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு | பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு ஜனாதிபதி செயலகம் CIABOC |
| 2 | அனைத்து வகை அரச அதிகாரிகளுக்குமான அரச தடை பரீட்சைகளில் (EB) இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான கேள்விகளைச் சேர்த்தல். | 1. இலஞ்சம் மற்றும் ஊழல் குறித்த வினாக்களை உள்ளடக்கிய பொதுப் பரீட்சை தேர்வுகளின் சதவீதம்.<br>2. ஊழல் எதிர்ப்பு தலைப்புகளை உள்ளடக்கிய தேர்வு பாடத்திட்டங்கள் மற்றும் கற்கை வழிகாட்டிகளின் எண்ணிக்கை அதிகாரப்பூர்வமாக திருத்தப்பட்டது.<br>3. தேர்வுகளில் ஊழல் தொடர்பான உள்ளடக்கத்தைச் சேர்ப்பதைச் செம்மைப்படுத்த நடத்தப்பட்ட பின்னூட்டல் அமர்வுகள் அல்லது பங்குதாரர் ஆலோசனைகளின் எண்ணிக்கை.<br>4. தொடர்புடைய தேர்வுப் பிரிவுகளில் இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான கேள்விகளின் சதவீதம். | M | பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு | பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு |
| 3 | அரசு அதிகாரிகளுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட 5 நாள் ஊழல் எதிர்ப்பு மற்றும் நேர்மை பயிற்சி முறைமையை தொடரவும். | 1. பல்வேறு பொது நிறுவனங்களில் ஆண்டுதோறும் நடத்தப்படும் 5 நாள் பயிற்சி அமர்வுகளின் எண்ணிக்கை.<br>2. 5 நாள் பயிற்சித் திட்டத்தை முழுமையாக முடிக்கும் அரசு அதிகாரிகளின் எண்ணிக்கை.<br>3. பயிற்சிக்குப் பின்னைய அறிவு மதிப்பீடு அறிவுத் தக்கவைப்புக்கு சராசரியாக 80% ஆகும்.<br>4. சட்ட அல்லது கொள்கை மாற்றங்களை பிரதிபலிக்கும் வகையில் 100% பயிற்சி தொகுதிகள் ஆண்டுதோறும் புதுப்பிக்கப்படுகின்றன .<br>5. பரந்த பயிற்சி பரவலை எளிதாக்குவதற்காக பொது நிறுவனங்களுக்குள் உருவாக்கப்பட்ட பயிற்சியாளர்களின் எண்ணிக்கை . | S-L | பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூ ராட்சி அமைச்சு | பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூ ராட்சி அமைச்சு (SLIDA) |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4 | தொடர்ச்சியான விழிப்புணர்வு மற்றும் இணக்கத்தை உறுதி செய்வதற்காக அனைத்து பொது அதிகாரிகளுக்கும் ஊழல் எதிர்ப்பு மற்றும் நேர்மை குறித்த வழக்கமான புதுப்பிப்பு பயிற்சியை அறிமுகப்படுத்துதல். | 1. பொது நிறுவனங்களில் ஆண்டுதோறும் நடத்தப்படும் புத்தாக்கப் பயிற்சி அமர்வுகளின் எண்ணிக்கை.<br>2. குறிப்பிட்ட காலத்திற்குள் புதுப்பிப்புப் பயிற்சியை முடித்த அரச அதிகாரிகளின் சதவீதம்<br>3. தொடர்ச்சியான தொழில்முறை மேம்பாட்டின் ஒரு பகுதியாக புத்தாக்கப் பயிற்சியை கட்டாயமாக்கும் நிறுவனங்களின் சதவீதம்.<br>4. ஊழல் எதிர்ப்பு முயற்சிகளில் சட்டம், கொள்கை மற்றும் நடைமுறை மாற்றங்களை பிரதிபலிக்கும் வகையில் 100% பயிற்சி தொகுதிகள் ஆண்டுதோறும் புதுப்பிக்கப்படுகின்றன.<br>5. பொது நிறுவனங்களுக்குள் புத்தாக்கப் பயிற்சி நடத்துவதற்கு சான்றளிக்கப்பட்ட உள்ளகப் பயிற்சியாளர்களின் எண்ணிக்கை.<br>6. மின்-தொகுதிகள் உருவாக்கப்பட்டு அணுகக்கூடியதாக மாற்றப்பட்டன. | S-L | பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூ ராட்சி அமைச்சு | பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூ ராட்சி அமைச்சு (SLIDA) |
| 5 | கல்வித் துறையில் ஊழலைக் குறைக்க கல்லூரி நிர்வாகிகளுக்கு சிறப்பு ஊழல் எதிர்ப்புப் பயிற்சியை செயற்படுத்துதல். | 1. விழிப்புணர்வு ஏற்படுத்தும் அனைத்துப் பொருட்களும் உருவாக்கப்பட்டன.<br>2. நடத்தப்பட்ட அமர்வுகளின் எண்ணிக்கை.<br>3. பயிற்சி பங்கேற்பு விகிதம் குறைந்தது 90% ஆகும்.<br>4. பயிற்சி நிறைவு விகிதம் குறைந்தது 95% ஆகும்.<br>5. பயிற்சிக்குப் பிந்தைய அறிவு மதிப்பீடு அறிவுத் தக்கவைப்புக்கு சராசரியாக 80% ஆகும். | S-M | கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு | கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு CIABOC |
| 6 | விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் பயிற்சித் திட்டங்களை ஏற்பாடு செய்தல், அத்துடன் பணியிடப் பயிற்சி வாய்ப்புகளையும் வழங்குதல். | 1. அனைத்து விழிப்புணர்வு மற்றும் பயிற்சிப் பொருட்களும் உருவாக்கப்பட்டன.<br>2. நடத்தப்பட்ட அமர்வுகளின் எண்ணிக்கை.<br>3. பயிற்சி பங்கேற்பு விகிதம் குறைந்தது 90% ஆகும்.<br>4. பயிற்சி நிறைவு விகிதம் குறைந்தது 95% ஆகும்.<br>5. பயிற்சிக்குப் பிந்தைய அறிவு மதிப்பீடு அறிவுத் தக்கவைப்புக்கு சராசரியாக 80% ஆகும். | S-M | CIABOC | CIABOC |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **துணை நோக்கம் 3: வெளிப்படைத்தன்மை மற்றும் நல்லாட்சியை ஊக்குவிப்பதில் சிவில் சமூகம் மற்றும் குடிமக்களின் பங்கை வலுப்படுத்துவதன் மூலம் பொறுப்புக்கூறலுக்கான பொதுமக்களின் கோரிக்கையை வளர்ப்பது.** | | | | | |
| 1 | மக்களுக்கு அவர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் குறித்து தெரிவிக்க ஊழல் எதிர்ப்புச் சட்டங்கள் மற்றும் அறிக்கையிடல் நடைமுறைகளை மையமாகக் கொண்ட பொதுக் கல்வி பிரச்சாரங்களைத் தொடங்குதல் . | 1. பிரச்சாரம் வடிவமைக்கப்பட்டு தொடங்கப்பட்டது.<br>2. பிரச்சாரப் பொருட்கள் மூலம் சென்றடைந்த குடிமக்களின் எண்ணிக்கை (பார்வையாளர் பகுப்பாய்வு, சமூக ஊடக ஈடுபாடு மற்றும் விநியோக அறிக்கைகள் மூலம் அளவிடப்படுகிறது)<br>3. பிரச்சாரத்திற்கு முந்தைய மற்றும் பிந்தைய ஆய்வுகள், ஊழல் எதிர்ப்புச் சட்டங்கள் மற்றும் அறிக்கையிடல் நடைமுறைகள் குறித்த விழிப்புணர்வில் குறைந்தது 50% அதிகரிப்பின் விளைவுகளுடன்.<br>4. பிரச்சாரத்திற்குப் பிறகு அதிகாரப்பூர்வ சேனல்கள் மூலம் தாக்கல் செய்யப்பட்ட ஊழல் முறைப்பாடுகளின் எண்ணிக்கை அதிகரித்தது.<br>5. தகவல் தெரிவிக்கும் வழிமுறைகளில் நம்பிக்கையை வெளிப்படுத்தும் குடிமக்களின் சதவீதம் அதிகரித்துள்ளது.<br>6. தாக்க மதிப்பீடு மற்றும் பொதுமக்களின் கோரிக்கையின் அடிப்படையில் தொடங்கப்பட்ட தொடர்ச்சியான அல்லது பின்தொடர்தல் பிரச்சாரங்களின் எண்ணிக்கை<br>7. அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மை மற்றும் ஊழல் எதிர்ப்பு முயற்சிகள் குறித்த பொதுமக்களின் பார்வையில் முன்னேற்றம் . | S-L | CIABOC | CIABOC |
| 2 | தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை திறம்படப் பயன்படுத்தி தகவல்களை எவ்வாறு அணுகுவது என்பது குறித்த திறன்களை வளர்ப்பதற்கான பயிற்சி உட்பட, பொது விழிப்புணர்வை மேம்படுத்துவதற்காக தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை ஊக்குவிக்கும் விரிவாக்கப்பட்ட ஊடக மற்றும் சமூகப் பிரச்சாரத்தை உருவாக்கி செயல்படுத்துதல். | 1. பிரச்சாரம் வடிவமைக்கப்பட்டு தொடங்கப்பட்டது.<br>2. பிரச்சாரப் பொருட்கள் மூலம் சென்றடைந்த குடிமக்களின் எண்ணிக்கை (பார்வையாளர்கள் பகுப்பாய்வு, சமூக ஊடக ஈடுபாடு மற்றும் விநியோக அறிக்கைகள் மூலம் அளவிடப்படுகிறது)<br>3. பிரச்சாரத்திற்கு முந்தைய மற்றும் பிந்தைய ஆய்வுகள், சுவுஜ சட்டம் மற்றும் தகவல்களை எவ்வாறு அணுகுவது என்பது குறித்த விழிப்புணர்வில் குறைந்தது 50% அதிகரிப்பின் விளைவு.<br>4. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை எவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்து பொதுமக்களுக்கு நடத்தப்பட்ட பயிற்சி அமர்வுகளின் எண்ணிக்கை.<br>5. பயிற்சி பெற்ற ஆறு மாதங்களுக்குள் தகவல் அறியும் உரிமைச் சட்ட கோரிக்கைகளை வெற்றிகரமாகச் சமர்ப்பித்த பயிற்சி பெற்ற நபர்களின் சதவீதம்.<br>6. பிரச்சாரத்தைத் தொடர்ந்து பொதுமக்களால் தாக்கல் செய்யப்படும் தகவல் அறியும் உரிமை கோரிக்கைகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பு. | S-M | RTIC | RTIC |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | ஊழலுக்கு எதிரான போராட்டம், தடுப்பு வழிமுறைகள் மற்றும் பொது சேவைகளை அணுகுவது, பல்வேறு மாற்றுத்திறனாளிகளை உள்ளடக்கிய ஊடக வடிவங்களைப் (உ-ம்: பாடல்கள், கோஸங்கள், தொலைக்காட்சி நாடகங்கள், திரைப்படங்கள், சமூக ஊடகங்கள், சுவரொட்டிகள், துண்டுப்பிரசுரங்கள், விளம்பரப் பலகைகள் மற்றும் மின்னணு விளம்பரங்கள்) பயன்படுத்தி பல்வேறு தகவல்களை உருவாக்கி பரப்புதல். | 1. உற்பத்தி செய்யப்படும் பல்வேறு வகையான ஊடகப் பொருட்களின் எண்ணிக்கை.<br>2. அணுகல் அம்சங்களுடன் வடிவமைக்கப்பட்ட பொருட்களின் சதவீதம்.<br>3. குறைந்தது 50% உள்ளடக்கம் மாற்றுத்திறனாளிகளால் இணைந்து உருவாக்கப்பட்ட அல்லது மதிப்பாய்வு செய்யப்பட்டவை.<br>4. உள்ளடக்கம் மற்றும் பரந்த அளவிலான அணுகலை உறுதி செய்வதற்காக உள்ளடக்கம் உருவாக்கப்படும் மொழிகளின் எண்ணிக்கை.<br>5. பல்வேறு ஊடக வடிவங்கள் மூலம் மொத்த பார்வையாளர்களை சென்றடைந்தது.<br>6. ஊழல் எதிர்ப்பு உள்ளடக்கம் தொடர்பான டிஜிட்டல் மற்றும் சமூக ஊடக தளங்களில் தொடர்புகளின் எண்ணிக்கை.<br>7. பிரச்சாரத்திற்கு முந்தைய மற்றும் பிந்தைய ஆய்வுகள், பொது சேவைகளை அணுகுவது குறித்த விழிப்புணர்வில் குறைந்தது 40% அதிகரிப்பின் விளைவுகளுடன். | S-L | CIABOC | CIABOC |
| 4 | பிரஜைகள் சாசனம், சேவைகளுக்கான அவர்களின் உரிமைகள், பொது சேவைகளுக்கான அணுகல் மற்றும் பொது அதிகாரிகளின் பொறுப்புகள் குறித்து பொதுமக்களுக்கு பயிற்சிப் பட்டறைகளை நடத்துதல். | 1. நடத்தப்பட்ட பட்டறைகளின் எண்ணிக்கை.<br>2. பட்டறைகளில் கலந்து கொண்ட மொத்த பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை.<br>3. பொது அதிகாரிகளின் சேவைகள் மற்றும் பொறுப்புகளுக்கான உரிமைகள் குறித்த அவர்களின் அறிவில் குறைந்தது 40% அதிகரிப்புடன் கூடிய, பட்டறைக்கு முந்தைய மற்றும் பிந்தைய ஆய்வுகள். | S-M | CIABOC | பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூ ராட்சி அமைச்சு CIABOC |
| 5 | வெளிப்படைத்தன்மை மற்றும் நல்லாட்சிக்கான ஆதரவாளர்களாக சிவில் சமூக பிரதிநிதிகளை அதிகாரம் அளிக்க அவர்களுக்கு பட்டறைகளை ஏற்பாடு செய்தல். | 1. நடத்தப்பட்ட பட்டறைகளின் எண்ணிக்கை.<br>2. பயிற்சி பெற்ற சிவில் சமூக பிரதிநிதிகளின் மொத்த எண்ணிக்கை.<br>3. வெளிப்படைத்தன்மை, நல்லாட்சி மற்றும் ஊழல் எதிர்ப்பு கட்டமைப்புகள் பற்றிய அவர்களின் அறிவில் குறைந்தது 40% அதிகரிப்பின் விளைவுகளுடன்.<br>4. பட்டறையில் கலந்து கொண்ட ஆறு மாதங்களுக்குள் வக்காலத்து பிரச்சாரங்கள் அல்லது விழிப்புணர்வு நடவடிக்கைகளில் ஈடுபடும் பங்கேற்பாளர்களின் சதவீதம். | S-M | CIABOC | CIABOC |
| 6 | மற்றும் பொது மக்களின் சுதந்திர மீறல்களுக்கும் இடையிலான தொடர்பு குறித்து தகவல் பொருட்களை உருவாக்கி விழிப்புணர்வு அமர்வுகளை நடத்துதல் . | 1. உற்பத்தி செய்யப்படும் பல்வேறு வகையான பொருட்களின் எண்ணிக்கை.<br>2. நடத்தப்பட்ட பட்டறைகள்/விழிப்புணர்வு அமர்வுகளின் எண்ணிக்கை.<br>3. பயிற்சி பெற்ற மொத்த நபர்களின் எண்ணிக்கை.<br>4. பல்வேறு ஊடக வடிவங்கள் மூலம் மொத்த பார்வையாளர்களை சென்றடைந்தது.<br>5. ஊழலுக்கும் அடிப்படை மனித உரிமைகள் மற்றும் சுதந்திரங்களின் மீறல்களுக்கும் இடையிலான தொடர்பைப் புரிந்துகொள்வதில் குறைந்தது 40% அதிகரிப்பு . | S-M | HRCSL | HRCSL<br><br>CIABOC |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **துணை நோக்கம் 4: சமூகத்திற்குள் ஒருமைப்பாடு கலாச்சாரத்தை வளர்ப்பதிலும் நெறிமுறை தரங்களை மேம்படுத்துவதிலும் ஊடகங்களின் பங்கை வலுப்படுத்துதல்.** | | | | | |
| 1 | ஊழல் எதிர்ப்பு முயற்சிகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், நெறிமுறை தரங்களை மேம்படுத்தவும், இலக்கு வைக்கப்பட்ட பொது ஊடக பிரச்சாரங்களைத் தொடங்க சமூக ஊடகங்கள் மற்றும் பிற ஊடகங்களைப் பயன்படுத்துங்கள். | 1. பிரச்சாரங்கள் வடிவமைக்கப்பட்டு தொடங்கப்பட்டன.<br>2. பிரச்சாரப் பொருட்கள் மூலம் சென்றடைந்த குடிமக்களின் எண்ணிக்கை (பார்வையாளர் பகுப்பாய்வு, சமூக ஊடக ஈடுபாடு மற்றும் விநியோக அறிக்கைகள் மூலம் அளவிடப்படுகிறது).<br>3. பிரச்சாரத்திற்கு முந்தைய மற்றும் பிந்தைய ஆய்வுகள், ஊழல் எதிர்ப்பு முயற்சிகள் குறித்த விழிப்புணர்வில் குறைந்தது 50% அதிகரிப்பின் விளைவுகளுடன்.<br>4. பிரச்சாரத்திற்குப் பிறகு அதிகாரப்பூர்வ சேனல்கள் மூலம் தாக்கல் செய்யப்பட்ட ஊழல் முறைப்பாடுகளின் எண்ணிக்கை அதிகரித்தது.<br>5. அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மை மற்றும் ஊழல் எதிர்ப்பு முயற்சிகள் குறித்த பொதுமக்களின் பார்வையில் முன்னேற்றம் . | S-M | CIABOC | CIABOC<br>அரச மற்றும் தனியார் ஊடக நிறுவனங்கள் |
| 2 | இலங்கை பத்திரிகை நிறுவனம் மூலம் ஊழல் எதிர்ப்பு அறிக்கையிடல் மற்றும் புலனாய்வு பத்திரிகை நுட்பங்களில் கவனம் செலுத்தும் ஊடக நிறுவனங்கள் மற்றும் பத்திரிகையாளர்களுக்கான பயிற்சித் திட்டங்களை ஏற்பாடு செய்தல். | 1. உருவாக்கப்பட்ட பயிற்சி தொகுதிகளின் எண்ணிக்கை.<br>2. நடத்தப்பட்ட பட்டறைகளின் எண்ணிக்கை .<br>3. பயிற்சி பெற்ற பத்திரிகையாளர்களின் மொத்த எண்ணிக்கை .<br>4. ஊழல் எதிர்ப்பு அறிக்கையிடல் மற்றும் புலனாய்வு பத்திரிகை நுட்பங்கள் குறித்த அவர்களின் அறிவில் குறைந்தது 40% அதிகரிப்பின் விளைவு.<br>5. பயிற்சி பெற்ற பத்திரிகையாளர்களால் பயிற்சி பெற்ற ஆறு மாதங்களுக்குள் தயாரிக்கப்பட்ட புலனாய்வு அறிக்கைகள் அல்லது கட்டுரைகளின் எண்ணிக்கை.<br>6. பயிற்சி பெற்ற ஒரு வருடத்திற்குப் பிறகும் ஊழல் எதிர்ப்பு அறிக்கையிடலில் ஈடுபட்டுள்ள பயிற்சி பெற்ற பத்திரிகையாளர்களின் சதவீதம். | M | CIABOC | CIABOC<br><br>வெகுஜன ஊடக அமைச்சு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | செய்தித்தாள்கள், தொலைக்காட்சி நிலையங்கள் மற்றும் நிகழ்நிலை தளங்கள் உள்ளிட்ட முக்கிய ஊடக கூட்டாளர்களை அடையாளம் கண்டு, புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் (MOU) கையெழுத்திடுவதன் மூலம் ஊழல் எதிர்ப்பு முயற்சிகளில் ஒத்துழைப்புகளை முறைப்படுத்துதல். | 1. முக்கிய ஊடகங்களின் எண்ணிக்கை ஊழல் எதிர்ப்பு முயற்சிகள் குறித்த ஒத்துழைப்பு மற்றும் விவாதங்களுக்கு அடையாளம் காணப்பட்ட நிறுவனங்கள் .<br>2. ஊழலுக்கு எதிரான முயற்சிகளுக்காக ஊடக நிறுவனங்களுடன் கையெழுத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் எண்ணிக்கை.<br>3. புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தானதைத் தொடர்ந்து தொடங்கப்பட்ட கூட்டு ஊடக பிரச்சாரங்களின் எண்ணிக்கை .<br>4. அச்சு, தொலைக்காட்சி மற்றும் ஆன்லைன் தளங்களில் ஊழல் எதிர்ப்பு பிரச்சினைகள் குறித்த ஊடக செய்திகளில் அதிகரிப்பு.<br>5. ஊழல் எதிர்ப்பு கருப்பொருள்களை தங்கள் தலையங்க உள்ளடக்கம் அல்லது நிரலாக்கத்தில் ஒருங்கிணைக்கும் ஊடக கூட்டாளர்களின் சதவீதம்.<br>6. ஊழல் எதிர்ப்பு முயற்சிகள் குறித்த பொதுமக்களின் அறிவில் குறைந்தது 40% அதிகரிப்புடன், செய்தி சேகரிப்புக்கு முந்தைய மற்றும் பிந்தைய ஆய்வுகள் . | M | CIABOC | வெகுஜன ஊடக அமைச்சு |
| **துணை நோக்கம் 5: மதிப்பு அடிப்படையிலான கல்வி முயற்சிகள் மூலம் நேர்மையான சமூகத்தை நிறுவுவதற்கு தனியார் துறையை ஈடுபடுத்துதல்.** | | | | | |
| 1 | தனியார் துறைக்கான புதிய குற்றங்கள் குறித்த இலக்கு விழிப்புணர்வு திட்டங்களை உருவாக்கி செயற்படுத்தவும். | 1. விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருள்/திட்டங்களின் எண்ணிக்கை உருவாக்கப்பட்டுள்ளது.<br>2. நடத்தப்பட்ட பட்டறைகள்/விழிப்புணர்வு அமர்வுகளின் எண்ணிக்கை.<br>3. பயிற்சி பெற்ற மொத்த நபர்களின் எண்ணிக்கை.<br>4. குறைந்தபட்சம் 50% அறிவு அதிகரிப்புடன் கூடிய அமர்வுக்கு முந்தைய மற்றும் பிந்தைய ஆய்வுகள்.<br>5. விழிப்புணர்வு ஏற்படுத்தியதன் விளைவாக ஊழல் எதிர்ப்புக் கொள்கைகளை ஏற்றுக்கொள்ளும் நிறுவனங்களின் எண்ணிக்கை. | S-M | CIABOC | CIABOC |
| 2 | விளையாட்டுத் துறைக்கான புதிய குற்றங்கள் குறித்த இலக்கு விழிப்புணர்வு திட்டங்களை உருவாக்கி செயற்படுத்துதல். | 1. விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருள்/திட்டங்களின் எண்ணிக்கை உருவாக்கப்பட்டுள்ளது.<br>2. நடத்தப்பட்ட பட்டறைகள்/விழிப்புணர்வு அமர்வுகளின் எண்ணிக்கை.<br>3. பயிற்சி பெற்ற மொத்த நபர்களின் எண்ணிக்கை.<br>4. குறைந்தபட்சம் 50% அறிவு அதிகரிப்புடன் கூடிய அமர்வுக்கு முந்தைய மற்றும் பிந்தைய ஆய்வுகள் .<br>5. திட்டங்களில் ஒருங்கிணைக்கும் விளையாட்டு நிறுவனங்களின் எண்ணிக்கை . | S-M | CIABOC | CIABOC |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | ஊழல் நடைமுறைகள் என்றால் என்ன என்பது குறித்து அவர்களுக்குக் கற்பிக்க, பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணையம் (SEC), இறக்குமதி மற்றும் ஏற்றுமதித் துறை, முதலீட்டு ஊக்குவிப்பு சபை (BOI) போன்ற ஒழுங்குமுறை அதிகாரிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் அமர்வுகளை ஏற்பாடு செய்யுங்கள் . | 1. விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருள்/திட்டங்களின் எண்ணிக்கை உருவாக்கப்பட்டுள்ளது.<br>2. அமர்வுகளைத் திட்டமிடுவதிலும் செயல்படுத்துவதிலும் தீவிரமாக ஒத்துழைக்கும் ஒழுங்குமுறை அதிகாரிகளின் எண்ணிக்கை.<br>3. நடத்தப்பட்ட பட்டறைகள்/ விழிப்புணர்வு அமர்வுகளின் எண்ணிக்கை.<br>4. பயிற்சி பெற்ற மொத்த நபர்களின் எண்ணிக்கை.<br>5. அமர்வுக்கு முந்தைய மற்றும் பிந்தைய ஆய்வுகள், குறைந்தபட்சம் 40% அறிவின் அதிகரிப்புடன் .<br>6. பங்கேற்பைத் தொடர்ந்து உள் இணக்க வழிமுறைகளை செயற்படுத்தும் ஒழுங்குமுறை அதிகாரிகளின் எண்ணிக்கை .<br>7. பயிற்சிக்குப் பிறகு ஒழுங்குமுறை அதிகாரிகளுக்கு வழங்கப்படும் ஊழல் தொடர்பான விசாரணைகள் அல்லது அறிக்கைகளில் அதிகரிப்பு. | S-M | அனைத்து ஒழுங்கு படுத்தல் அதிகார சபைகள் | அனைத்து ஒழுங்கு படுத்தல் அதிகார சபைகள் CIABOC |
| 4 | 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கியல், கணக்காய்வு மற்றும் தரநிலைகள் சட்டத்தின் பிரிவு 5 இல் வரையறுக்கப்பட்டுள்ளபடி குறிப்பிட்ட வணிக நிறுவனங்களையும், பிற தனியார் துறை சங்கங்கள் மற்றும் வர்த்தக சபைகளையும் நேர்மை கூட்டாளர்களாக அடையாளம் கண்டு, தனியார் துறைக்குள் ஊழல் தடுப்பு மற்றும் நெறிமுறை நடைமுறைகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட பாத்திரங்கள், பொறுப்புகள் மற்றும் கூட்டு முயற்சிகளை கோடிட்டுக் காட்டும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் (MOU) கையெழுத்திடுவதன் மூலம் ஒத்துழைப்புகளை முறைப்படுத்துதல். | 1. நேர்மை கூட்டாண்மைகள் குறித்த ஒத்துழைப்பு மற்றும் கலந்துரையாடல்களுக்காக அடையாளம் காணப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை .<br>2. ஊழல் எதிர்ப்பு முயற்சிகளுக்காக இந்த நிறுவனங்களுடன் கையெழுத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் எண்ணிக்கை.<br>3. புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டதைத் தொடர்ந்து, பெருநிறுவன நேர்மை, வெளிப்படைத்தன்மை மற்றும் ஊழல் எதிர்ப்பு இணக்கத்தை மேம்படுத்துவதற்காக தொடங்கப்பட்ட கூட்டு முயற்சிகளின் எண்ணிக்கை.<br>4. ஊழல் எதிர்ப்புக் கொள்கைகளை தங்கள் நிறுவன நிர்வாக கட்டமைப்புகளில் ஒருங்கிணைக்கும் கூட்டாண்மை நிறுவனங்களின் சதவீதம்.<br>5. மேம்படுத்தப்பட்ட உள் கட்டுப்பாடுகள் மற்றும் ஊழல் தொடர்பான அபாயங்களின் குறைக்கப்பட்ட நிகழ்வுகளைப் முறைப்பாடளிக்கும் ஒருமைப்பாடு கூட்டாளர்களின் சதவீதம். | S-M | CIABOC | CIABOC ஜனாதிபதி செயலகம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **துணை நோக்கம் 6: ஊழல் எதிர்ப்புப் பகுதியில் ஈடுபாட்டை மேம்படுத்த மதிப்பு அடிப்படையிலான கல்வி முயற்சிகள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளிடையே விழிப்புணர்வை ஊக்குவித்தல்.** | | | | | |
| 1 | நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் நாடாளுமன்ற மேற்பார்வைக் குழுக்களுக்கு, சட்ட விதிகள், உலகளாவிய சிறந்த நடைமுறைகள் மற்றும் ஊழல் எதிர்ப்பு தொடர்பான அவர்களின் கடமைகள் குறித்து கவனம் செலுத்தி, அவ்வப்போது விழிப்புணர்வு பட்டறைகளை ஏற்பாடு செய்தல். | 1. அனைத்து தரப்படுத்தப்பட்ட பட்டறைப் பொருட்களும் உருவாக்கப்பட்டன.<br>2. நடத்தப்பட்ட பயிற்சி அமர்வுகளின் எண்ணிக்கை.<br>3. பயிற்சி பங்கேற்பு விகிதம் குறைந்தது 90% ஆகும்.<br>4. பயிற்சி நிறைவு விகிதம் குறைந்தது 95% ஆகும்.<br>5. பயிற்சிக்குப் பிந்தைய அறிவு மதிப்பீடு, அறிவுத் தக்கவைப்பு மற்றும் செயற்பாட்டு மற்றும் உள்ளடக்க அம்சங்களைப் புரிந்துகொள்வதற்கு சராசரியாக 80% ஆகும். | S-M | CIABOC | பாராளுமன்றம்<br>CIABOC |
| 2 | மாகாண சபைகள் மற்றும் உள்ளாட்சி மன்றங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு, சட்ட விதிகள், உலகளாவிய சிறந்த நடைமுறைகள் மற்றும் ஊழலை எதிர்த்துப் போராடுவதில் அவர்களின் பொறுப்புகள் ஆகியவற்றை உள்ளடக்கிய தூண்டுதல் மற்றும் அவ்வப்போது விழிப்புணர்வு பட்டறைகளை நடத்துதல். | 1. அனைத்து தரப்படுத்தப்பட்ட பயிற்சிப் பொருட்களும் உருவாக்கப்பட்டன.<br>2. நடத்தப்பட்ட பயிற்சி அமர்வுகளின் எண்ணிக்கை<br>3. பயிற்சி பங்கேற்பு விகிதம் குறைந்தது 90% ஆகும்.<br>4. பயிற்சி நிறைவு விகிதம் குறைந்தது 95% ஆகும்.<br>5. பயிற்சிக்குப் பிந்தைய அறிவு மதிப்பீடு, அறிவுத் தக்கவைப்பு மற்றும் செயற்பாட்டு மற்றும் உள்ளடக்க அம்சங்களைப் புரிந்துகொள்வதற்கு சராசரியாக 80% ஆகும். | S-M | CIABOC | அனைத்து மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அதிகாரசபைகள்<br>இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவனம் (SLILG)<br>CIABOC |
| **துணை நோக்கம் 7: குற்றவியல் நீதிச் செயல்பாட்டில் பங்குதாரர்களிடையே விழிப்புணர்வை மேம்படுத்துதல்.** | | | | | |
| 1 | நீதிபதிகளுக்கான அறிமுக மற்றும் அவ்வப்போது புதுப்பித்தல் பயிற்சி அமர்வுகளை செயற்படுத்துதல், சமீபத்திய சர்வதேச மற்றும் தேசிய ஊழல் எதிர்ப்புச் சட்டங்கள், நடைமுறைகள் மற்றும் போக்குகள் குறித்த அவர்களின் அறிவைப் புதுப்பித்தல், தொடர்புடைய வழக்குகளைக் கையாளும் அவர்களின் புரிதலையும் திறனையும் மேம்படுத்துதல். | 1. அனைத்து தரப்படுத்தப்பட்ட பயிற்சிப் பொருட்களும் உருவாக்கப்பட்டன.<br>2. நடத்தப்பட்ட பயிற்சி அமர்வுகளின் எண்ணிக்கை<br>3. பயிற்சி பங்கேற்பு விகிதம் குறைந்தது 90% ஆகும்.<br>4. பயிற்சி நிறைவு விகிதம் குறைந்தது 95% ஆகும்.<br>5. பயிற்சிக்குப் பிந்தைய அறிவு மதிப்பீடு, அறிவுத் தக்கவைப்பு மற்றும் செயற்பாட்டு மற்றும் உள்ளடக்க அம்சங்களைப் புரிந்துகொள்வதற்கு சராசரியாக 80% ஆகும்.<br>6. பயிற்சிக்குப் பிறகு ஊழல் தொடர்பான வழக்குகளைக் கையாள்வதில் அதிகரித்த நம்பிக்கையைப் முறைப்பாடளிக்கும் நீதிபதிகளின் சதவீதம்.<br>7. பயிற்சியின் போது கற்றுக்கொண்ட மேம்பட்ட வழக்கு மேலாண்மை நுட்பங்கள் காரணமாக ஊழல் தொடர்பான வழக்கு நிலுவையில் உள்ளதைக் குறைத்தல். | S-M | நீதிபதிகள் நிறுவனம் (JI)<br>J.S.C<br>நீதிபதிகள் நிறுவனம் | நீதிபதிகள் நிறுவனம் (JI)<br>J.S.C<br>நீதிபதிகள் நிறுவனம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2 | பொறுப்புக்கூறல் கலாச்சாரத்தை வளர்ப்பதற்காக நீதித்துறைக்குள் ஒருமைப்பாடு தொடர்பான அனுபவங்களையும் சிறந்த நடைமுறைகளையும் பகிர்ந்து கொள்வதை நோக்கமாகக் கொண்ட அமர்வுகளை நடத்துதல். | 1. நடத்தப்பட்ட அமர்வுகளின் எண்ணிக்கை.<br>2. பங்கேற்பு விகிதம் குறைந்தது 90%<br>3. அறிவுத் தக்கவைப்பு மற்றும் செயல்பாட்டு மற்றும் முக்கிய அம்சங்களைப் புரிந்துகொள்வதற்கு அமர்வுக்குப் பிந்தைய அறிவு மதிப்பீடு சராசரியாக 80% ஆகும்.<br>4. திட்டங்களில் இணைக்கப்பட்ட அமர்வுகளின் எண்ணிக்கை . | S-M | நீதிபதிகள் நிறுவனம் J.S.C | நீதிபதிகள் நிறுவனம் J.S.C |
| 3 | பொலிஸ் திணைக்கள ஊழலைக் குறைக்க பொலிஸ் அதிகாரிகளுக்கு சிறப்பு ஊழல் எதிர்ப்புப் பயிற்சியை அமுல்படுத்துதல். | 1. அனைத்து தரப்படுத்தப்பட்ட பயிற்சிப் பொருட்களும் உருவாக்கப்பட்டன.<br>2. நடத்தப்பட்ட பயிற்சி அமர்வுகளின் எண்ணிக்கை.<br>3. பயிற்சி பங்கேற்பு விகிதம் குறைந்தது 90% ஆகும் .<br>4. பயிற்சி நிறைவு விகிதம் குறைந்தது 95% ஆகும்.<br>5. பயிற்சிக்குப் பிந்தைய அறிவு மதிப்பீடு, அறிவுத் தக்கவைப்பு மற்றும் செயல்பாட்டு மற்றும் உள்ளடக்க அம்சங்களைப் புரிந்துகொள்வதற்கு சராசரியாக 80% ஆகும்.<br>6. பொலிஸ் கல்லூரி பாடத்திட்டத்தில் இணைக்கப்பட்ட பயிற்சி தொகுதிகளின் எண்ணிக்கை.<br>7. ஊழல் சம்பவங்களில் வருடாந்த வீழ்ச்சி | S | இலங்கை பொலிஸ் | இலங்கை பொலிஸ் CIABOC |
| **துணை நோக்கம் 8: நாட்டில் ஊழலின் காரணங்கள், தாக்கங்கள் மற்றும் வடிவங்களை பகுப்பாய்வு செய்யும் விரிவான ஆராய்ச்சி முயற்சிகள் மூலம் அதைப் பற்றிய புரிதலை மேம்படுத்துதல்.** | | | | | |
| 1 | அங்கீகரிக்கப்பட்ட வழிமுறையைப் பயன்படுத்தி இலங்கையில் ஊழல் குறித்த தரப்படுத்தப்பட்ட வருடாந்த கணக்கெடுப்பை நடத்தி அதன் முடிவுகளை வெளியிடுங்கள். | 1. தரப்படுத்தப்பட்ட கணக்கெடுப்பு முறை உருவாக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது.<br>2. முக்கிய மக்கள் தொகை மற்றும் திணைக்கள பிரதிநிதித்துவத்தை உறுதி செய்யும் வகையில், ஆண்டுதோறும் கணக்கெடுக்கப்படும் பதிலளித்தவர்களின் எண்ணிக்கை.<br>3. கணக்கெடுப்பின் புவியியல் ரீதியான இணைப்பு.<br>4. நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் தரவு பகுப்பாய்வை முடித்தல்.<br>5. அடையாளம் காணப்பட்டு அறிக்கையிடப்பட்ட முக்கிய ஊழல் போக்குகள் மற்றும் கண்டுபிடிப்புகளின் எண்ணிக்கை.<br>6. ஆண்டுதோறும் வெளியிடப்படும் கணக்கெடுப்பு முடிவுகள்.<br>7. கணக்கெடுப்பு முடிவுகளால் பாதிக்கப்பட்ட கொள்கை சீர்திருத்தங்கள் அல்லது ஊழல் எதிர்ப்பு முயற்சிகளின் எண்ணிக்கை. | S-L | CIABOC | CIABOC |
| 2 | ஊழல் எதிர்ப்பு முயற்சிகளை மையமாகக் கொண்ட தரமான அனுபவ ஆராய்ச்சியை மேற்கொண்டு வெளியிடவும், அதன் விளைவாக வரும் பரிந்துரைகளைப் பின்பற்றுவதை உறுதி செய்யவும். | 1. குறைந்தபட்சம் 90% ஆராய்ச்சி நிறைவு விகிதம்<br>2. ஆராய்ச்சி முடிவுகளின் தரம் மற்றும் பொருத்தம்.<br>3. ஆராய்ச்சி முடிவுகள் வெளியிடப்பட்டு பரப்பப்பட்டன.<br>4. நடத்தப்பட்ட ஆராய்ச்சிக்கும் புதிய ஊழல் எதிர்ப்புக் கொள்கைகளுக்கும் இடையே நேர்மறையான தொடர்பு ஏற்பட்டுள்ளது. | M-L | CIABOC | CIABOC |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | கல்வித்துறை மற்றும் பிற ஆராய்ச்சி அமைப்புகளால் சுயாதீனமான ஊழல் தொடர்பான ஆய்வுகளுக்கான ஆராய்ச்சி மானியங்களை உருவாக்குதல் மற்றும் ஊழல் எதிர்ப்பு உத்திகளை உருவாக்குதல் அல்லது செம்மைப்படுத்துதல் ஆகியவற்றில் அத்தகைய ஆய்வுகளின் கண்டுபிடிப்புகள் மற்றும் பரிந்துரைகளைப் பயன்படுத்துதல். | 1. வழங்கப்பட்ட ஆராய்ச்சி மானியங்களின் எண்ணிக்கை.<br>2. குறைந்தது 80% ஆராய்ச்சித் திட்டங்கள் ஊழலின் பல்வேறு மற்றும் முக்கியமான அம்சங்களில் கவனம் செலுத்துகின்றன.<br>3. குறைந்தபட்சம் 90% ஆராய்ச்சி முன்மொழிவுகள் உயர்தரமானவை, தெளிவான குறிக்கோள்கள் மற்றும் சாத்தியமான வழிமுறைகளுடன் முக்கிய ஊழல் எதிர்ப்பு கவலைகளை நிவர்த்தி செய்கின்றன.<br>4. வழங்கப்பட்ட ஆராய்ச்சி திட்டங்களில் குறைந்தது 90% ஒப்புக் கொள்ளப்பட்ட காலக்கெடுவிற்குள் முடிக்கப்படுகின்றன.<br>5. ஊழல் எதிர்ப்பு முயற்சிகளில் குறிப்பிடத்தக்க கொள்கை அல்லது நடைமுறை மாற்றங்களுக்கு குறைந்தது 50% ஆராய்ச்சி முடிவுகள் பங்களிக்கின்றன. | M-L | CIABOC | CIABOC |



சொண்டு மற்றும் கழுத்து – புத்திக்கூர்மை

## C. நிறுவன வலுப்படுத்துதலும் அமுலாக்கமும்

# C. நிறுவன வலுப்படுத்துதலும் அமுலாக்கமும்

### *மூலோபாய முன்னுரிமை பகுதி மூன்று: நிறுவன வலுப்படுத்துதலும் அமுலாக்கமும்*

ஊழலை எதிர்த்துப் போராடுவதில், ஊழல் குற்றச்சாட்டக்களை விசாரணை செய்யவும், வழக்குத் தொடரவும், தடுக்கவும் வலுவான, திறம்பட செயற்படக்கூடிய மற்றும் சுயாதீனமான சட்ட அமுலாக்க நிறுவனங்கள் காணப்படுவது மிகவும் இன்றியமையாததாகும். இந்த நிறுவனங்களை வலுப்படுத்துவதானது ஊழலில் ஈடுபடுபவர்களை நீதியின் முன்னிலையில் நிறுத்துவதற்கு மட்டுமல்லாமல், பொறுப்புக்கூறல், வெளிப்படைத்தன்மை மற்றும் நேர்மையான வினைத்திறனுள்ள கலாச்சாரத்தை உருவாக்குவதற்கும் அவசியம். பயனுள்ள சட்ட அமுலாக்கம் ஒரு தடுப்பை உருவாக்குகிறது, தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் ஊழலில் ஈடுபடுவதைத் தடுக்கிறது. சட்ட அமுலாக்க நிறுவனங்கள் வலுவாகவும், நன்கு வளமாகவும், வெளிப்படையாகவும் இருக்கும்போது, அவை மிகவும் நீதியான, பொறுப்புணர்வு மற்றும் ஊழலற்ற சமூகத்திற்கான போராட்டத்தில் ஒரு அத்தியாவசிய கருவியாக மாறும்.

ஊழல் தொடர்பான விடயங்களை விசாரித்து வழக்குத் தொடுப்பது பெரும்பாலும் சிக்கலானது, நிதிக் குற்றங்கள், கணக்கியல் விசாரணைகள், பணமோசடி, சொத்து மீட்பு மற்றும் ஊழல் வலையமைப்புகளின் சிக்கலான செயல்பாடுகளைப் புரிந்துகொள்வது போன்ற பல துறைகளில் துறைசார் அறிவு மற்றும் நிபுணத்துவம் தேவைப்படுகிறது. எனவே, சட்ட அமுலாக்க நிறுவனங்களை வலுப்படுத்துவதில், புலனாய்வு உத்தியோகத்தர்கள் நன்கு பயிற்சி பெற்றவர்களாகவும், முழுமையான விசாரணைகளை மேற்கொள்வதற்குத் தேவையான சிறப்புத் தேர்ச்சி, மற்றும் வளங்களைக் கொண்டவர்களாகவும் இருப்பது உறுதி செய்யப்பட வேண்டும். நவீன தொழில்நுட்பம், தரவுப் பகுப்பாய்வு கருவிகள் மற்றும் சர்வதேச ஒத்துழைப்பைப் பெறுவதும் மிக முக்கியமாகும்.

சட்ட அமுலாக்க நிறுவனங்கள் அரசியல் உயர்மட்டத்தினர் அல்லது ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வலுவான ஆயுதங்களை அழுத்தத்திற்கு ஆளாகக்கூடியவை என்பதால், சட்ட அமுலாக்கத்தை வலுப்படுத்துவது என்பது நிறுவனங்கள் சுயாதீனமாகவும் வெளிப்புற தாக்கங்களிலிருந்து விடுபட்டதாகவும் இருப்பதை உறுதி செய்வதாகும். இந்த சுதந்திரம் மிகவும் முக்கியமானது, ஏனெனில் இது புலனாய்வு உத்தியோகத்தர்கள் மற்றும் வழக்கறிஞர்களை பழிவாங்கல் அல்லது அரசியல் விளைவுகளுக்கு அஞ்சாமல் ஊழல் வழக்குகளைத் தொடர அனுமதிக்கிறது. சட்ட அமுலாக்க நிறுவனங்கள் அரசியல் தலையீட்டிலிருந்து சுயாதீனமாக இருக்கும்போது, அவர்கள் பின்விளைவுகளுக்கு அஞ்சாமல் உயர்மட்ட விசாரணைகளை முன்னெடுக்க முடியும். அதே வழியில், ஊழல் எதிர்ப்பு ஆணைக்குழுக்கள், பொலிஸ் அல்லது நீதித்துறை அமைப்புகள் போன்ற நிறுவனங்களின் சுயாதீனத்தை பாதுகாப்பதற்கான சட்ட சீர்திருத்தங்கள், அவற்றின் பாரபட்சமின்றி செயல்படும் திறனில் நம்பிக்கையை வளர்ப்பதற்கு அவசியம் (இந்த விடயம் “மூலோபாய முன்னுரிமை பகுதி நான்கு” இன் கீழ் விவாதிக்கப்படுகிறது).

சட்டப் பாதுகாப்புகளுக்கு மேலதிகமாக, வெளிப்படையான தலைமைத் தேர்வு, பொறுப்புக்கூறல் நடவடிக்கைகள் மற்றும் செயல்திறன் மதிப்பீடுகள் மூலம் சட்ட அமுலாக்க நிறுவனங்களின் உள் கட்டமைப்புகளை வலுப்படுத்துவது, அவர்களின் செயல்பாடுகள் நீதி மற்றும் ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகளில் கவனம் செலுத்துவதை உறுதி செய்ய உதவுகிறது. இது அத்தகைய நிறுவனங்களின் நம்பகத்தன்மையையும், நீதியை நிலைநாட்டுவதில் பொதுமக்களின் நம்பிக்கையையும் அதிகரிக்கும். சட்ட அமுலாக்க நடவடிக்கைகளின் வழக்கமான தணிக்கைகள், வழக்குகளை அறிக்கை செய்தல் மற்றும் சுயாதீன மேற்பார்வை போன்ற வெளிப்படையான செயல்முறைகள் மற்றும் பொறுப்புக்கூறல் வழிமுறைகள், பொதுமக்களிடம் நம்பிக்கையை வளர்ப்பதற்கு மட்டுமல்லாமல், ஒருமைப்பாட்டின் கலாச்சாரத்தை வளர்ப்பதற்கும் உதவுகின்றன.

மேலும், சட்ட அமுலாக்க நிறுவனங்களை வலுப்படுத்துவதற்காக, குற்றவியல் நீதித்துறை அமைப்பிற்குள் இடைநிலை

நிறுவனங்களுக்கிடையேயான ஒருங்கிணைப்பை மேம்படுத்துவது முக்கியமாகும். இது வழக்குகள் விரைவாகவும் திறம்படவும் கையாளப்படுவதை உறுதிசெய்யும். மேலும், குற்றவியல் வழக்குகளில் ஆழமான விசாரணைகளை எதிர்கொள்ளக் கூடிய வலுவான ஆதாரங்களை உருவாக்க தேவையான கருவிகளை வழங்குவது, சாட்சிகள், முறைப்பாட்டாளர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட பிற நபர்களுக்கான போதிய பாதுகாப்பு நடவடிக்கைகளை உறுதி செய்வதும் இதில் உள்ளடங்கும்.

மேலும், சட்ட அமுலாக்க நிறுவனங்கள் சர்வதேச நிறுவனங்களுடன் இணைந்து செயற்படக்கூடிய திறன்களை மேம்படுத்தும் பயிற்சி திட்டங்கள், தகவல் பகிர்வு மற்றும் கூட்டு நடவடிக்கைகள் ஆகியவற்றில் கவனம் செலுத்துவது, உலகளாவிய ரீதியில் ஊழலை எதிர்க்கும் திறனை வினைதிறனாக்கும். இது நாட்டின் எல்லை கடந்து செயற்படும் ஊழலை எதிர்த்துப் போராடவும், ஊழல் புரிந்தவர்கள் எங்கு இருந்தாலும் சட்டத்தின் முன் கொண்டு வரவும் உதவுகிறது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படையில், தேசிய ஊழல் எதிர்ப்பு திட்டமான NACAP, CIABOC மற்றும் பிற சட்ட அமுலாக்க நிறுனங்களின் நிறுவன வலுப்பாட்டை மூன்றாவது மூலோபாய முன்னுரிமைப் பகுதியாகவும், “CIABOC மற்றும் ஏனைய சட்ட அமுலாக்க நிறுவனங்களின் திறன்களை மேம்படுத்தி ஊழலை திறம்பட எதிர்க்கும் வகையில் செயற்படச் செய்வது” எனும் அடிப்படை நோக்கத்துடன் வகுத்துள்ளது.

CIABOC மற்றும் ஏனைய சட்ட அமுலாக்க நிறுவனங்கள் போதியளவு வளங்கள், செயற்பாட்டு சுதந்திரம் மற்றும் அரசியல் தலையீட்டிலிருந்து சட்டபூர்வமாக பாதுகாப்பு பெற்றிருக்க வேண்டும் என்பது NACAP திட்டத்தின் அடிப்படை அம்சமாகும். இது, அந்த நிறுவனங்களை தைரியமாகவும், அச்சமின்றியும், திறம்படவும் செயற்பட உதவும். இந்த நோக்கத்தில் NACAP கீழ் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று துணை நோக்குகளின் அடிப்படையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்மொழிகிறது:

**துணை நோக்கம் 1:** 2023 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க ஊழல் தடுப்புச் சட்டத்தின்படி, இலக்கு சார்ந்த பயிற்சி, வள ஒதுக்கீடு மற்றும் சிறப்புப் பிரிவுகளை உருவாக்குதல் மூலம் ஊழலுக்கு எதிரான அதன் செயற்பாட்டை மேம்படுத்துவதன் ஊடாக CIABOC இன் திறன்களையும் செயற்திறனையும் மேம்படுத்துதல்.

**துணை நோக்கம் 2:** ஊழலை கண்டறிதல், விசாரணை மற்றும் ஊழலை தடுக்கும் திறன்களை மேம்படுத்த ஏனைய சட்ட அமுலாக்க நிறுவனங்கள் மற்றும் ஒழுங்குமுறை அமைப்புகளை வலுப்படுத்தல்.

**துணை நோக்கம் 3:** ஊழலுக்கு எதிரான நடவடிக்கையில் சட்ட அமுலாக்க மற்றும் ஒழுங்குமுறை நிறுவனங்களிடையே ஒத்துழைப்பு மற்றும் தகவல் பகிர்வை வளர்ப்பதற்கு நிறுவனங்களுக்கு இடையிலான உறவுகளை வலுப்படுத்துதல்.

CIABOC மற்றும் பிற சட்ட அமுலாக்க நிறுவனங்களை வலுப்படுத்துவது ஊழலை எதிர்க்கும் போராட்டத்தில் ஒரு முக்கியமான தளமாக இருக்கின்றது. எனவே, விசாரணை திறனை மேம்படுத்தல், சுயாதீனத்தை உறுதி செய்தல், வழக்கு தொடர்வதை மேம்படுத்தல் மற்றும் மக்கள் நம்பிக்கையை உருவாக்குதல் ஆகியவை ஊழலை தடுப்பதிலும், அதற்கு எதிர்வினையாற்றுவதிலும் முக்கிய பங்கு வகிக்கின்றன.

| மூலோபாய நோக்கம்: ஊழலை திறம்பட எதிர்த்துப் போராட CIABOC மற்றும் பிற சட்ட அமுலாக்க நிறுவனங்களின் நிறுவன திறனை மேம்படுத்துதல். | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| துணை நோக்கம் 1: 2023 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின்படி, இலக்கு பயிற்சி, வள ஒதுக்கீடு மற்றும் சிறப்புப் பிரிவுகளை உருவாக்குதல் மூலம் ஊழலுக்கு எதிரான அதன் பதிலை மேம்படுத்த CIABOC இன் திறன்களையும் செயற்திறனையும் மேம்படுத்துதல். | | | | | | | |
| இல. | அளவீடு/ செயல் | முக்கிய செயல்திறன் குறிகாட்டிகள் (KPIகள்) | கால அளவு | | | பொறுப்பான (முன்னணி) நிறுவனம் | செயல்படுத்தும் நிறுவனங்கள் |
| | | | S | M | L | | |
| 1 | பிராந்திய இருப்பு மூலம் உள்ளூர் ஊழல் பிரச்சினைகளுக்கு அணுகல் மற்றும் பதிலளிக்கும் தன்மையை மேம்படுத்த CIABOC க்கான ஒரு பரவலாக்க திட்டமுறையை உருவாக்குதல். | 1. பரவலாக்க திட்டமுறை வகுக்கப்பட்டது.<br>2. பங்குதாரர் ஆலோசனைகள் நடத்தப்பட்டன.<br>3. அதிகாரப் பரவலாக்க திட்டமுறை உறுதி செய்யப்பட்டது.<br>4. பிராந்திய அலுவலகங்கள் நிறுவப்பட்டு செயல்படத் தொடங்கின.<br>5. அணுகல் மற்றும் பிற மொழித்திறன் குறித்த பயனர் திருப்தி கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. | S | | | CIABOC | CIABOC |
| 2 | CIABOC இன் செயல்பாட்டு செயற்திறனை வலுப்படுத்தவும், ஊழலை திறம்பட நிவர்த்தி செய்வதற்கான அதன் திறனை மேம்படுத்தவும் ஒரு வலுவான நிறுவன மூலோபாய திட்டத்தை உருவாக்கி செயற்படுத்தல். | 1. நிறுவன மூலோபாயத் திட்டம் உருவாக்கப்பட்டது.<br>2. முதல் வருடத்திற்குள் முடிக்கப்பட்ட விசாரணைகள் மற்றும் வழக்குத் தொடர்தல்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு. | S | | | CIABOC | CIABOC |
| 3 | CIABOC இன் தொழில்நுட்ப திறனை மேம்படுத்துவதற்காக பயிற்சி தேவைகள் மதிப்பீட்டை நடத்தி வருடாந்த பயிற்சி திட்டமுறையை உருவாக்குதல். | 1. பயிற்சி தேவைகள் பற்றிய மதிப்பீடு நடத்தப்பட்டது.<br>2. வருடாந்த பயிற்சி திட்டமுறை உருவாக்கப்பட்டது.<br>3. குறைந்தபட்சம் 90% பயிற்சி திட்டங்கள் நடத்தப்பட்டன. | S-L | | | CIABOC | CIABOC |
| 4 | CIABOC அதிகாரிகளின் பல்வேறு பிரிவுகளுக்கு தரப்படுத்தப்பட்ட பயிற்சி தொகுதிகளை உருவாக்கி செயல்படுத்துதல், அவை தொடர்ந்து புதுப்பிக்கப்படுவதை உறுதி செய்தல். | 1. மேம்படுத்தப்பட்ட பயிற்சி தொகுதிகள் உருவாக்கப்பட்டன.<br>2. கிரமமமான புதிப்பிப்பு | S | | | CIABOC | CIABOC |
| 5 | வழக்குகளைக் கையாள்வதில் அவர்களின் திறன்களையும் செயற்திறனையும் மேம்படுத்துவதற்காக வழக்கறிஞர்களுக்கு அவ்வப்போது சிறப்புப் பயிற்சி அமர்வுகளை நடத்துதல். | 1. நடத்தப்பட்ட பயிற்சி அமர்வுகளின் எண்ணிக்கை<br>2. பயிற்சி பங்கேற்பு விகிதம் குறைந்தது 90% ஆகும்.<br>3. பயிற்சி நிறைவு விகிதம் குறைந்தது 95% ஆகும்.<br>4. பயிற்சிக்குப் பிந்தைய அறிவு மதிப்பீடு, அறிவுத் தக்கவைப்பு மற்றும் செயல்பாட்டு மற்றும் பொருள் சார்ந்த அம்சங்களைப் புரிந்துகொள்வதற்கு சராசரியாக 80% ஆகும். | S-L | | | CIABOC | CIABOC |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6 | சிறப்பு மற்றும் பிற புலனாய்வு நுட்பங்கள் மற்றும் உபகரணங்களைப் பயன்படுத்துவது குறித்து CIABOC புலனாய்வாளர்களுக்கு இலக்கு பயிற்சி அளிக்கவும். | 1. நடத்தப்பட்ட பயிற்சி அமர்வுகளின் எண்ணிக்கை<br>2. பயிற்சி பங்கேற்பு விகிதம் குறைந்தது 90% ஆகும்.<br>3. பயிற்சி நிறைவு விகிதம் குறைந்தது 95% ஆகும்.<br>4. செயல்பாட்டு மற்றும் பொருள் சார்ந்த அம்சங்களைப் புரிந்துகொள்வதற்கு சராசரியாக 80% ஆகும். | S | CIABOC | CIABOC |
| 7 | விசாரணைக்காக PEP-களுக்கு எதிரான சிக்கலான வழக்குகளின் சிக்கலான தன்மை மற்றும் பொது விவரத்தை தீர்மானிப்பதற்கான அளவுகோல்களை அடையாளம் காணவும், CIABOC-க்குள் உள்ள சிறப்பு குழுக்களுக்கு இந்த வழக்குகளை உடனடியாக ஒதுக்குவதை உறுதி செய்வதற்கான ஒரு அமைப்பை உருவாக்குதல் | 1. அளவுகோல்களை இறுதி செய்யுங்கள்<br>2. வருடத்திற்குள் கோப்பு ஒதுக்கீட்டு செயல்திறனில் 50% முன்னேற்றம்.<br>3. வழக்கு விளைவுகளின் தரமான மற்றும் அளவு மதிப்பீடு | S | CIABOC | CIABOC |
| 8 | முறைப்பாடுகளைக் கையாள்வதற்கான SOPகளை உருவாக்கி செயற்படுத்தல். | 1. SOPகள் உருவாக்கப்பட்டன.<br>2. முறைப்பாடுகளைக் கையாளும் ஊழியர்களுக்கான பயிற்சி நடத்தப்பட்டது.<br>3. முறைப்பாடுகளைக் கையாள்வதன் செயல்திறனை மதிப்பிடுவதற்கான வருடாந்த மதிப்பாய்வு. | S | CIABOC | CIABOC |
| 9 | CIABOC-க்கான மாற்றுத்திறனாளிகளை உள்ளடக்கிய உட்கட்டமைப்பு மற்றும் மென்பொருள் மேம்பாட்டுத் திட்டத்திற்கான ஒப்புதலைப் பெறுதல், அதில் அதன் வசதிகளுக்கான புதுப்பித்தல் மற்றும் உபகரணங்கள் மேம்படுத்தல்கள், தேவையான கண்காணிப்பு மற்றும் பகுப்பாய்வு உபகரணங்களை வாங்குவது உட்பட அடங்கும். | 1. திட்டம் உருவாக்கப்பட்டது.<br>2. பாதுமான பாதீடு ஒதுக்கப்பட்டுள்ளது.<br>3. அடையாளம் காணப்பட்ட புதுப்பித்தல்கள் மற்றும் மேம்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.<br>4. பயனர் திருப்தி மதிப்பீட்டில் 75% அடையப்பட்டது. | S | CIABOC | CIABOC |
| 10 | CIABOC-க்குள் உள் விவகாரப் பிரிவு, மனிதவளப் பிரிவு, சாட்சி மற்றும் பாதிக்கப்பட்டவர் பாதுகாப்புப் பிரிவு, புலனாய்வுப் பிரிவு, டிஜிட்டல் தடயவியல் புலனாய்வுப் பிரிவு, ஆராய்ச்சி மற்றும் கொள்கை திட்டமிடல், பயிற்சிப் பிரிவு, சர்வதேசப் பிரிவு, ஊடகப் பிரிவு உள்ளிட்ட மேலதிக பிரிவுகளை நிறுவுதல். | 1. அனைத்து அலகுகளும் நிறுவப்பட்டன.<br>2. புதிய பிரிவுகளில் பணியாளர்களுக்கு 100% பயிற்சி அளிக்கப்பட்டது. | S-M | CIABOC | CIABOC |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 11 | பாதிக்கப்பட்டவர்கள், சாட்சிகள் மற்றும் தகவல் தெரிவிப்பவர்களுக்கு உதவி மற்றும் பாதுகாப்பு தொடர்பான விடயங்களைக் கையாள CIABOC க்குள் ஒரு தனிப் பிரிவை நிறுவுதல்:<br><br>i CIABOC இன் ஒட்டுமொத்த இலக்குகளுடன் இணக்கத்தை உறுதி செய்வதற்கும், அதன் செயல்பாடுகளை வழிநடத்துவதற்கும் ஒரு விரிவான நிறுவன செயற்திட்டத்தை வகுத்தல்.<br>ii பாதிக்கப்பட்டவர்கள், சாட்சிகள் மற்றும் தகவல் தெரிவிப்பவர்களுக்கான உதவி மற்றும் பாதுகாப்பு தொடர்பான பிரிவின் ஆணை, செயல்பாடுகள் மற்றும் பொறுப்புகளை வரையறுத்து, பிரிவுடன் தொடர்புடைய ஆதரவு சேவைகள், பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் தகவல் தொடர்பு நெறிமுறைகளை தெளிவாக வகுத்தல்.<br>iii பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவு, சட்டப் பாதுகாப்பு மற்றும் நெருக்கடி மேலாண்மை ஆகியவற்றில் நிபுணத்துவம் பெற்ற அதிகாரிகளை நியமித்து பயிற்சி அளித்தல்.<br>iv பயனுள்ள ஆதரவு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை உறுதி செய்வதற்கான நெறிமுறைகள் மற்றும் வளங்களை உருவாக்குதல்<br>v பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் தகவல் தெரிவிப்பவர்களுக்கான ஆதரவு வலையமைப்புகளை வலுப்படுத்த, அரசு சாரா நிறுவனங்கள், சட்ட உதவி நிறுவனங்கள் மற்றும் சட்ட அமுலாக்கத்துடன் சாத்தியமான கூட்டாண்மைகளை அடையாளம் காணுதல்.<br>vi இந்தப் பிரிவின் மூலம் பாதிக்கப்பட்டவர்கள், சாட்சிகள் மற்றும் தகவல் தெரிவிப்பவர்களுக்குக் கிடைக்கும் சேவைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த, வெளிநடவடிக்கை திட்டங்களைச் செயற்படுத்தல். | 1. அந்த அலகு நிறுவப்பட்டு செயல்பட்டது.<br>2. புதிய பிரிவில் உள்ள ஊழியர்களுக்கு 100% பயிற்சி அளிக்கப்பட்டது.<br>3. பொது விழிப்புணர்வு பிரச்சாரம் தொடங்கப்பட்டது. | S | CIABOC | CIABOC |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 12 | தரவு சார்ந்து முடிவெடுப்பதை ஆதரிப்பதற்கும் புலனாய்வு செயற்திறனை மேம்படுத்துவதற்கும் ஒரு செயற்பாட்டு பகுப்பாய்வு பிரிவை நிறுவுதல். | 1. அந்த அலகு நிறுவப்பட்டு செயல்பட்டது.<br>2. புதிய பிரிவில் உள்ள ஊழியர்களுக்கு 100% பயிற்சி அளிக்கப்பட்டது.<br>3. தரவு ஒருங்கிணைப்பு முடிந்தது.<br>4. விசாரணை முடிவுகளில் குறைந்தது 75% தாக்கம். | S-M | CIABOC | CIABOC |
| 13 | பொது அதிகாரிகளிடையே பொறுப்புணர்வை மேம்படுத்த சொத்துக்கள், பொறுப்புகள் மற்றும் நலன்கள் அறிவிப்பு அலுவ-லகத்தை செயற்படுத்துதல். | 1. அலுவலகம் நிறுவப்பட்டு செயல்பட்டது.<br>2. புதிய அலுவலகத்தில் பணியாளர்களுக்கு 100% பயிற்சி அளிக்கப்பட்டது.<br>3. அறிவிப்புகளைச் சமர்ப்பிப்பதற்கான 100% இணக்க விகிதம். | S-M | CIABOC | CIABOC |
| 14 | ஊழல் வழக்குகள் தொடர்பான சட்ட நடைமுறைகளை நெறிப்படுத்த தெளிவான வழக்குத் தொடுப்பு வழிகாட்டுதல்களை நிறுவுதல். | 1. வழிகாட்டுதல்கள் உருவாக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டன.<br>2. வழக்கறிஞர்களுக்கு 100% பயிற்சி அளிக்கப்பட்டது. | S | CIABOC | CIABOC |
| 15 | CIABOC-க்கான நடத்தை விதிகளை உருவாக்கி அறிமுகப்படுத்துதல். | 1. பணிக்குழு நியமிக்கப்பட்டது.<br>2. ஆரம்ப வரைவு முடிந்தது.<br>3. பங்குதாரர் ஆலோசனைகள் நடத்தப்பட்டன.<br>4. நடத்தை விதிகள் இறுதி செய்யப்பட்டன. | S | CIABOC | CIABOC |
| 16 | பணியாளர்கள் மற்றும் செயல்பாட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய CIABOC-க்கான விரிவான மனிதவளக் கொள்கையை உருவாக்குங்கள். | 1. மனிதவளக் கொள்கை உருவாக்கப்பட்டது.<br>2. பயிற்சி மற்றும் மேம்பாட்டு முயற்சிகளில் குறைந்தது 80% நடத்தப்பட்டன. | S | CIABOC | CIABOC |
| 17 | ஆணைக்குழுவின் செயற்பாடுகளை ஆதரிப்பதற்காக CIABOC நிதியை நிறுவி செயல்படுத்துதல். | 1. நிதி நிறுவப்பட்டது.<br>2. கணக்காளர்களுக்கான பயிற்சி 100% நடத்தப்பட்டது.<br>3. ஒரு வருடத்திற்குப் பிறகு நடத்தப்பட்ட நிதி பயன்பாட்டின் தாக்க மதிப்பீடு. | S | CIABOC | CIABOC |
| 18 | ஊழல் தொடர்பான முறைப்பாடுகளை 3 அதிகாரப்பூர்வ மொழிகளிலும் சமர்ப்பிக்கவும், பொதுமக்களின் ஈடுபாட்டை மேம்படுத்தவும், அறிக்கையிடவும் உதவும் மாற்றுத்திறனாளிகளுக்கு ஏற்ற கையடக்கத் தொலைபேசி செயலியை அறிமுகப்படுத்துதல். | 1. மொபைல் செயலி உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டது.<br>2. செயலி மூலம் சமர்ப்பிக்கப்படும் முறைப்பாடுகளின் விகிதத்தில் அதிகரிப்பு.<br>3. குறைந்தபட்சம் 75% பயனாளர் திருப்தி விகிதம். | S | CIABOC | CIABOC |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 19 | ஊழலுக்கு எதிரான முயற்சிகளில் சிவில் சமூக அமைப்புகளுடன் ஒத்துழைப்பை மேம்படுத்த ஒரு சிவில் சமூக மற்றும் தனியார் துறை மைய புள்ளியை நியமித்தல். | 1. மையப்புள்ளி நியமிக்கப்பட்டது.<br>2. ஒத்துழைப்புகளின் தாக்கம் அளவிடப்படுகிறது. | S | CIABOC | CIABOC |
| 20 | ஒருங்கிணைந்த விசாரணைகள் மற்றும் பங்குதாரர்களிடையே தகவல்களை உறுதிப்படுத்துவதை எளிதாக்குவதற்கான ஒரு பொறிமுறையை உருவாக்குதல். | 1. பொறிமுறை உருவாக்கப்பட்டது.<br>2. பங்குதாரர் பங்கேற்பு விகிதத்தில் குறைந்தது 70%.<br>3. ஒருங்கிணைந்த விசாரணைகளின் எண்ணிக்கை. | S | CIABOC | CIABOC |
| 21 | CIABOC இன் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை செயல்படுத்துவதை மேம்படுத்துதல் மற்றும் பொதுமக்களுக்குத் தொடர்புடைய தகவல்களை முன்கூட்டியே வெளியிடுவதை உறுதி செய்தல். | 1. குறைந்தபட்சம் 75% முன்கூட்டியே வெளிப்படுத்தல் விகிதம் அடையப்பட்டுள்ளது.<br>2. குறைந்தது 80% பயனர் திருப்தி விகிதம் அடையப்பட்டுள்ளது. | S | CIABOC | CIABOC |
| **துணை நோக்கம் 2: ஊழலைக் கண்டறிதல், விசாரணை செய்தல் மற்றும் தடுப்பதற்கான திறனை மேம்படுத்த மற்ற சட்ட அமுலாக்க நிறுவனங்கள் மற்றும் ஒழுங்குமுறை அமைப்புகளை வலுப்படுத்துதல்.** | | | | | |
| 1 | நாடாளுமன்ற மேற்பார்வைக் குழுக்களின் செயல்பாடுகளில் நெறிமுறை தரநிலைகள் மற்றும் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்வதற்காக, குறிப்பாக அவற்றை நிர்வகிக்கும் வழிகாட்டுதல்களை நிறுவுதல். | 1. வழிகாட்டுதல்கள் உருவாக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டன.<br>2. வழிகாட்டுதல்கள் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு 100% பயிற்சி அளிக்கப்பட்டது. | S | பாராளுமன்றம் | பாராளுமன்றம் |
| 2 | சமீபத்திய சர்வதேச மற்றும் தேசிய ஊழல் எதிர்ப்புச் சட்டங்கள், நடைமுறைகள் மற்றும் போக்குகள் குறித்த அவர்களின் அறிவைப் புதுப்பிக்க, தொடர்புடைய வழக்குகளைக் கையாளும் திறனை மேம்படுத்த, சட்டமா அதிபர் திணைக்கள வழக்கறிஞர்களுக்கு அறிமுக மற்றும் அவ்வப்போது புதுப்பித்தல் பயிற்சி அமர்வுகளை செயல்படுத்துதல். | 1. நடத்தப்பட்ட பயிற்சி அமர்வுகளின் எண்ணிக்கை<br>2. பயிற்சி பங்கேற்பு விகிதம் குறைந்தது 90% ஆகும்.<br>3. பயிற்சி நிறைவு விகிதம் குறைந்தது 95% ஆகும்.<br>4. பயிற்சிக்குப் பிந்தைய அறிவு மதிப்பீடு, அறிவுத் தக்கவைப்பு மற்றும் செயல்பாட்டு மற்றும் பொருள் சார்ந்த அம்சங்களைப் புரிந்துகொள்வதற்கு சராசரியாக 80ூ ஆகும். | இலங்கை | சட்டமா அதிபர் திணைக்களம் | சட்டமா அதிபர் திணைக்களம் |
| 3 | முக்கிய வருவாய் துறைகளுக்கு, குறிப்பாக சுங்கம், மதுவரி மற்றும் உள்நாட்டு வருவாய் திணைக்களங்களுக்கு விரிவான ஊழல் எதிர்ப்பு பயிற்சி அமர்வுகளை நடத்துதல். | 1. நடத்தப்பட்ட பயிற்சி அமர்வுகளின் எண்ணிக்கை<br>2. பயிற்சி பங்கேற்பு விகிதம் குறைந்தது 90% ஆகும்.<br>3. பயிற்சி நிறைவு விகிதம் குறைந்தது 95% ஆகும்.<br>4. பயிற்சிக்குப் பிந்தைய அறிவு மதிப்பீடு, அறிவுத் தக்கவைப்பு மற்றும் செயல்பாட்டு மற்றும் பொருள் சார்ந்த அம்சங்களைப் புரிந்துகொள்வதற்கு சராசரியாக 80% ஆகும். | S-M | CIABOC | CIABOC |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4 | சந்தேகத்திற்கிடமான நிதி பரிவர்த்தனைகள், இறுதி நன்மை பயக்கும் உரிமையாளர்கள் மற்றும் PEP ஆகியவற்றை அடையாளம் காண்பது குறித்து நிதி நிறுவனங்கள் (FIs), நியமிக்கப்பட்ட நிதி சாராத வணிகங்கள் மற்றும் தொழில்கள் (DNFBs) மற்றும் காப்பீட்டாளர்களுக்கு பயிற்சி அளித்தல். | 1. நடத்தப்பட்ட பயிற்சி அமர்வுகளின் எண்ணிக்கை<br>2. பயிற்சி பங்கேற்பு விகிதம் குறைந்தது 90% ஆகும்.<br>3. பயிற்சி நிறைவு விகிதம் குறைந்தது 95% ஆகும்.<br>4. பயிற்சிக்குப் பிந்தைய அறிவு மதிப்பீடு, அறிவுத் தக்கவைப்பு மற்றும் செயல்பாட்டு மற்றும் பொருள் சார்ந்த அம்சங்களைப் புரிந்துகொள்வதற்கு சராசரியாக 80% ஆகும். | S-M | FIU | FIU<br><br>CIABOC |
| 5 | நிதிக் குற்றங்களைக் கண்டறிந்து தடுக்கும் திறனை வலுப்படுத்த, பத்திரத் துறைக்கு பணமோசடி தடுப்பு (AML) பயிற்சியை மேம்படுத்துதல். | 1. நடத்தப்பட்ட பயிற்சி அமர்வுகளின் எண்ணிக்கை<br>2. பயிற்சி பங்கேற்பு விகிதம் குறைந்தது 90% ஆகும்.<br>3. பயிற்சி நிறைவு விகிதம் குறைந்தது 95% ஆகும்.<br>4. பயிற்சிக்குப் பிந்தைய அறிவு மதிப்பீடு, அறிவுத் தக்கவைப்பு மற்றும் செயல்பாட்டு மற்றும் பொருள் சார்ந்த அம்சங்களைப் புரிந்துகொள்வதற்கு சராசரியாக 80% ஆகும். | S-M | FIU | FIU<br><br>CIABOC |
| 6 | நிதி பரிவர்த்தனைகளை கண்காணிப்பதன் செயல்திறனை மேம்படுத்த AML கண்காணிப்புக்கான தானியங்கி அமைப்புகளை செயல்படுத்துதல் . | 1. தானியங்கி அமைப்பு உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டது.<br>2. பரிவர்த்தனை கண்காணிப்பு செயல்திறனில் குறைந்தது 75% முன்னேற்றம்.<br>3. சந்தேகத்திற்கிடமான செயல்பாடு கண்டறிதல் விகிதத்தில் குறைந்தது 75%. | S | FIU | FIU |
| 7 | AML மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பதை எதிர்த்தல் (CFT) தொடர்பான புலனாய்வு உத்தியோகத்தர்கள், வழக்கறிஞர்கள், நீதித்துறை மற்றும் நிதி புலனாய்வுப் பிரிவு (FIU) ஆகியவற்றின் திறனை இலக்கு வைக்கப்பட்ட காலமுறை பயிற்சி மூலம் வலுப்படுத்துதல். | 1. நடத்தப்பட்ட பயிற்சி அமர்வுகளின் எண்ணிக்கை<br>2. பயிற்சி பங்கேற்பு விகிதம் குறைந்தது 90% ஆகும்.<br>3. பயிற்சி நிறைவு விகிதம் குறைந்தது 95% ஆகும்.<br>4. பயிற்சிக்குப் பிந்தைய அறிவு மதிப்பீடு, அறிவுத் தக்கவைப்பு மற்றும் செயல்பாட்டு மற்றும் உள்ளடக்க அம்சங்களைப் புரிந்துகொள்வதற்கு சராசரியாக 80% ஆகும். | S-L | CIABOC | FIU<br>சட்டமா அதிபர் திணைக்களம்<br>CIABOC<br>நீதிச் சேவைகள் ஆணைக்குழு<br>நீதிபதிகள் நிறுவனம் |
| 8 | இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் கீழ் நிதி மற்றும் குற்றவியல் விசாரணை அதிகாரிகளுக்கு ஊழலைக் கண்டறிந்து விசாரணை செய்வதில் அவர்களின் திறன்களை மேம்படுத்துவதற்காக சிறப்பு பயிற்சி அமர்வுகளை எளிதாக்குதல். | 1. நடத்தப்பட்ட பயிற்சி அமர்வுகளின் எண்ணிக்கை<br>2. பயிற்சி பங்கேற்பு விகிதம் குறைந்தது 90% ஆகும்.<br>3. பயிற்சி நிறைவு விகிதம் குறைந்தது 95% ஆகும்.<br>4. பயிற்சிக்குப் பிந்தைய அறிவு மதிப்பீடு, அறிவுத் தக்கவைப்பு மற்றும் செயல்பாட்டு மற்றும் பொருள் சார்ந்த அம்சங்களைப் புரிந்துகொள்வதற்கு சராசரியாக 80மூ ஆகும். | S-M | இலங்கை பொலிஸ் | இலங்கை பொலிஸ் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 9 | மேற்பார்வை மற்றும் பொறுப்புணர்வை மேம்படுத்துவதற்காக பொது கொள்முதல் செயல்முறைகள் மீதான விசாரணை அதிகாரியாக தேசிய கொள்முதல் ஆணையத்தை (NPC) நியமித்தல். | 1. NPC நியமிக்கப்பட்டது.<br>2. விசாரணைகள் தொடர்பாக NPC ஊழியர்களுக்கான பயிற்சி 100% நிறைவடைந்துள்ளது.<br>3. நடத்தப்பட்ட விசாரணைகளின் எண்ணிக்கை.<br>4. நடத்தப்பட்ட விசாரணைகளின் கண்டுபிடிப்புகள் மற்றும் முடிவுகள் குறித்த பொது அறிக்கைகளின் எண்ணிக்கை | S-M | ஜனாதிபதி செயலகம் | தேசிய கொள்முதல் ஆணைக்குழு |
